1979 அக்டோபர் 29]

(ஈ) கட்டிடங்கள் (குத்தகை வாடகைக் கட்டுப்பாடு) திருத்தச் சட்ட முன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, ''தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு கட்டிடங்கள் (குத்தகை-வாடகைக் கட்டுப் பாடு) திருத்த சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இச்சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

3. அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்— விவாதம்—(தொடர்ச்சி).

*டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு மீது மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும், மற்றும் உள்ள எதிர்க்கட்சியினர் பலரும் கொண்டு வந்திருக்கக்கூடிய கண்டனத் தீர்மானத்தை எதிர்த்து அரசின் கொள்கைகளை விளக்கி ஆட்சிக் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல முன் வருகிறேன்.

பேராசிரியர் அவர்கள் பேசுகின்றபொழுது அதிலே மிகத் தெளிவான அரசியல் கொள்கை விளக்கம் இல்லை என்பதும், அதேநேரத்திலே நல்ல அருமையான திறமையைப் பயன்படுத்தி தனித் தமிழிலே நல்லதொரு விரிவுரையாகவே எடுத்துவைத்தார் என்பதும் நமக்குத் தெரிகிறது. அதை நான் அவர்களுடைய மாணவனாக இருந்து இந்த அவையில் கேட்டுக்கொண்டிருந்தேன். மொத்தத்தில் அந்த உரையைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், காகிதப் பூ மணக்காது, திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை இனிக்காது என்ற நிலையிலேதான் அதனுடைய முழு வடிவம் இருந்தது என்று நான் கருதுகிறேன்.

ஆனால் அதே நேரத்திலே, பேராசிரியர் அவர்கள் பேசுகின்றபொழுது சில நேரங்களில் சில உண்மைகளைச் சொல்லி விடுவதும் உண்டு. அந்த வகையில் அவர்கள் இரண்டு உண்மைகளைப் பேசினார்கள். அதாவது, அரசு நடத்துவது என்பது

[டாக்டர் கே. சமரசம்] [1979 அக்டோபர் 29

சாதாரண காரியம் அல்ல என்பதையும், பஞ்சாயத்துக் கமிட்டிகள், நிலவள வங்கிகள், அறநிலையங்கள் ஆகிய இவை போன்றவற்றில் மக்கள் பிரதிநிதிகள் தேவை என்பதையும் சொல்லியிருக்கிறார்கள். நிச்சயமாக இவை பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றுதான்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை]

அவர்கள் பலப்பல கருத்துக்களைக் கூறிக்கொண்டு வருகின்ற நேரத்தில் பலப்பல கொள்கைகளைப் பற்றிச் சொல்லும்பொழுது, குற்றச்சாட்டுக்கள் என்ற முறையிலே இந்த அரசின்மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வரும்பொழுது சிலவற்றை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்ன கருத்திலே ஒன்று, அரசு சொன்ன கருத்துக்களை மாற்றிக் கொள்கின்ற கொள்கை உடையதாக இருக்கின்றது என்பதாகும். முதலமைச்சர் தான் சொன்ன கருத்துக்களை மாற்றிக்கொள்ளுகின்ற கொள்கையை உடையவராக இருக்கிறார் என்ற குற்றச்சாட்டைச் சொன்னார்கள். அதற்கு என்னுடைய விளக்கத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

உண்மையிலேயே காலங்கள் மாறுகின்றபொழுது பல கருத்துக்களை அனைவரும் மாற்றிக்கொண்டு இருக்கிறோம் என்பதற்கு ஏராளமான வரலாற்றுச் சான்றுகள் நம்மிடத்தில் இருக்கின்றன. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டும் என்றால், நாம் பின்பற்றக்கூடிய தந்தை பெரியார் அவர்கள் காங்கிரஸ் இயக்கத்திலே இருந்தார்கள். ஆனால் அவர்கள் தங்கள் கொள்கைகளை அங்கு நிறைவேற்ற முடியாது என்ற காரணத்தினால் அதிலிருந்து விலகி நீதிக்கட்சி என்றும், திராவிடர் கழகம் என்று மாற்றிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

[முற்பகல் 10-10]

அது மட்டும் அல்ல. ''திராவிட நாடு திராவிடருக்கே'' என்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையைக் கூட பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கால கட்டத்தில் தேவையில்லை என்று கைவிட்டுவிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் எந்த இலட்சியத்திற்காக உருவாக்கப்பட்டதோ அந்த இலட்சியம் சரியாக நிறைவேற்றப்பட முடியவில்லை அல்லது முழுமையாக நிறைவேற்றப்படவில்லை என்ற காரணத்தால்தான் வணக்கத்திற்குரிய புரட்சித் தலைவர் அவர்கள் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை உருவாக்கினார்கள். திராவிட நாடு என்றழைக்கப்படும் 4 மாநிலங்களில் மட்டும் அல்லாமல் நமது கொள்கை இந்திய துணைக் கண்டம் முழுவதும் பரவ வேண்டும், அனைத்து மக்களுக்கும் நன்மை பயக்க வேண்டுமென்ற காரணத்தால்தான்

1979 அக்டோபர் 29] [டாக்டர் கே. சமரசம்]

மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் தமது கட்சியை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயரிட்டு மிகப்பெரிய ஒரு பரிணாம வளர்ச்சிக்குக் கொண்டு சென்றார். இது நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதற்குரிய ஒரு திட்டமே தவிர வேறு எதுவும் இல்லை.

அதே நேரத்தில் டாக்டர் கலைஞர் ஆட்சியிலே இருந்த போது மதுவிலக்குக் கொள்கையை அமல் செய்தார். அவரே அதை இரத்தும் செய்தார். இதனால் எப்படிப்பட்ட மாறுபாடுகள் ஏற்பட்டன என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆட்சியிலே இருப்பவர்கள் சில கட்டங்களில் சில மாறுபாடுகளைச் செய்ய வேண்டிய கட்டாயத்திலே வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும்.

நாம் சொல்வோம் ஆணும் பெண்ணும் சேர்ந்ததே இல் வாழ்க்கை. ஆனால் இது உலகப் பொது விதி என்று ஹரியும் ஹரனும் சேர்ந்து ஐயப்பனைப் பெறவில்லையா கேட்டால் அது விதண்டாவாதமாகும். எதிலும் பொது விதியைத் தான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்கள் பேசியபோது ஒரு சில கருத்துக்களைச் சொன்னார்கள். அரசு இயங்குகிறதா ? என்றே சந்தேகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். அரசு இயங்குவதால்தான் பேராசிரியர் கேள்வி கேட்கிறார். நாங்கள் பதில் சொல்ல வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஆட்சியாளர்கள் கடமையை ஆற்றவில்லை, கோப்புகள் நகர்வதில்லை என்று சொன்னார்கள். இந்த ஆட்சியிலே மாவட்ட ஆட்சித் தலைவர்கள் சோர்ந்து போய் இருக்கிறார்கள், எதுவுமே செய்வதில்லை என்றெல்லாம் குற்றம் சாட்டினார்கள். என்னைப் பொறுத்த வரையில் தர்மபுரி மாவட்டத்தை உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால், அதனுடைய ஆட்சித் தலைவராக ஒருவர், ஏன் பெயரையே கூட நான் குறிப்பிட விரும்புகிறேன். திரு. சிவசுப்பிரமணியன் என்பவர் மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த கடந்த 1½ ஆண்டு காலத்தில் பலவிதமான முன்னேற்றத் திட்டங்களை நிறைவேற்றி இருக்கிறார்கள்.

பஞ்சப்பள்ளி அணையிலிருந்து கால்வாயை வெட்டி. அங்குள்ள மக்களுக்கு பாசன வசதியைப் பெருக்கியிருக்கிறார்கள். நீண்ட கால நிலுவைத் திட்டம் நிறைவேற்றப்பெற்றது.

மைய, மாநில அரசுகளிடையே பல ஆண்டுகாலமாக தீர்க்கப் படாமல் இருந்து வந்த சாலைப் பிரச்சனையைத் தீர்த்து தர்மபுரி பகுதிக்கு தண்ணீர் வருவதற்கு ஏற்பாடு செய்தார்கள்.

[டாக்டர் கே. சமரசம்] [1979 அக்டோபர் 29

அடுத்தபடியாக சமூக நலத்திட்டம் என்று எடுத்துக் கொண்டால், அவர்கள் தர்மபுரி மாவட்ட வளர்ச்சி மன்றக் குழுவின் ஆலோசனைகளை, அறிவுரை எடுத்துக் கொண்டு அவற்றை மாநில அரசுக்குத் தெரிவித்த காரணத்தால் அரசு கொடுத்த ரூ. 25 இலட்சத்தில் ஏறக்குறைய ரூ. 11 இலட்சத்தை எங்கள் மாவட்டத்திற்கே பெற்றுத் தந்திருக்கிறார்கள்.

அடுத்து, பால் பெருக்குத் திட்டம், பட்டுத் தொழில் அபிவிருத்தி, புதிய பல அணைத் திட்டங்கள், மத்திய கூட்டுறவு வங்கியின் மக்கள் தொடர்புத் திட்டம், வறட்சி மீட்புப் பணித் திட்டம், போக்குவரத்துத் துறையிலே ஒரே ஆண்டில் ஒரே நேரத்தில் 75 வழித் தடங்களைப் பெற்றல், முதலியவற்றையும்; கல்வி என்று எடுத்துக் கொண்டால் ஒரு பாலிடெக்னிக் ஏற்படுத்தியிருக்கிறார். அங்கே ஒரு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலகம் ஏற்படவும், அங்குள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளி 10 பிளஸ் 2 எனும் கிராமக் கல்லூரிகள் ஏற்படவும் வழி செய்தார்.

மருத்துவத்துறையைப் பொறுத்த வரையில் இராயக் கோட்டை, காவேரிப்பட்டணம், அரூர் ஆகிய பகுதிகளில் விரிவுபடுத்துவதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள்.

மாவட்டத் தொழில் மையங்களை ஏற்படுத்துதல், மக்களின் நன்மைக்காக ஆடு, கோழி, மாடு வளர்ப்புக்கு உதவி செய்தல், வீடு கட்டும் திட்டத்தை விரைந்து நிறைவேற்றுதல் மேலும் மக்களின் நன்மைக்காக மக்கள் தொடர்புக் கூட்டங்களைக் கூட்டி, அரசு அலுவலர்களின் ஆலோசனைக் கூட்டங்களையும் கூட்டினார். இப்படி கடந்த 30 ஆண்டுகளில் எந்த ஒரு அரசின் காலத்திலும் செய்யப்படாத அளவிற்கு மாவட்ட முன்னேற்ற முயற்சிகளை கடந்த 1½ ஆண்டு காலத்திலே எங்கள் தர்மபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் செய்திருக்கிறார்.

ஆனால், இப்படி இருக்கிறபோது முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போல், இந்தக் கருத்தை மறைப்பது நல்லதல்ல என்பது என்னுடைய கருத்தாகும்.

இன்னொரு கருத்தையும் அதே நேரத்தில் பேராசிரியர் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். பிற்பட்டோர் நலன் பாதுகாக்கப்படவில்லை. இப்போதுள்ள பிற்பட்டோர் நலச் சட்டத்தின் காரணமாக ஏராளமான அளவிற்குச் சில விஷயங்கள் இருப்பதாகவும், ஜனதா கட்சியைச் சார்ந்த திருமதி ரமணி பாய் அவர்கள் சொன்ன கருத்தையும் இங்கே மேற்கோள் காட்டினார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், ஏற்கனவே ஒரு நீதி வகுக்கப்பட்டு இருக்கிறது. '' இட்டார் பெரியோர், இடாதார் இழி ன தோர், பட்டாங்கில் உள்ளபடி '' என்றே

1979 அக்டோபர் 29] [டாக்டர் கே. சமரசம்]

கோடிட்டுக் காட்டியுள்ளனர். பொருளாதாரத் துறையில் எல்லாரும் சமம் என்ற கொள்கையை நாம் கொண்டு இருக்கிறோம். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் எல்லோரையும் பிற்படுத்தப்பட்ட வகுப்பில் சேர்த்து வைத்து விட்டார்கள். வேண்டியவர்கள் அனைவருக்கும் உதவி செய்வதற்காக அப்படிச் செய்தார்கள். ஆனால் பிற்பட்டோர் பட்டியலில் எத்தனை பேர்களைச் சேர்த்தார்களோ, அந்த அளவிற்கு இடங்களை ஒதுக்கினார்களா? அதற்கு அவர்கள் ஒதுக்கியத் தொகை எத்தனை சதவிகிதம்? அதை நாம் மறந்து விடக்கூடாது. ஆனால் நாம் அப்படிச் செய்ய விரும்பவில்லை. பிற்பட்ட மக்களுக்கு உரிய சலுகைகள் அளிக்கப்பட வேண்டும், ஜாதிக் கொடுமைகள் வளரக் கூடாது, தடுக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் புதிய பிராமணர், ஆர்ய வைஸ்யர் பிள்ளைகள் என்ற ஜாதி தோன்றாமல் தடுக்க இந்தப் புதிய முறையைக் கொண்டு வந்து இருக்கிறோம். அது மட்டுமல்ல, கல்வி என்றால் தாழ்ந்த ஜாதி, கல்யாணம் என்றால் உயர்ந்த ஜாதி என்று கூறிக்கொண்டு இருக்கும் சமுதாயக் கொடுமைக்கு சாவுமணி அடிக்கவே இந்தப் புதியச் சட்டம் கொண்டுவரப்பட்டு இருக்கிறது.

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இதன் காரணமாக, இந்த அரசின் கொள்கை ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்பது வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது. ஆகவே, பணக்காரர்களின் பல்லிளிப்பில் பகவானைக் காண்போம் என்கிற கொள்கை உடையவர்கள் அல்ல என்பது தாக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் மேலும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். உண்மை செருப்பணிந்து செல்வதற்குள், பொய் உலகை சுற்றி வந்து விடுமாம். அதைப்போல, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்தச் சட்டத்தைப் பற்றி நாம் நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்கள் புரிந்து கொள்வதற்குள் அதைப் பற்றிய மிகப் பெரிய வதந்திகளை பரப்பிய குற்றத்திற்கு எதிர்க்கட்சிக் காரர்கள் காரணமாக இருக்கிறார்கள் என்று என்னால் சொல்ல முடியும்.

ஜனதா கட்சியைச் சேர்ந்த திருமதி ரமணி பாய் அவர்கள் சொன்னார்களாம். ஒரு மகனுக்குச் சம்பளம் குறைவு. இன்னொரு மகனுக்கு சம்பளம் அதிகம். ஆகவே குறைவாக இருக்கிற மகன் பேக்வார்டு என்ற நிலையில் இருக்கிறான். அதிகச் சம்பளம் வாங்கும் இன்னொரு மகன் பார்வர்ட் என்ற நிலையில் இருகிறான். இதனால் என்னுடைய நிலையை ஆக்வார்ட் என்று சொன்னார்களாம். இந்த பேக்வார்ட், பார்வார்ட், என்ற நிலைமை இருப்பதால் தான் ஆக்வார்ட் என்ற நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட்டு இருப்பதால், அதைப்

[டாக்டர் கே. சமரசம்] [1979 அக்டோபர் 29

பற்றி நாம் பேசுவதற்கு 'நோவாரிட்' என்று நான் சொல்லிக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, தமிழ்நாட்டில் சொல்வார்கள். சட்டி வேறானால், சாதி வேறாகும். அண்ணன் தம்பி ஒன்றானாலும், வாயும் வயிறும் வேறுதான். இதுதான் சமுதாய நீதி வகுத்துள்ள சட்டம். அப்படிப்பட்ட நிலை மாறி ஒரு சமநிலையில் அனைவரையும் கொண்டு வரவேண்டும் என்கிற அடிப்படையில்தான் இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது என்பதை நான் திட்டவட்டமாக எடுத்துச் சொல்ல முடியும்.

அதே நேரத்தில், நிலையில்லாத வருமானத்தை வைத்து கணக்கா என்று கேட்கிறார்கள். பேராசிரியர் நிலையில்லாத வருமானம் என்று பேசுவதைப் பார்த்தால் காய்மே இது பொய்யடா, காற்றடைத்த பையடா என்ற காலகட்டத்திற்கு அவர் வந்துவிட்டதை அறிந்து உண்மையிலே வருத்தப்படுகிறேன்.

அடுத்ததாக, தி. மு. க. ஆட்சியில் பட்டா கொடுத்தது தவறு என்று சொல்லிப் பேசலாமா ஒரு முதல்வர் என்று கேட்டார்கள். அதைப் பற்றி குறை கூறலாமா என்று பேராசிரியர் கேட்டார்கள். நான் அவர்களின் கவனத்திற்கு ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காவேரிப்பட்டணம் தொகுதியைச் சார்ந்த முருக்கல்–நத்தம் என்ற பகுதியில் 100-க்கு மேற்பட்ட அரிசன மக்களுக்கு தி. மு. க. ஆட்சியில் பட்டா கொடுத்தார்கள். அந்த நிலப்பட்டா கொடுக்கப்பட்ட விவரம் கெசட்டில் பப்ளிஷ் ஆகி இருக்கிறது. வட்டார, மாவட்ட ஆட்சி அலுவலர்களிடத்திலிருந்தும் அறிவிப்பு வந்து விட்டது. பிரிண்ட் செய்து அதைக் கொடுத்து இருக்கிறார்கள். அப்படி பட்டா பெற்றவர்கள் அங்கே பயிர் செய்யப் போனார்கள். ஏற்கனவே சாகுபடி செய்துக் கொண்டிருந்தவர்கள் தடுத்து விட்டனர். அப்படிப் போனவர்களை வனத்துறையினர் பிடித்து, இது வனத்துறை நிலம் இதனை யாருக்கும் பட்டா செய்து கொடுக்க முடியாது என்று அவர்களை கோர்ட்டில் கொண்டுபோய் நிறுத்தி விட்டார்கள். அந்த 100 பேரும் கோர்ட்டில் அபராதம் கட்டிவிட்டு வந்து இருக்கிறார்கள். இது இன்றும் தொடர்ந்து இருக்கிற நிலைமை. ஆகவே, பட்டா யாருக்குக் கொடுத்தோம் என்ற கணக்கு இருக்கிறது, அதில் தவறு இருக்க முடியாது என்று சொன்னால், அதைப் பற்றிப் பேசக் கூடாதா? நீதிமன்றத்திலே அது அரசு நிலம், வன இலாக்கா நிலம், அது பட்டா வழங்கத் தகுதி அற்றது என்று தீர்ப்பு கூறியிருக்கிறது. அதனால் மீண்டும் இன்னொரு அறிவிப்பு போய் இருக்கிறது. அது அரசு நிலம் பட்டா கொடுக்க முடியாது என்று. இவை அத்தனையும் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்து, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடந்த காலத்தில் நடந்த நிகழ்ச்சி என்பதை நான் அவரது கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

1979 அக்டோபர் 29] [டாக்டர் கே. சமரசம்]

[முற்பகல் 10-20]

ஆகவே, தீர ஆலோசித்து செய்திருக்கக் கூடிய திட்டங்கள் ஏராளமாக உண்டு என்பதை குறிப்பிட விரும்புகிறேன். ஆனால், எதைச் சொன்னாலும் குற்றம், எதைச் செய்தாலும் குற்றம் காண வேண்டுமென்று எண்ணுகின்றவர்களுடைய நிலையைப் பார்க்கும்போது எனக்கு ஒரு சிட்டுக் குருவி கதை நினைவுக்கு வருகிறது.

ஒரு மன்னனும், மந்திரியும் சென்று கொண்டிருந்த போது என்னைப் பார், என்னிடத்திலே ஒரு காசு இருக்கிறது, இஷ்டப் பட்டவர்கள் எடுத்துக் கொள்ளலாம் என்று சிட்டுக் குருவி சொன்னதாம். அவர்கள் திரும்பி வரும்போதும் அதே மாதிரி என்னிடத்திலே ஒரு காசு இருக்கிறது இஷ்டப்பட்டவர்கள் எடுத்துக் கொள்ளலாம். என்றதாம் அதைக் கேட்காமல் அல்லது அதைப் பற்றி பொருட்படுத்தாமல் அவர்கள் போகவே, காசு இருக்கிறது என்று சொல்லியும் அதை எடுத்துக் கொண்டு போய் கஜானாவில் சேர்க்காதவன் எப்படி ஆட்சி செய்வான் என்று சொன்னதாம். இன்னொரு தடவை போகும்போது மந்திரி போய் அந்த காசை எடுத்துக் கொண்டானாம். அப்போது, ஒரு செப்புக் காசுக்கு வக்கில்லாதவன், என்னிடத்தில் உள்ள காசை எடுத்துக் கொள்கிறான், இவன் எப்படி ஆட்சி செய்வான் என்று சொன்னதாம் சிட்டுக் குருவி. அதைப் போல எதைச் சொன்னாலும், எதைச் செய்தாலும் அதைப் பற்றி குறை சொல்லிக் கொண்டிருப்பது வருந்தத்தக்கதே அல்லாமல் அது ஒரு நல்ல ஜனநாயக ஆரோக்கியத்தை ஏற்படுத்தாது என்பது என்னுடைய அபிப்ராயம்.

அடுத்தபடியாக தர்மபுரி மாவட்டத்திலே நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை குறிப்பிட்டும், தமிழ்நாடு முழுவதும் வகுப்புக் கலவரம் என்று பேராசிரியர் சொன்னார்கள். சென்னைக்கு நான் வருவதற்கு முன்னால் தர்மபுரியில் காவேரிப்பட்டினத்தில் அவர்களுடைய பேச்சினைக் கேட்டு விட்டு வந்தேன். அவர்களுடைய கவனத்திற்காக அதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் பாலக்கோட்டிலே ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது. அது இந்து-முஸ்லீம் கலவரமல்ல. அவர்கள் சொன்னார்கள். ஏதோ வாய்ப்பு பெற்றவர்கள், வசதி பெற்றவர்கள், அரசியல் செல்வாக்குப்படைத்த அவர்கள், அவர்கள் எம்.பி., அல்லது எம்.எல்.ஏ. யாக இருந்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். நான் அங்கே மாவட்ட அனுமதிக்குழுவில் உறுப்பினர் என்ற முறையில் அங்கே சாட்சிகள் பேசும் போது கேட்டேன். ஆவர்கள் சொல்லுகின்ற அந்த கலவரத்திற்கு எம் பி. அல்லது எம். எல். ஏ. காரணம் என்று சொல்லவில்லை. அது

[டாக்டர் கே. சமரசம்] [1979 அக்டோபர் 29

ஒரு வகுப்புக் கலவரப் அல்ல. நடந்துவிட்ட நிகழ்ச்சி என்ன என்பதை இந்த மாமன்றம் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

அங்கே ஒரு முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த சிறுவனை இன்னொரு முஸ்லீம் சிறுவன் அடித்தான். அது அல்லாமல் முஸ்லீம் இந்துவை அடிக்கவில்லை. அல்லது ஒரு இந்து முஸ்லீமை அடிக்கவில்லை, அடித்துக்கொண்ட இரண்டுபேரும் முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். அதைக் கேட்கப் போன இந்து-முஸ்லீம் மக்கள் பாதிக்கப்பட்டனர். அதை தவறான முறையில், வேண்டுமென்றே திட்டமிட்டு, இந்து-முஸ்லீம் கலவரம் என்று ஒரு பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள் என்பதைச் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

எங்கிருந்தோ யார்யாரோ போட்ட தூபத்திற்கு பலியானவர்கள் இப்படிப்பட்ட ஒரு தவறான எண்ணத்தை உருவாக்கியதன் காரணமாக பாதிக்கப்பட்டவர்கள் அந்தப் பகுதியிலே வாழக்கூடிய இந்துக்களும் முஸ்லீம்களும் தானே தவிர வேறு யாரும் அல்ல. இந்தப் பிரச்சினையில் ஒரு நல்ல முடிவை எடுப்பதற்காக, சமாதான முறையை உருவாக்க மாவட்ட ஆட்சித் தலைவர் ஏறத்தாழ 19 தடவைகள் அவர்களைக் கலந்துபேசியிருக்கிறார்கள். நாங்களும் பல முறை கலந்துபேசி, எப்படி, எப்படி, யார், யாரை கலந்து பேச வேண்டுமோ அவர்களை எல்லாம் கலந்துபேசி, இன்றைக்கு ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். அரசு யார் யார்மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமோ அவர்கள் மீதெல்லாம் நடவடிக்கை எடுக்கச் சொல்லியிருக்கிறது. ஒரு எம்.பி. கைது செய்யப்பட்டார்.. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினர் பலர் கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் எல்லாம் குற்றவாளிகள் என்ற முறையில் கைது செய்யப்படவில்லை; அவர்களால் தவறு நடந்திருக்குமோ என்ற சந்தேகத்தின் பேரில் அவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள், என்பதை அரசின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன். இந்த ஆட்சியைப் பொறுத்த மட்டில் கைலி அணியாத முஸ்லீம், சிலுவை அணியாத கிறிஸ்து, கோவிலுக்குப்போகாத இந்து என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் உயரிய கொள்கையின்படி நடந்துகொண்டிருக்கிறதே தவிர வேறல்ல என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மேலும் இங்கே சொன்னார்கள். சட்டம் இயங்கவில்லை; கல்கத்தா போல இருக்கிறது என்று சொன்னார்கள். நாம் இன்னும் கி.மு.-வில் வாழ்ந்துகொண்டிருக்கவில்லை. மக்கள் தொகை பெருக்கத்தில் இருக்கிறோம்; அது இயற்கையான

1979 அக்டோபர் 29] [டாக்டர் கே. சமரசம்]

ஒரு சூழ்நிலை. அதனால் விவகாரங்கள் வருவது இயற்கைதான். அந்த அடிப்படையிலே சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். அதற்கு முன் எச்சரிக்கையாக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்கிறார். நாங்கள் அரசியல்வாதிகளே தவிர ஆரூடம் கணிப்பவர்கள் அல்ல. தவறு நடக்கிறது என்றால் அதைத் திருத்திக் கொள்வதற்கு, அல்லது நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்துகொண்டிருக்கிறது. அது அரசின் கடமையாகும். அதன்படி செய்து வந்திருக்கிறோம். இன்னும் சொல்லப்போனால் எங்கள் பகுதியிலே வன்முறையாளர்களைப்பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி ஒரு கடிதத்தை அனுப்பியிருக்கிறார்கள். அதை நான் அவர்களுடைய பார்வைக்கு வைத்திருக்கிறேன். வன்முறையாளர்கள் இருக்கிறார்கள் என்றால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். அவர்களை தீவிரமாக கண்காணித்து, காவேரிப்பட்டினம் டகுதியில் தீவிர வாதிகள் என்று சொல்லக்கூடியவர்களை நாங்கள் முழுமையாக அடக்கியிருக்கிறோம்.

ஆகவே, கடைசியாக ஒன்றைச் சொன்னார்கள். இலட்சத்தில் வாழ்க்கை நடத்தும் முதல்வர் அவர்கள் ஆயிரத்தில் விளையாடலாமா ? அதுவும் பிற்பட்டவர்கள் விஷயத்தில் விளையாடலாமா என்று சொன்னார்கள். வரவு எவ்விதம் என்று சொல்வதைவிட, செலவு இதற்காகத்தான் இப்படித்தான் இருக்க வேண்டும் என்ற நிலையைக் கொண்டவர் எங்கள் எம்.ஜி.ஆர். குடும்பயுட் புகுமுன் குழவிதன் கொள்கைபோல என்ற கைவல்ய நவநீத கருத்துக் கொண்டவர் எங்கள் எம்.ஜி.ஆர். குடி குடியைக் கெடுக்கும் என்பதை நன்கு உணர்ந்தவர் எங்கள் எம்.ஜி.ஆர். பரமன் முடி மீதுள்ள பாம்பானாலும், அது பக்தனையே தீண்டினால் கொல்லக்கூடியவர் எங்கள் எம்.ஜி.ஆர். சூதும், வாதும் வேதனை செய்யும் என்பதை மிகத் தெளிவாக உணர்ந்தவர் எங்கள் எம் ஜி.ஆர். இலஞ்ச ஊழல் போவழிகள் மத்தியிலும் இலட்சிய வாழ்க்கை நடத்தியவர். பெரியார் அவர்களின் கருத்துப் படி, 'சிகப்பு விளக்குப் பகுதியில் வாழ்ந்த பத்தினித் தெய்வம்' எங்கள் எம்.ஜி.ஆர். இலட்சங்களைப் பெற்றாலும், இலட்சிய வாழ்க்கை நடத்தியவர் எங்கள் எம்.ஜி.ஆர்.

இன்னும் சொல்லப் போனால், எந்த நேரமும் 24 மணி நேரத்தில் 18 மணி நேரம் தன் வாழ்க்கையை உழைப்பதற்கே, தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர். 'டு ரெஸ்ட் இஸ் டு ரெஸ்ட்' என்ற வகையில் ஓய்வு வாழ்க்கையைக் கெடுக்கும் என்ற கொள்கையைக் கொண்டவர். அந்த வகையில் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர் எங்கள் எம்.ஜி.ஆர். 'நைதர் டிசிவ் நார் பி டிசிவ்ட்'—'ஏமாற்றாதே, ஏமாறாதே என்ற உயர்ந்த இலட்சியத்தைக் கொண்டவர் எங்கள் எம்.ஜி.ஆர்.

[டாக்டர் கே. சமரசம்] [1979 அக்டோபர் 29

இன்னும் சொல்லப்போனால், மேல் நாட்டில் அதாவது ஸ்வீடன் நாட்டு உலகப் புகழ்பெற்ற டென்னிஸ் சேம்பியன் பிஜோான் போர்க் போல, எதிரிகள் விளையாட விளையாட அதனால் உற்சாகமூட்டப்பட்டு, அமைதியாகவும், அனாவசியமாகவும் விளையாடி வெற்றி பெறுபவர் எங்கள் எம். ஜி. ஆர்.

அதுபோல், கலை உலகத்திலும், அரசியல் உலகத்திலும் அமைதியாகவும், அனாயசமாகவும் பணியாற்றி, இதிலே தன்னையே அர்ப்பணித்துக் கொண்டு வெற்றி கண்டவர் எங்கள் எம். ஜி. ஆர்.—முதல்வர் ஆவார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

'பகைவனுக்கு அருள்வாய்' என்று பாரதியார் கூறியுள்ளார். 'பாதகனுக்கும் அருள்வாய்' என்ற கொள்கையை உடையவர் எங்கள் முதல்வர். இப்படிப்பட்ட சூழ்நிலையில், நீங்கள் சொல்லியுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் அர்த்தமற்றது, எதிர்கட்சிகள் கண்டனக்கினால் இந்த அரசு டலவீன மடையாது. ''வெந்நீரில் வீடு வேகாது'' என்று சொல்லி முடிக்கிறேன். வணக்கம்.

* திரு. ர. ஜெபமணி : உதவி சபா நாயகர் அவர்களே, இந்தக் கண்டனத் தீர்மானத்தின் பேரில் நானும் ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்ல ஆசைப்படுகிறேன். ஆளுங்கட்சியின் மேல் எதிர் கட்சியில் உள்ளவர்கள் எப்போதும் தங்களுடைய குறைகளை சொல்லுவது வழக்கமாக இருக்கிறது. இந்த நேரத்தில் தமிழகத்தில் சட்டசபை கூடப்போகிறது, ஏதோ நடக்கப் போகிறது, அங்கே பெரிய காரியங்கள் எல்லாம் நடக்கப்போ கிறது என்று நாட்டு மக்கள் எல்லோரும் பிரமிக்கும் அளவுக்கு அதிகமான பிரச்சாரம் நடந்தது. ஆனால் இங்கே சட்ட சபையில் என்ன நடந்தது? சாதாரண ஒரு கண்டனத் தீர் மானம். அந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர் பேராசிரியர் அன்பழகன் அவர்கள். அவர்களிடம் அந்தத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் நினைத்தேன், ஏதோ அமைச்சர்கள் மீது ஊழல் புகார்கள் கூறப்படும். அவர் களை எல்லாம் கண்டித்து கொள்ளை, கொலை செய்திருக்கி றார்கள், ஆகவே அமைச்சரவையில் இருப்பதற்கு லாயக்கு அற்றவர்கள் என்று சொல்வார்கள் என்ற பயம் எங்களுக்கு இருந்தது.

[முற்பகல் 10-30]

ஆனால் தமிழகம் காப்பாற்றப்பட்டு விட்டது என்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். காரணம், அவர்கள் அந்த இடத் திற்கே வரவில்லை. அதை விட்டு விட்டு ஏதாவது, இப்போது

1979 அக்டோபர் 29] [திரு. ஜேபமணி]

இந்தச் சபை கூடியிருக்கிறதே நாம் ஏதாவது சொல்லியாக வேண்டுமே என்ற நிர்பந்தம் அவர்களுக்கு வந்த காரணத்தினால் (கரவொலி) அவர்கள் எதையெல்லாமோ சேகரித்து வந்து இங்கே பேசினார்கள். நான் முதன்முறையாக ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பஞ்சாயத்துக்களை கலைத்து விட்டார்கள். இது நியாயந்தானா, இது ஜனநாயகத்திற்கு பெரிய மரண அடி அல்லவா என்ற இனிமையான வார்த்தைகள் இழைத்தோடின. ஆனால் பஞ்சாயத்துக்களுக்கான தேர்தல்கள் நடந்ததா எப்படி பஞ்சாயத்து தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்களா அல்லது அவர்கள் தலைவகளாகவே பிறந்தார்களா என்பது எல்லாம் வேறு விஷயம். ஆனால் இதில் இவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டவர்கள் கடைசியாக ஒரு வார்த்தை சொன்னார்கள். இந்த சபை கலைக்கப்படுமா என்று. நான் அவர்களை பணிவன்போடு ஒன்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். நீங்கள் ஆண்டுகொண்டிருந்த காலத்தில் உங்களுடைய ஆட்சிக் காலம் முடிவதற்கு முன்னால் உங்கள் சட்டசபை தூக்கியெறியப்பட்டது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் (கரவொலி) என்பதை இப்போது நீங்கள் ஒரு முறை நினைத்துப் பார்க்க வேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். (கரவொலி) அதோடு மட்டமல்ல. அதையும் ஒரு கனவாக நினைத்து வேண்டுமானால் மறந்துவிடுவோம். ஆனால் சட்ட சபையை கலைப்பதற்குரிய காரண காரியங்களை நாலரைக் கோடி தமிழகமக்களுக்கு தெரியப்படுத்தினார்களா? தெரிவிக்கவேண்டாமா?

"தன்நெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்".

என்று தமிழ் புலவர் பெருமான் கூறினான். அப்படி அறம் கூறினான் வள்ளுவன். அதற்கு மாறாக கடற்கரைக் கூட்டத்தில், திலகரின் பெயர் இட்டிருக்கிற இடத்தில், உங்கள் ஆட்சியை கலைத்ததற்கான காரண காரியங்களை சொன்னாகளா? நீங்கள் என்ன செய்தீர்கள் செவிடர்களாக ஊமையர்களாக, வாய்ப் பொத்தியிருந்தீர்கள்.

திரு. சி. ஆறுமுகம்: பெரியவர் திரு. ஜேபமணி அவர்கள் அவர்களுக்குரிய பாணியில் பேசத் தொடங்கி இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தன் நிலையிலிருந்து எப்போதுமே மாறியதில்லை என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா: இதுவரை எத்தக் கருத்தைச் சொன்னாலும் யாரும் எதிர்த்துப் பேசவில்லை. அப்படியிருக்க உறுப்பினர் அவர்கள் இப்படி இடையில் எழுந்து நின்று பேசலாமா?

[1979 அக்டோபர் 29

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஜெபமணி அவர்கள் பேசி முடிந்த பிறகு திரு. சுப்பு அவர்கள் பேசப் போகிறார்கள். தயவு செய்து திரு. ஆறுமுகம் அவர்கள் உட்காருங்கள்.

திரு. ர. ஜெபமணி: தமிழ் மக்கள் வாழ்கின்ற இந்த நாட்டிலேதான் வள்ளுவன் பிறந்தான், பிறந்து அறம் கூறினான். ''வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு'' என்று பாடியிருக்கிறார்கள். பெரிய வைத்தியன் என்றால் ஒருவருக்கு பெரிய வியாதி வந்து அதற்கு வைத்தியம் செய்து அதைத் தீர்ப்பவனே பெரிய வைத்தியன். அப்படியானால் தமிழ்நாட்டிற்கு அப்படி ஒரு பெரிய ஒரு நோய் இருந்துதான் வள்ளுவன் பிறந்தான் என்று நான் ஊகிக்கிறேன். மீண்டும் அந்த நோய் தமிழ்நாட்டிற்கு வந்துவிடுமோ என்று பயந்துகொண்டிருக்கிறோம். பஞ்சாயத்துக்களை கலைத்ததை எதிர்க்கிறார்கள், வரவேற்கிறேன். ஆனால், அன்று இருந்த அரசாங்கத்தை நடுச் சந்தியில் தூக்கி எறிந்ததோடு மட்டுமல்ல, இழிவான, அருவருப்பான, அசிங்கமான சொல்ல முடியாத வார்த்தைகளைச் சொல்லி அந்த அரசாங்கத்தை நீக்கியதோடு மட்டுமல்லாமல் நீதி விசாரணை மன்றமும் அமைக்கப்பட்டது. அதுவும் விசாரணை செய்து பட்டியல் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. ஆனால், இப்போது கடற்கரையில் நின்று கொண்டு வரப்போகிற தேர்தலை எதிர்பார்த்து எந்த இடத்தில் பொய் சொல்லக் கூடாதோ, வள்ளுவன் சிலை எங்கேயிருக்கிறதோ, அதே மைலாப்பூர் கடற்கரையில் பேசியிருக்கிறார்.

''தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.''

பொய் சொல்லக்கூடாதல்லவா? நக்கீரன் கூறியிருக்கிறான், நெற்றிக்கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று. அமைச்சரவையைக் கலைத்ததற்கான காரண காரியங்களைச் சொல்ல வேண்டும் என்று கேட்கக் கூடாதா?

திரு. சி. ஆறுமுகம்: பாயின்ட் ஆப் ஆர்டர்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன்: பாயின்ட் ஆப் ஆர்டர்.

திரு. இரா. முத்தையா: பாயின்ட் ஆப் ஆர்டர்.

1979 அக்டோபர் 29]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆறுமுகம் அவர்கள் தயவு செய்து உட்காருங்கள். நான் சொன்ன பிறகு பேசலாம். ஒவ்வொரு கட்சி சார்பிலும் தங்கள், தங்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்ல அவரவர்களுக்கு உரிமை இருக்கிறது அவர்கள் பேசியதற்குப் பிறகு ஒவ்வொரு கட்சியின் சார்பாகவும் பேசப் போகிறார்கள். உங்கள் கட்சியைச் சார்ந்தவர்கள் பேசும்போது அதற்குப் பதில் சொல்லலாம். ஆகவே ஒருவர் பேசும்போது இடையில் இடைமறித்துப் பேசுவது அவ்வளவு நல்ல பழக்கம் அல்ல, சபையை அமைதியாக நடத்த முடியாது. ஆகவே உறுப்பினர்கள் தயவு செய்து ஒத்துழைக்க வேண்டும். நீங்கள் பேசிக் கொண்டிருக்கும்போது அவர்கள் குறுக்கிட்டுப் பேசினால் நீங்கள் எப்படிப் பேசமுடியும்?

திரு. சி. ஆறுமுகம்: நான் ஒரு ஆளே பதில் சொல்ல முடியும். சர்க்காரியா கமிஷனில குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆளும் கட்சியில் இருக்கிறார்கள். (கூச்சல்-குழப்பம்.)

திரு. அ. ரகுமான்கான்: சார் பாயின்ட் ஆப் ஆர்டர்.

திரு. ர. ஜெயமணி: உங்கள் தலைவர் ஒன்றரை மணி நேரம் பேசிக்கொண்டிருந்தபோது, நான் குறிக்கிடாமல் தான் இருந்தேன். எனக்கு குறுக்கிடத் தெரியும். அவர்கள் சொன்னதற்கெல்லாம் பின்னால் பதில்சொல்லமுடியும் என்பதால் தான் குறுக்கிடாமல் இருந்தேன். பதில் சொல்ல முடியாவிட்டால் குறுக்கிட்டு இருப்பேன். அதுபோல் உங்களுக்கும் பதில் சொல்ல முடியும் என்றால் குறுக்கிடாமல் இருங்கள். பதில் சொல்ல முடியாது என்ற எண்ணம் இருக்குமானால் குறுக்கிடுங்கள்.....

திரு. சி. ஆறுமுகம்: எங்களாலும் முடியும். அதை தெரிந்து கொள்ளுங்கள். (கூச்சல்-குழப்பம்.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: தயவு செய்து அமைதியாக இருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். சபையில் தவறாகப் பேசக் கூடாது.

திரு. சி. ஆறுமுகம்: சட்டசபையில் எப்படிப் பேசவேண்டும் என்பதைத் தெரிந்து இருப்பவன்தான் நான், தவறாகப் பேச மாட்டேன்.

திரு. ர. ஜெயமணி: நான் பேசுவதில் ஏதேனும் தவறு இருந்தால் நீங்கள் அதைப்பற்றி பின்னால் பேசலாம். என்னுடைய கருத்துக்களை இங்கே சொல்வதற்கு எனக்கு உரிமை இருக்கிறது. யார் மீதும் சேற்றை வாரி பூச வேண்டும் என்ற எண்ணமுள்ள

[1979 அக்டோபர் 29

வன். அல்ல நான் நான். பெரிய மாவீரனும் அல்ல, அந்தத் தகுதியும் எனக்கில்லை. எதையும் தாங்கிக் கொள்ளக்கூடிய பெரிய தூணும் அல்ல. இருந்தாலும் ஒரு தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துவிட்ட காரணத்தால் என்னுடைய பொறுப்பை சிறப்பாக செம்மையாக நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு எனக்கிருக்கின்ற காரணத்தால், சபாநாயகர் அவர்கள் எனக்குத் தந்திருக்கும் நேரத்தை நான் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லையென்றால் என்னைத் தமிழகம் சபிக்கும். ஏதோ வேடிக்கைப் பார்ப்பதற்காக நாம் இங்கு வரவில்லை. வெறும் வேடிக்கை பார்ப்பதற்காக இங்கு வந்தால் எதையும் பேசாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கலாம், இதையெல்லாம் நாட்டிலுள்ள மக்கள் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். நாட்டுக்கு நல்லதைச் செய்யவேண்டும். நாட்டின் பிரச்னை என்ன என்பதைப் பற்றி ஆலோசிக்க வேண்டும். அதைத்தான் நாடு கவனிக்கும். தனிப்பட்ட மனிதன் முக்கியமல்ல. ஜெயமணி இன்று வெளியே போகும்போது இறந்து போய்விடலாம், ஆனால் நாடு நிரந்தரமாக இருக்கும். அதை நினைத்து தங்கள் உடைய வருங்காலத்தைப் பற்றிப் பார்க்காமல், தங்களைப் பற்றி மட்டும் எண்ணிப்பார்க்காமல், இந்த நாட்டினுடைய வருங்காலத்தை எண்ணிப்பார்த்து, நாட்டுக்கு நல்லது செய்யலாம், நாட்டுக்கான நல்லது எதையாவது செய்கிறோமா என்பதை யோசிக்கவேண்டும், யார் மீது சேற்றை வாரிப் பூச வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை. என்னைப் பொறுத்தவரையிலும் என்னுடைய கருத்துக்களைத் தெளிவாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், நான் சொல்லுகின்ற கருத்துக்களில் ஏதாவது தவறு இருந்தால் அதைப்பற்றி எதிர்த்து பேசுவதற்கு உங்களுக்கு விரிவாகப் பேசுவதற்கு நிறைய நேரம் இருக்கிறது. நீங்கள் தாராளமாகப் பேசலாம், அந்த விதமாகப் பேசுங்கள் என்று தலைவணங்கி கேட்டுக் கொண்டு என்னுடைய சில வார்த்தைகளைக் கூற முற்படுகிறேன்.

இப்போது பஞ்சாயத்தைக் கலைத்து விட்டார்கள்: தேர்தல் நடத்தும்போது கலைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். இப்போது "புட்பார்வொர்க்" நடந்து கொண்டிருக்கிறது. இந்த நாட்டில் கடந்த 30 ஆண்டுகளாக பார்த்திராத விதத்தில் ரோடுகளையே பார்த்திராத இடத்தில் ரோடுகள் வருகின்றன, ரோடு வந்ததும் பஸ்கள் விடப்படுகின்றன. தமிழகத்தின் பல இடங்களில் ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. பஸ்கள் காணாத இடத்தில் எல்லாம் பஸ்கள் ஓடுகின்றன. இந்தக் கண் கொள்ளா காட்சியை பார்த்து விட்டு எப்படிப் பாராட்டாமல் இருக்க முடியும்? (ஆளுங்கட்சியினர் தரப்பில் ஆரவாரம்)..... நான் என்தொகுதியிலேயே பார்க்கிறேன்: நல்ல ரோடுகள் போடப்பட்டிருக்கின்றன. ரோடு போட்டு முடிந்தவுடன் பஸ்களை விட வேண்டும் என்று போக்குவரத்து அதிகாரிகளிடம் அணுகினால் உடனேயே பேருந்துகளை

1979 அக்டோபர் 29] [திரு. ர. ஜெபமணி]

விடுகிறார்கள். பேருந்துகளைப் பார்க்காத கிராமங்களில் எல்லாம் பேருந்துகளைப் பார்க்கிறார்கள். இந்த இனிய காட்சியைப் பார்த்தாவது ஒரு தடவை பாராட்டியிருக்கலாம் குற்றத்தைச் சொல்லும்போது, குணத்தையும் பார்க்க வேண்டும்

"குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்"

என்றுதான் வள்ளுவன் சொன்னார். ஒரேடியாக எல்லாவற்றையும் மறைத்துவிட்டுப் பேசுவது என்பது மக்களை திசைத் திருப்பப் பார்க்கிறார்கள் என்றுதான் அர்த்தம். பேசுவதற்கும் எழுதுவதற்கும் எல்லோருக்கும் உரிமை இருக்கிறது என்பது உண்மைதான். இப்போது, இங்கு எல்லோரும் போராட்டம், போராட்டம் என்று சொல்லுகிறோம். ஆனால் முன்னால் 19 மாதமாக இதையெல்லாம் சொல்லாமல் வாய்மூடி இருந்தது ஏன்?

[முற்பகல் 10-40.]

கம்பல்சரி ரிடையர்மென்டு என்றபோது ஏன் என்று கேட்க வில்லை. எங்களைக் கேட்காமல் விட்டால் போதும் என்றிருந் தார்கள். அதேபோல் கம்பல்சரி டெபாசிட் என்றபோது, பணம் கொடுத்து விடுகிறோம் எங்களைக் கேட்காமல் விட்டால் போதும் என்று அப்போது பயந்து நடுங்கினார்கள். அதேபோல் உங் களுக்கு போனஸ் கிடையாது என்றபோது, எங்களுக்கு வேலை இருந்தால் போதும், போனஸ் வேண்டாம் என்றார்கள். நாங்கள் கூட்டம் கூட மாட்டோம், பேச மாட்டோம் என்று அப்படி யெல்லாம் பயந்து இருந்தவர்கள், சுதந்திரமாக நடந்து கொள் ளுங்கள் என்று சொல்லும்போது பொறுப்பு அதிகம் வருகிறது. அடிமையாக வாழ்ந்து கொண்டிருந்தவனை சுதந்திரமாக வாழச் சொல்லும்போது, அவனுக்குப் பொறுப்பு அதிகமாகின்றது என்பதை அவன் சிந்திக்க வேண்டும். அப்படி சிந்தித்து, தன்னையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் தனது பக்கத்தில் இருக்கக் கூடியவர்களுக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டும். அப்படிப்பட்ட சுதந்திர உணர்ச்சி பெற முடியாமல்.

"அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும்
உச்சத்தில் கொண்டாரடி—கிளியே ஊமைச் சனங்களடி"

என்று அப்போது ஊமைப்போல் இருந்தார்கள் உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். பக்தவத்சலம் அவர்கள் இந்த நாட்டை ஆண்டு கொண்டிருந்தபோது, விவசாயிகளுக்கு ஒரு யூனிட்டுக்கு எட்டே முக்கால் டைசா என்று இருந்தது. "வரியைக் குறைப் போம், வசதியைப் பெருக்குவோம்" என்று சொன்னார்கள் 12 டைசாவாக ஆக்கினார்கள். அப்போது நாடே கொந்தளித்தது; 35,000 பேர்கள் ஜெயிலுக்குப் போனார்கள்; பலர் செத்தார்கள் இவைகளை நாம் அறிவோம். அதேபோல் எமர்ஜென்சி

[திரு. ர. ஜெபமணி] [1979 அக்டோபர் 29

காலத்தில் 12 டைசாலவ 16 பைசாவாக மாற்றப்பட்டது. அப்போது இந்த விவசாயச் சங்கத் தலைவர்கள் எங்கே போனார்கள் ? எங்கே தூங்கிக் கொண்டிருந்தார்கள் என்று கேட்கிறேன். அன்றைக்கு ஒன்றும் கேட்காமல் பயந்து கொண்டிருந்தவர்கள், இன்றைக்கு போர்க் கொடித் தூக்கிக் கொண்டு வருகிறார்கள். அப்படி வரக்கூடாது.

அதேபோல், ஆயுதம் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால், அந்த ஆயுதத்தை அவர்கள் பாதுகாப்புக்கு வைத்துக் கொள்ளவேண்டுமே தவர, வேறு பொருள் அல்ல. ஆயுதத்தை வைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்லும்போது, அதோடு பொறுப்புச் சேர்ந்து வருகிறது. அப்போது பயந்து கிடந்தார்கள். முதல் அமைச்சர் அவர்களோடு நான் பேசிக் கொண்டிருக்கும் போது, அவர்கள் சொன்னார்கள். இந்த வக்கீல் வழக்கு வந்த போது, இவர்களுக்கு என்று ஒரு சங்கம் இல்லாததால், குரல் கொடுக்க முடியாமல் இருந்தார்கள், எனவே, அவர்களுக்கு என்று ஒரு சங்கம் இருந்தால் நல்லது என்று என்னிடம், நீங்களும் ஒரு சங்கம் வைத்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால் உடனே ஸ்டிரைக் செய்வதா ? 120 மைல்கள் வேகம் போகலாம் என்று காரில் ஸ்பீடா மீட்டரில் இருக்கும். அப்படி இருக்கின்றதே என்று, எந்த மடையனாவது 120 மைல் போவானா ? போக மாட்டான் அப்படிப் போனால், அது எவ்வளவு முட்டாள் தனமோ அப்படி, எடுத்ததும் ஸ்டிரைக் செய்வது என்பதாகும். ஸ்டிரைக் செய்வது என்பது இறுதியான ஆயுதமாக இருக்க வேண்டும். ஸ்டிரைக் செய்வது என்பது இறுதியாக செய்து, செத்து மடி என்ற அளவுக்கு வரக் கூடியதாக இருக்க வேண்டும். அதுவும் போலீஸ்காரர்கள் எடுத்தவுடனே ஸ்டிரைக் பண்ணலாமா ? அவர்களைப் பற்றி சென்ற கூட்டத்திலேகூட நான் கண்ணீர் விட்டுப் பேசினேன். அவர்கள் நான் ஒன்றுக்கு 8 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யக்கூடாது என்று பேசினேன்.

காவல்துறை என்பது உயர்ந்த தொழில் ; தாயாருக்கு அடுத்த தொழில். வீட்டிலே உள்ளவரை தாயார் காப்பாற்றுகிறாள், வீட்டைவிட்டு வெளியே வந்தால் பாதுகாப்பு கொடுக்கக் கூடியவர்கள் போலீஸ் அதிகாரிகள்தான். அந்நியரோடு போராடி காக்கக் கூடியவர்கள் போலீஸ்காரர்கள். திருடனோடு போராடி தன் உயிரையும் மதிக்காமல் ஓடிப்போய், போராடி பாதுகாப்புக் கொடுக்கக் கூடியவர்கள் போலீஸ்காரர்கள்தான். அப்படி இந்த நாட்டைக் காக்கக்கூடிய காவலர்கள், துப்பாக்கி ஏந்த மாட்டோம்பணியாற்ற முன் வர மாட்டோம் என்று சொல்லும்போது, மறைந்த தலைவர் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் சொன்னது என் நினைவுக்கு வருகிறது. " மங்கை சூதகமானால், கங்கையிலே குளிப்பாள் ; கங்கை சூதகமானால் எங்கே குளிப்பாள் ? " என்று சொல்வார்கள். அதே போல், நாட்டிலே திருடு நடந்தால், உடனே போலீஸ்காரர்கள்

1979 அக்டோபர் 29] [திரு. ர. ஜெபமணி]

ஓடிவந்து காப்பாற்றுவார்கள் ; கண்டுபிடிப்பார்கள். அப்படிப் பட்ட போலீசாரே இன்றைக்கு உடனே ஸ்டிரைக் பண்ணலாமா ? நீங்கள் முதலிலே அமைச்சர் ஒருவரை சந்தித்துப் பார்க்க வேண் டாமா? உங்கள் மேலதிகாரிகளை, டிபார்டுமெண்டிலே உள்ளவர் களைப் பார்த்திருக்க வேண்டாமா ? இன்றைக்கு சர்க்கார் என்று சொன்னாலே அது போலீஸ்தான். சர்க்காருக்குப் பயப்படுகிறார் கள் என்று சொன்னால் அது யார் ? தாசில்தாரும், ரெவின்யூ இன்ஸ்பெக்டருமா ? இவர்களைப் பார்த்து தீப்பெட்டி கேட் பார்கள். யாரைக் கண்டு பயப்படுவார்கள் ? போலீசைக் கண்டு தான். இத்த போலீஸ்தான் காக்குப் கடமையை, கண்டிக்கும் கடமையைச் செய்யக்கூடியவர்கள்.

மீனாட்சி அம்மனிடத்திலிருந்து ஒரு உயர்ந்த பொருள் களவு போய்விட்டது என்று சொன்னால், உடனே சொக்கநாதருக்கா போன் செய்வார்கள் ? உங்கள் மனைவியின் பொருள் திருடு போய்விட்டதென்று. அதேபோல், ஜனாதிபதி வீட்டில் பொருள் களவு போனாலும், ஜபமணி வீட்டில் களவு போனாலும் சரி, நாம் காவலர்களைத் தான் நாடுவோம். அத்தகைய அருமை யான மணியைச் செய்யக் கூடிய காவலர்கள், தங்கள் கடமை உணர்ச்சியிலே இருந்து, இந்த நாட்டை காப்பாற்றுவதிலே இருந்து தவறலாமா ? துப்பாக்கியைத் தொடமாட்டோம் என்று கூற லாமா ?

இந்த நாட்டிலே உங்களுடைய ஸ்டிரைக் இருக்கிறது. கார் மோதி 4 கண்மணிகள் செத்து விடுகிறார்கள் என்றால், அவர்கள் உயிரைக் கொண்டு வரமுடியுமா ?

பாங்கு கொள்ளையடிக்கப்படும் என்கிறார்கள். யாருக்கு நஷ்டம் ? முதலமைச்சருக்கா ? இல்லை, மற்ற அமைச்சர்களுக்கா இல்லை. போராட்டம் என்பது மக்களைத் தாக்குவது அல்ல. எந்தப் போராட்டமானாலும் தன்னை அழித்துக் கொள்வதுதான் போராட்டமே தவிர, மக்களைத் தாக்குவது அல்ல. மரத்தை வெட்டி ரோட்டில் போடுவது, பஸ்களை ஓடவிடாமல் செய்வது— இந்தப் போராட்டத்தை மக்கள் ஆதரிக்கமாட்டார்கள். எந்தப் பேடி செய்த காரியமடா என்றுதான் கேட்பார்கள். நமக்குக் கோபம்—ஆத்திரத்தில் எதையாவது இழுத்து, எப்படியாவது இந்த அரசாங்கம் குலுங்காதா, நடுங்காதா என்று பார்க்கிறார்கள் அது எப்படிக் குலுங்கும் ? அது எப்படி நடுங்கும் ? மக்களுடைய பிரச்சினையைக் கையிலே எடுத்துக் கொண்டு போராடினால் மக்கள் பின்னால் வருவார்கள். என்னுடைய பிரச்சினையை எடுத்துக் கொண்டு போராடினால் நான்தான் போராடுவேன். 'மக்களுடைய சுதந்திரம் பறிக்கப்பட்டு விட்டது, ஜனநாயகம் செத்து விட்டது. நீதிமன்றம் எங்கோ போய்விட்டது— போர்' என்று சொன்னால் 'ஆ : நாலும் வருகிறேன்' என்று சொல்லி மக்கள் பின்னாலே வருவார்கள். ஆனால் எனக்குச் சோறு கிடைக்கவில்லை என்றால் வரமாட்டார்கள்.

[திரு. ர. ஜெபமணி] [1979 அக்டோபர் 29

நாம் போராட்டத்தைப் பற்றிப் பேசுகிறோம். யாருக்காக ? வேலையில்லாமல் முக்கால்வாசிப் பேர் வெளியே இருக்கிறார்கள். அவர்கள் சந்தா தருவதில்லை, ஆகவே, நாம் அவர்களுக்குச் சங்கம் வைக்கவில்லை. சந்தா தந்தால் சங்கம் வைப்போம். அவனுக்கு வேட்டி இல்லையே, துணி இல்லையே, சோப்பு இல்லையே என்று பேசுவோம்.

ஒருவன் தொழிற்சாலை கட்டும் வரை தொழிற் சங்கவாதி அங்கே டோகமாட்டான். தொழிற் சாலை கட்டி 200 பேர் வேலை பெற்று தொழிலாளி முதலாளி இனக்கமாகப் பணியாற்றி வரும்பொது ஓராண்டு கழித்து ' ஏ தொழிலாளியே, அந்த முதலாளி உன்னைக் கசக்குகிறான், பிழிகிறான்— அவன்தானே வேலை இல்லாமல் இருந்தவர்களுக்கு வேலை கொடுத்தான் என்பதை விட்டு விட்டு ' சீ : அவர் பூர்ஷுவா '— இந்தத் தொழிற்சாலை உனக்குத்தான் சொந்தம் ' என்பான். அவன் நுழைந்தவுடனேயே அமைதி கேட்டு தொழிற்சாலை மூடப்பட்டு விடும். இந்த நிலையில் இந்த நாட்டிலே வேறு எவனும் தொழிலை ஆரம்பிக்க முன்வருவானா ? சினிமா தியேட்டர் கட்டுகிறான்— பணம் இருந்தால் சினிமா தியேட்டர் கட்டுகிறான். தொழிலாளிக்காகப் பரிந்து பேசி தொழிலாளிக்கு வேலை இல்லாமல் தெருவில் நிற்க வைக்கிறான். தொழிலாளியை வாழ விடாமல், வளர விடாமல் செய்து விடுகிறார்கள். போராட்டத்திற்குச் செல்லக் கூடியவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். என்னுடைய வீட்டிலே வேலை இல்லாமல் இருக்கிறான், அத்த வீட்டுக்காரன் வேலை இல்லாமல் இருக்கிறான். எனக்கு வேலை இல்லை, அவனுக்கும் வேலை இல்லை. தொழிற்சாலை வேண்டும் ஆனால் தொழிற்சாலை வருவதில்லை, சினிமா தியேட்டர் வருகிறது.

தொழில் மையங்கள் அங்கங்கே அமைக்கப்பட்டிருக்கின்றன. தொழில் ஆரம்பியுங்கள் ஆரம்பியுங்கள் என்று நான் சிலரைக் கெஞ்சிக் கேட்கிறேன். தொழிலை ஆரம்பித்தால் அந்த வினையெல்லாம் என் வீட்டைச் சுற்றும். யார்டா உன் முதலாளி என்று கேட்டு கூட்டம் கூடும் என்று சொல்லுகிறார்கள். டாட்டா, பிர்லா 1972–76 ல் 500 கோடி மூலதனம் வைத்திருந்தவர்கள் இன்று 1,200 கோடி ரூபாய் சொத்து அளவுக்கு தங்கள் சொத்தைப் பெருக்கிக் கொண்டார்கள். அவர்களைப் பற்றி இங்கே யாரும் பேசமாட்டார்கள். இங்கே ஒரு தீப்பெட்டித் தொழிற் சாலையை ஆரம்பித்து 40 பேருக்கு வேலை கொடுப்பான். அவன் பெரிய முதலாளி என்று சொல்லி போராடுவார்கள். அவனும் முதலாளி என்று நினைத்துக் கொண்டு ஒரு பையைத் தூக்கிக் கொண்டு தொழிற்சாலையை மூடிவிட்டுப் போய்விடுவான். தொழிலாளி வேலை இல்லாமல் போய் ஒதுக்கப்படுகிறார்கள். எந்த ஒரு காரியத்தை நினைத்தாலும் எந்தக் காரியத்தைச் செய்வது நல்லது என்று முடிவு செய்து ஒரு கணம் சிந்தித்துச் செய்ய

1979 அக்டோபர் 29] [திரு. ர. ஜெபமணி]

வேண்டும். வேலை நிறுத்தம் செய்யுங்கள் என்று தொழிலாளர் கூப்பிடுகிற அரசியல்வாதிகள் தங்களுடைய நன்மையைக் கருதித்தான் அவ்வாறு தொழிலாளர்களுடைய விவகாரங்களிலே தலையிடுகிறார்கள். ஆனால் தொழிலாளர்கள் சங்கத்தில் தலைவர்களாக, காரியதரிசிகளாக இருந்தால் இந்த நிலைமை ஏற்படாது. அந்த வகையிலே ஒரு தொழிற்சாலை சென்னையில் இருக்கிறது. அந்தத் தொழிற்சாலை நிம்மதியாக நடக்கிறது என்பது தொழிலமைச்சருக்குத் தெரியும். அந்தத் தொழிற்சாலை டன்லப் தொழிற்சாலை. தொழிலாளர்களே தொழிற் சங்கங்களில் பொறுப்பேற்றிருந்தால்— அவர்களுடைய பசி அவர்களுக்குத் தெரியுமாதலால் தொழிலாளி— முதலாளி பேசி சுமுகமான நிலைமை இருந்து வருகிறது. பாம்பைப் பாம்பு கடித்தால் விஷம் ஏறாது. வெளியே உள்ளவன் வந்து 'முதலாளி ஒழிக' என்று கூப்பாடு போட்டால் கஷ்டப்படுபவர்கள் யார்?

சென்னையில் டிராம் ஓடிற்று. இளைஞர்களுக்குத் தெரியாது. 2,500 பேர் வேலை பார்த்தார்கள். எல்லாத் தொழிலாளர்களும் சேர்ந்து 'ப்ருஸ் துரை ஒழிக' என்றார்கள். அவன் பூட்டி சாவியைக் கொண்டு போய்விட்டான். நாம் ஏதாவது பண்ணலாம் என்று டார்த்தால் இயந்திரத்தைப் பூராவும் கல்கத்தாவில் விற்று விட்டுப் போய்விட்டான். 2,500 தொழிலாளர்கள் வாழ்வு பாதிக்கப்பட்டது. தொழிலாளி வாழவேண்டும் என்று நினைப்பதில்லை. நாம் இடையில் புகுந்தவுடன் என் கட்சி வாழவேண்டுமென்று நினைக்கிறேன்.

[முற்பகல் 10—50]

போலீஸ் கிளர்ச்சி செய்தால் என்ன ஆகும் தெரியுமா? ஒன் டே, எம்.ஜி.ஆர். சரண்டர். ஒன் டே, எம்.ஜி.ஆர். சரண்டர் என்று சொன்னார்கள். அவர்கள் என்ன நினைத்தார்கள், ஒன் டே, எல்லாம் சர ் டர் ஆகிவிடும் என்று. ஆனால் ஊரிலே உள்ள மக்கள் அப்போது நிம்மதியாக இருந்தார்கள். ஏனென்றால் கார்-பஸ் மோதல் கிடையாது, எல்லாம் நடந்து கொண்டிருந்தது. ஏன் மோதல் இல்லை? போலீஸ்காரன் இருந்தால் ஒரு இடத்திலே ஒரு நாளைக்கு 3 தடவைகள் மோதல் ஏற்படும்.

ஆனால் போலீஸ்காரர் இல்லாத நிலைமையில் ஒரு தடவை கூட மோதல் இல்லை. காரணம் அவரவர்களுக்குப் பொறுப்பு வந்து விடுகிறது. அவரவர்கள் அவர் அவர்களின் வேலைகளை ஒழுங்காகச் செய்கிறார்கள். மோதல் இல்லை. கொத்தவால் சாவடியிலே வண்டிகள் ஒழுங்காக செல்கின்றன, இன்னொரு வண்டி வருகிறபோது தன்னுடைய வண்டியை தானே முறைப்படுத்தி ஓட்டிக் கொண்டு செல்கிறான். ஜனங்களுக்கு பொறுப்பு வந்து விட்டது. அதற்காக போலீஸ்காரர்கள் இல்லாமலே

[திரு. ர. ஜெபமணி] [1979 அக்டோபர் 29

காரியங்கள் நடக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை. அவர்கள் இருந்தே ஆகவேண்டும். அவர்கள் தான் இந்த நாட்டிற்கு ஜீவன். அப்படிப்பட்ட ஜீவனாக இருக்கிறவர்கள் ஸ்டிரைக்கிலே இறங்கக் கூடாது.

நேற்று சங்கம் ஆரம்பிக்க அனுமதி அளிக்கப்பட்டது. இன்றைக்கு என்னுடைய சங்கம் அங்கீகரிக்கப்படவில்லை என்று குற்றச்சாட்டு. அதற்காக ஸ்டிரைக் செய்யப் போகிறோம் என்றால் அது சரியா ? ஸ்டிரைக் என்பது கடைசி ஆயுதம் பாசுபதாஸ்திரம். உடனே அதை பயன்படுத்தினால் அந்த, இடத்திலே இராணுவத்தைக் கொண்டு வந்தால் இராணுவத்தைக் கொண்டு வரலாமா என்று கேட்பதா ? போலீஸ்காரரிடம் ஆயுதம் என்னைச் சுடுவதற்காகவா கொடுக்கப்பட்டிருக்கிறது? போலீஸ்காரர் ஸ்டிரைக் செய்தால் ராணுவம் சும்மா இருக்குமா? அவர்கள் வந்து அவர்களுடைய வேலையைச் செய்துதானே ஆக வேண்டும். மக்களுக்கு யார் பாதுகாப்பு கொடுப்பது பாதுகாப்புக் கொடுப்பதற்குத்தானே அவர்களிடம் ஆயுதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாதுகாப்பதற்கு பயன்படுத்தவில்லையென்றால் இராணுவம் வரத்தானே செய்யும். * * *

போலீஸ்காரர்கள் வரவில்லையென்றால் இன்னொருவர் வரத்தான் செய்வார். ஏன் வரக் கூடாது ?

நான் போலீஸ்காரர்களின் காலைப் பிடித்துக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் கடமையைச் செய்யுங்கள், இந்த நாடு பத்திரமாக இருக்க வேண்டும். சமுதாயத்திற்காகப் பணியாற்றும் உங்களுடைய கஷ்டநஷ்டங்கள் எல்லாவற்றையும் எல்லோரும் அறிவார்கள். அவைகள் தீர்க்கப்படும். சட்டமன்றத்திலே நாங்கள் எடுத்துச் சொல்வதற்கு எங்களுக்கு இடம் கொடுங்கள். நீங்கள் உங்களுக்கு வேண்டியதை அரசாங்கத்திடம் கேளுங்கள். அதை விட்டுவிட்டு மற்றவர்களின் ஆலோசனையை நீங்கள் கேட்டீர்களானால் அது சரியல்ல. சிலருக்கு அரிப்பு வருகிறது, இந்த நாட்டிலே குழப்பம் ஏற்பட வேண்டும், அரசாங்கமே இல்லாமல் போக வேண்டும், ஜனாதிபதி ஆட்சி வரவேண்டும் என்று செய்கிறார்கள். குழப்பம் வரவேண்டுமென்று யார் இதைச் செய்கிறார்களோ அவர்களுக்குத் தான் குழப்பம் வரும். எப்போதும் இன்னொருவரைக் குழப்ப வேண்டுமென்று நினைக்கிறவன் தானே குழம்பிக் கெட்டு விடுவான்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1979 அக்டோபர் 29] [திரு. ர. ஜெபமணி]

அதே மாதிரி ஒருவனுக்கு பயத்தை ஏற்படுத்த வேண்டுமென்று நினைப்பவனையே அந்த பயமே பூதமாக, பிசாசாக மாற்றிவிடும். நானே எவ்வளவோ பேசியிருக்கிறேன், அது வேறு. கண்டிப்பது வேறு. எதிர் காலத்திலே எல்லாம் நன்றாக நடக்க வேண்டுமென்ற எண்ணத்திலே பேசுவது வேறு. இந்த அமைச்சர்கள் மீது ஊழல் பட்டியலை விரித்தால் தமிழக மக்கள் இது தாளாது என்று சொல்வார்கள். ஆனால் அது இங்கே இல்லை. ஏற்கனவே இவர்கள் சுத்தமானவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டார்கள். கீழே உள்ள நிலைமைகள் பற்றி அவர்களுடைய கவனத்திற்கு வராமல் இருந்திருக்கலாம். அவர்களுக்கு அதிகமான பணிகள் இருந்திருக்கலாம். ஆனால் பேராசிரியர் அவர்கள் பேசிய போது நான் ஆலோசனையாக சொல்கிறேன், நான் ஆலோசனையாகச் சொல்கிறேன், நான் ஆலோசனையாகச் கொல்கிறேன் என்று சொன்னார்களே தவிர நான் கண்டிக்கிறேன் என்று சொல்லவில்லை. காரணம் எதுவும் இல்லை. ஆகவே சொல்லவில்லை. ஒருவர் குற்றச் சாட்டுகளைச் சொல்லும்போது மிக மிக ஜாக்கிரதையாகச் சொல்ல வேண்டும்.

அடுத்து மதுவிலக்கு பற்றிச் சொல்ல விரும்புகிறேன். நான் பக்கா கிராமத்திலே வாழ்கிறவன். குடியால் கெட்ட குடும்பங்கள் இன்றைக்கு வாழ்வதற்கே வழியில்லை. எனக்குத் தெரியும். 20 ஆண்டுகளுக்கு முன்னாலே மக்கள் எரி சாராயத்தைத் தான் கண்டிருக்கிறார்கள். ஒரிஜினல் சாராயத்தைக் கண்டிருக்க மாட்டார்கள். அண்ணாதுரை அவர்கள் சொன்னார்கள், கஜானா காலியானாலும், கடனாளியானாலும் மது என்ற விஷத்தை ஊற்றி நான் மக்களுக்குக் கொடுக்க மாட்டேன் என்று சொன்னார்கள். அவர் இங்கே அமரராக இருக்கிறார். அவரை வைத்துக் கொண்டே, 2, மூன்று ஆண்டுகளில் மக்களை குடிகாரர்களாக ஆக்கி அவர்கள் குடிக்கவும் முடியாமல் நிறுத்தவும் முடியாமல் கையிலே பாட்டிலை வைத்துக் கொண்டு ஐயோ, ஐயோ பாழாகி விட்டேன், விட்டுவிடவும் முடியவில்லை என்று சொல்லக் கூடிய நிலைமை தான் இருக்கிறது.

சிகரெட் பிடித்தவனால் அதை விட முடியவில்லை, அதை விடுவதற்குத் திண்டாடுகிறான். ஒரு சின்ன பழக்கம், பொடி போடுவது. அதை விட வேண்டும் என்று தாய் தகப்பன் சொன்னாலும் அவனால் விட முடியவில்லை. அப்படிப்பட்ட நிலையில் குடித்துப் பழக்கப்பட்டவன் அதை விட முடியாமல் திண்டாடுகிறான். ஐயோ அப்பா, குடிக்காவிட்டால் கையாடுகிறது என்கிறான். இப்படிப்பட்ட நல்ல காரியத்தைச் செய்தவர்கள் யார்? தமிழ்நாட்டில் நஞ்சை ஊற்றிக் கொடுத்தவர்கள் யார் என்று கேட்கிறேன். தமிழக மக்கள் மீது அன்பு இருந்தால் இப்படிச் செய்ய முன் வருவார்களா ? தமிழா? நீ வாழ வேண்டும் என்ற எண்ணத்திலே இருந்திருந்தால் ஊற்றிக் கொடுத்திருப்பார்களா ? அப்படிப்பட்ட விஷத்தை ஊற்றிக் கொடுத்து விட்டார்

[திரு. ர. ஜெபமணி] [1979 அக்டோபர் 29

கள். அந்த விஷத்தால் பல இலட்சக்கணக்கான மக்கள் பட்டினி, பாழ் பாழ் பாழ், நாடே பாழ். ஆனால், இன்னும் தமிழ் மக்களைக் காப்பாற்றுகிறேன் என்று சொன்னால் எப்படிப் புரிந்து கொள்வது ?

அது மட்டுமல்ல, பிற்பட்டவர்களுக்கான சலுகைகளைப் பற்றிச் சொல்கிறார்கள். சாதி வேண்டாம், எதுவுமே வேண்டாமென்றுதான் நாங்கள் சொன்னோம். அது எல்லோருக்கும் பொதுவாகவே வர வேண்டும். 15,000 ரூபாய் வருமானத்தைத் தாண்ட முடியாத பாப்பானாக இருந்தாலும், அரிசனாக இருந்தாலும் எல்லோருக்கும் சமமாக வர வேண்டும். '' ஏழை என்றும், அடிமையென்றும் எவனும் இல்லை ஜாதியில், இழிவு கொண்ட மனிதரென்பர் இந்தியாவில் இல்லையே ; வாழி கல்வி செல்வம் எய்தி மனமகிழ்ந்து கூடியே, மனிதர் யாரும்? ஒரு சரி நிகர் சமானமாக வாழ்வமே, '' என்ற அந்த நிலைமை வர வேண்டும். இன்னும் ஜாதிப் பித்து கொண்டிருப்பதா? ஐயா, நான் வசதியற்றவன், ஐயா நான் இன்னும் 15,000 ரூபாய் வருமானத்தைத் தாண்ட முடியவில்லை, என்னுடைய பிள்ளைகளைப் படிக்க வையுங்கள் என்று கேட்டால் அதில் அர்த்தம் இருக்கும். பழையவற்றை மறக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டு மீண்டும் அதைப் புகுத்த வேண்டுமா ? நடந்து கொண்டிருக்கும் அரசாங்கத்திற்கு உதவாமல் இருக்கலாம், ஆனால் உபத்திரவம் செய்து கொண்டிருக்க வேண்டுமா ? நாட்டு மக்களின் நலனைக் கவனிக்க வேண்டாமா? இப்பொழுது நல்ல காலம் வந்து கொண்டிருக்கிறது. நாட்டு மக்களின் வாழ்வு மலரப் போகிறது என்று சொல்லிக் கொண்டு முடிக்கிறேன், ஜெய்ஹிந்த்.

*திரு. மு. ஜான் வின்செண்ட் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இப்பொழுது கொண்டு வரப் பட்டிருக்கும் கண்டனத் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற கடமைப்பட்டிருக்கிறேன். இப்பொழுது தமிழ்நாட்டில் மீனவத் தொழிலாளர்களின் பிரச்சினைகள் பலயிடங்களில் இருந்து கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலே, அதிலும் குறிப்பாகத் தூத்துக்குடிக்கும், கன்னியாகுமரிக்கும் இடையிலே கிட்டத்தட்ட 16 கிராமங்களில் நாட்டுப் படகுத் தொழிலாளர்களுக்கும், விசைப் படகுத் தொழிலாளர்களுக்கும் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 16 கிராமங்களிலும் உள்ள 6,000 நாட்டுப் படகுகளிலே 18,000 தொழிலாளர்கள் பணியாற்றுகிறார்கள். தூத்துக்குடி, வீரபாண்டிப் பட்டணம் போன்ற பகுதிகளிலே விசைப் படகுத் தொழிலாளர்கள் மீன் பிடிக்கச் செல்கிறார்கள். ஆனால் அவர்கள் குறிப்பிட்ட இடத்தைத் தாண்டி அதிக தூரம் சென்று விசைப் படகில் மீன் பிடிப்பதோடு மட்டுமல்ல ; அதில் ஒரு சாதனம் இணைக்கப்பட்டிருக்கிறது, அவ்வாறு இணைக்கப்பட்ட அந்தச் சாதனத்

1979 அக்டோபர் 29] [திரு. மு. ஜான் வின்சென்ட்]

னால் சில சமயங்களில், நாட்டுப் படகுக்காரர்கள் சென்று விரித்திருக்கும் வலைகள் அறுத்துச் செல்லப்படுகிறது அது மட்டுமல்ல, அதிலே இணைக்கப்பட்டிருக்கும் சாதனத்தால் கீழே உள்ள சிறிய மீன்களும், மீன் குஞ்சுகளும், முட்டை போன்ற அனைத்தும் அழிக்கப்படுகின்றன. அதனால் நாட்டுப் படகுத் தொழிலாளர்களுக்கும், விசைப் படகுத் தொழிலாளர்களுக்கும் இடையிலே தகராறுகள் தோன்றுகின்றன. சமீபத்தில் கடந்த செப்டம்பர் மாதத்தில் அங்கே நாட்டுப் படகுத் தொழிலாளர்களுக்கும், விசைப் படகுத் தொழிலாளர்களுக்கும் இடையில் மாபெரும் சண்டை ஏற்பட்டு அதிலே மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும், டி.ஐ.ஜி. அவர்களும் சென்று ஒரு சமாதான உடன்படிக்கையை செய்திருக்கிறார்கள். அப் பகுதியில் உள்ள 16 கிராமங்களைச் சேர்ந்த நாட்டுப் படகுத் தொழிலாளர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். விசைப் படகுகளில் துடுப்பு கீழ்வரை தணிந்துள்ளது போன்ற ஒரு பகுதியை அகற்ற வேண்டும்; குறிப்பிட்ட எல்லையைத் தாண்டி விசைப் படகுத் தொழிலாளர்கள் மீன் பிடிக்கச் செல்லக் கூடாது என்ற கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். தூத்துக்குடியிலிருந்து காலை 6 மணிக்குச் சென்று மாலை 6 மணிக்கு தூத்துக்குடி வர வேண்டும். அதுமட்டுமல்லாமல், அவர்கள் வீச்சு வலையைப் போடாமல் நீள வலையைப் போட வேண்டும் என்றும் சொல்கிறார்கள். இவ்வாறு மூன்று விதமான கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரின் பொழுது, இதுபோன்ற நிலைமை சென்னையிலே ஏற்பட்டது.

[முற்பகல் 11—00]

ஆகவே நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடியிலிருந்து, குமரி மாவட்டத்தில் குமரிப் பகுதிவரையில் இருக்கிற 16 கிராமங்களைச் சேர்ந்த மீன் பிடித் தொழிலாளர்களது பிரச்சனைகளை அரசு சார்வுகட்சி ரீதியிலே அணுகி, ஒரு சுமுகமான, நல்ல உடன்பாட்டை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விசைப் படகுக்காரர்கள், தூத்துக்குடிப் பகுதியிலே காலை 6 மணிக்கு தூத்துக்குடியிலிருந்து சென்றால் மாலை 6 மணிக்குத் தூத்துக்குடிக்கே திரும்பி விடவேண்டுமென்று வரையறுக்கப்படவேண்டும். நாட்டுப் படகுத் தொழிலாளர்கள் தொழில் பாதிக்கப்படக்கூடாது என்ற காரணத்திற்காக இப்படி ஒரு வரையறை செய்யப்பட்டு இதனால் நாட்டுப் படகு வைத்துப் பிழைப்பவர்கள், அதிலே சென்று மீன் பிடித்து வரக்கூடிய வருமானத்திலே தங்களது குடும்பத்தைக் காப்பாற்றக் கூடியவர்கள் பாதிக்கப்படாத அளவிற்கு இது சுமுகமாக செயல்படுத்தப்பட வேண்டும்.

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1979 அக்டோபர் 29

அடுத்து, மதுவிலக்கைப் பொறுத்த வரையில் இந்த அரசு ஒரு நிலையான கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். குடித்ததற்காகக் கைதுசெய்யப்பட்டவர்களைத் திடீரென்று. விடுதலை செய்வதாகப் பத்திரிகைகளில் பார்க்கிறோம் கிராமங்களிலே குடித்துவிட்டு பல இன்னல்களை, இடையூறுகளைச் செய்கின்ற சிலரைப் பார்க்கின்ற நேரத்தில் மிகவும் வேதனையாக இருக்கிறது. இதைப் பற்றி மக்களே கூட முதலமைச்சரிடம் அதிகமாக முறையிட்டிருக்கின்றார்கள். எனவே இதில் ஒரு நல்ல நிலையான கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.

அடுத்து பஞ்சாயத்துக்களைக் கலைப்பதைப் பற்றிக் கூறினார்கள். பஞ்சாயத்துக்களைக் கலைத்து விட்டதால் ஸ்பெஷல் ஆபிஸர்களைப் போட்டு நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஊராட்சி மன்றங்கள் ஒன்றியங்கள் தலைவர்களால் நடைபெற்றுக் கொண்டிருந்த போது கூட, ஊராட்சி ஒன்றியத் தலைமைக் கவுன்சில் நடந்து கொண்டிருந்த நிலையிலே கூட பல குறைகள் நிறைவேற்றப்படவில்லை. ஸ்பெஷல் ஆபிஸர் நிர்வாகத்தில் கிராமங்களில் குடிநீர் பம்புகள் கூட ரிப்பேர் செய்யப்படாத நிலையைப் பார்க்கிறோம். ஒன்றியத்திலுள்ள பி.டி.ஓ. டி.டி.ஓ. ஆகியவர்களை மக்கள் சந்தித்துத் தங்கள் குறைகளைத் தெரிவித்தால் சரியான பதில் கூடக் கிடைப்பதில்லை. சட்ட மன்ற உறுப்பினர்கள், மக்கள் குழு உறுப்பினர்கள், மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலே பல யோசனைகளைக் கூறினாலும் கூட, ஊராட்சி மன்றப் பகுதியிலே நல்ல முறையிலே வேலைகள் நடைபெறுவதில்லை. ஆகவே அரசு அதிகாரிகள், நல்ல முறையிலே பணியாற்றாத ஸ்பெஷல் ஆபீசர்களின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்.

வேலைக்கு உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் அரிசி கொடுக்கப்படுகின்றது. ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கிற சாலைகள் கூட சரியாகப் பராமரிக்கப்படுவதில்லை. இத் திட்டத்திலே கான்ராக்டர்கள்தான் பயன் பெறுகிறார்கள். இந்தத் திட்டத்தை மக்கள் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை எனவே அரசு வேலைக்கு உணவு தரும் திட்டத்தை சீரமைத்து எல்லா மக்களுக்கும் பலன் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

அடுத்து விவசாயிகள் பிரச்சனை. எல். டி. பம்புகிடமிருந்து விவசாயிகள் கடன் பெற்று மோட்டார் வைத்து 10,15. ஆண்டுகள் ஆகியும் மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கிறார்கள். இப்போது சீரியல் எண் அடிப்படையில் வரிசையின் அடிப்படையில் மின் இணைப்புக் கொடுப்பதாகச் சொல்லுகிறார்கள். எங்கள் பகுதியிலே, மணிமுத்தாறு பாசன வசதியை எடுத்துக் கொண்டால், சுமார் 40 மீட்டர் தூரம்

1979 அக்டோபர் 29] [திரு. மு. ஜான் வின்சென்ட்]

உள்ள மோட்டார்களுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்பட வில்லை. காரணம் கேட்டால், மின்சார இலாகா, பொதுப் பணித்துறையிடமிருந்து "நோ அப்ஜக்ஷன் சான்றிதழ்" பெற்றுத் தரவேண்டுமென்கிறார்கள். என்னுடைய நாங்குனேரி தொகுதியில், மணிமுத்தாறுப் பாசனத்தில், பானாங்குளம் டிவிஷன் பகுதியில் செல்லம்மாள் என்கிற அரிஜனப் பெண் 13 ஆண்டு காலத்திற்கு முன் கனரா பேங்கில் லோனில் மோட்டார் வாங்கி வட்டி கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இத்தனை காலம் ஆகியும் இந்த அரிஜனப் பெண்ணிற்கு லோன் பம்புசெட்டுக்கு மின் இணைப்புக் கொடுக்கவில்லை. காரணம் கேட்டால் "நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்" வேண்டும் என்கிறார்கள். சீப் இன்ஜினியரிடம் "நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்" கேட்டால் அவர் அரசாங்கத்தில், செக்ரட்டரி அவர்களிடத்திலே நாங்கள் கேட்க வேண்டும் என்று கூறுகிறார்கள்.

ஆகையால், இப்படிப்பட்ட முறையில் வங்கியில் கடன் எடுத்து, மோட்டார் வைக்கிற ஏழை விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கக் கூடிய அளவில், உடனடியாக 'நோ அப்ஜெக்ஷன் சர்டிபிகேட்' கொடுக்கவேண்டும். இது குறித்து பல முறை சீப் இன்ஜினியரிடத்திலும், விவசாயத்துறை அமைச்சரிடத்திலும், பொதுப்பணித்துறை அமைச்சரிடத்திலும், நாங்கள் பல முறை புகார் கொடுத்தும், எத்தகைதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, போக்குவரத்துத் துறை, அதைப் பார்க்கிற நேரத்தில், இன்று தமிழகத்தில் அநேக இடங்களுக்கு டவுன் பஸ் வசதி நல்ல முறையில் செய்யப்பட்டு இருப்பதால், நான் மதிப்பிற்குரிய போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், தற்போது 25 கிலோ மீட்டர் தூரத்திற்கு டவுன் பஸ் விடப்படும் என்று அறிவிக்கப் பட்டிருக்கிறது. இது குறித்து, வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும், மக்கள் மன்றத்திலும் தீர்மானம் போட்டு இருக்கிறோம். 30 கிலோ மீட்டர் வரையில் இந்த டவுன் பஸ் அனுமதிக்கப்படவேண்டும். அப்படிச் செய்வதன் காரணமாக பல்வேறு கிராமங்களுக்கு பஸ் வசதி ஏற்படும் என்று சொல்லி தீர்மானம் போட்டு இருக்கிறோம். அதற்கு அமைச்சர் அவர்கள், பல்வேறு ஒன்றிய கிராமங்களுக்கு ரோடு வசதி இல்லையென்றும், நிதி நிலை இல்லாத காரணத்தால் ஒன்றியங்கள் ரோடுகளைச் சரியாகப் போடவில்லை என்றும் கூறினார்கள். நான் சொல்ல விரும்புவது இப்போது கொடுக்கப்படுகின்ற வேலைக்கு உணவு வழங்கு திட்டத்தின் கீழ், அனைத்துகிராமங்

[திரு. மு. ஜான்ஃபின்சென்ட்] [1979 அக்டோபர் 29

களுக்கும் ரோடுகளை நல்ல முறையில் போடப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல, 25 கிலோ மீட்டர் என்று இருப்பதை மாற்றி, 30 கிலோ மீட்டர் வரையில் டவுன் பஸ் விடலாம் என்கிற அறிவிப்பு அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அனைத்து மாவட்டங்களிலும், இன்றைக்கு டவுன் பஞ்சாயத்துக்களை நகரங்களாக மாற்றி டிக்ளேர் செய்து வருகிறார்கள். சமீபத்தில் வள்ளியூருக்கு அருகாமையில் இருக்கும் நாங்குனேரியையும் நகரம் என்று அமைச்சர் அவர்கள் மேடையிலேயே அறிவிப்பு செய்தார்கள். ஆகவே, அதைப்போலவே களக்காடு மூலைக்கரைப்பட்டி பேரூராட்சிகளையும் நகரம் என்று டிக்ளேர் செய்து, அங்கிருந்து டவுன் பஸ்கள் எல்லா கிராமங்களுக்கும் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர்கள் போராட்டங்கள் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். ஆசிரியர்கள் 10 அம்ச கோரிக்கைகள் வைத்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். அவர்கள் கேட்கிற கோரிக்கை, நகரத்தில் உள்ள ஆசிரியர்களுக்குக் கிடைக்கும் பல்வேறு சலுகைகள் கிராமப்புறங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கும் அளிக்கப்படவேண்டும் என்பதும் அடங்கியிருக்கிறது. நகரப்புறங்களில் இருக்கும் ஆசிரியர்களுக்கும், கிராமப்புறங்களில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இடையே எந்தவிதமான பாகுபாடும் இருக்கக்கூடாது. அந்த அடிப்படையில் அந்த ஆசிரியர்களின் 10 அம்ச கோரிக்கையை அரசு நல்ல முறையில் பரிசீலித்து ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ரோடு பாலங்கள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். சில பாலங்கள் ஊராட்சி ஒன்றியங்களில் சேர்க்கப்பட்டு இருப்பதால், அதில் பாலங்கள் அமைப்பது என்றால் அதற்காக பொதுப்பணித்துறையைக் கேட்க வேண்டும், அவர்கள்தான் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். பொதுப்பணித்துறையிடம் கேட்டால், நாங்கள் என்.ஓ.சி. தான் கொடுப்போம் உங்களுக்குப் பாலம் கட்ட உரிமை இல்லை என்று சொல்கிறார்கள். இதனால், சில பாலங்கள் அது மணிமுத்தாறு அல்லது தாமிரபரணி என்று எது இருந்தாலும் அவற்றிற் கிடையே பாலங்கள் கட்டப்படாமல் இருக்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் திட்டவட்டமாகச் சொல்ல வேண்டும். ஒன்று பொதுப் பணித்துறை கட்டவேண்டும் அல்லது ஊராட்சி ஒன்றியம் கட்ட வேண்டும் அல்லது அதை ஆர். ஆர். ஸ்கீமில் கட்டவேண்டும் என்று தெளிவாகச் சொல்ல வேண்டும். ஏனெனில், பல இடங்களில் இப்படிப்

1979 அக்டோபர் 29] [திரு. மு. ஜான். வின்சென்ட்]

பட்ட பாலங்கள் கட்டப்படாமல் இருப்பதால், போக்கு வரத்து மிகவும் சீராக இல்லாமல் இருக்கிறது. பெரிய கிராமங்கள் முன்னேற்றம் அடையவேண்டும் என்றால் நல்ல முறையில் ரோடு வசதி செய்யப்பெறவேண்டும். இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கபட்டு, அரசாங்க அதிகாரிகள் அதனை நிர்வகித்து வருவதால், இந்த ரோடு போடுவது குறிப்பாக சிறப்பாக செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஹையர் செகன்டரி பள்ளிகள் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பள்ளிகள் தொடங்கி தற்போது இரண்டாவது ஆண்டு நடந்து சொண்டு இருக்கிறது. இந்த ஆண்டு மாணவர்கள் இறுதித் தேர்வுக்குச் செல்ல இருக்கிறார் கள். ஆனால் போதுமான கட்டிட வசதி இல்லாமல் பல்வேறு இடங்களில் அப்பள்ளிகள் நடந்து வருகின்றன. விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் இல்லை. அனைத்து பள்ளிகளில் குறிப்பிட்ட பரீட்சைகள் கல்வி ஆண்டில் கடைசியாகப் நடைபெற இருக் கிறது. ஆனால் போதிய ஆய்வுக் கூட வசதி இல்லை. இந்தக் குறைபாட்டினால் அந்தப் பள்ளியில் படிக்கும் குழைந்தைகள் நல்ல முறையில் பயில முடியாமல் இருக்கிறார்கள் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[முற்பகல் 11-10]

இந்த ஆண்டிலே பரீட்சை விரைவில் நடைபெற இருக்கின்ற இந்த நேரத்தில், அனைத்து ஹையர் செகண்டரி பள்ளிகளிலும் விஞ்ஞான கூடங்களை நல்லமுறையில் ஏற்படுத்தி, விஞ்ஞான கருவிகளையும் உடனடியாக வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்; தேவையான பாட புத்தகங்கள் எல்லா இடங்களிலும் உடனடி யாகக் கிடைக்கவும் ஆசிரியர் நியமிக்காத இடங்களை நிரப்பவும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அரசை கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள். பெரும்பா பாலான இடங்களில் கட்டடங்கள், தளங்கள் மோசமாக இருக் கின்றன. உதாரணத்திற்கு இரண்டை மட்டும் குறிப்பிடுகிறேன். என்னுடைய தொகுதியில் நான்குநேரி ஊராட்சி ஒன்றியத்தில் தோட்டாகுடி என்று ஒரு கிராமம் இருக்கிறது. அங்கே ஒரு பள்ளி இருக்கிறது. அதனுடைய தளங்கள் எல்லாம் பிடிந்து, நஞ்சை நாற்று நடும் வகையில் புழுதி படிந்து குண்டும் குழியுமாக இருக்கிறது. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் அதைப் பற்றி நான் பேசியிருக்கிறேன். சம்பந்தப்பட்ட பி.டி.ஓ-வுக்கும் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதைப்போல மூலக்கருப்பட்டி என்ற கிராமத்திலும் ஊராட்சி ஒன்றியப் பள்ளி இருக்கிறது. தளங்கள் சரியாக இல்லாததால், குழந்தைகள் பாதிக்கப்படுகிறார் கள், அது அரசின் குற்றமல்ல; அங்கே இருக்கிற அதிகாரிகள்

[திரு. மு. ஜான் வின்சென்ட்] [1979 அக்டோபர் 29

துரிதமாக நடவடிக்கை எடுக்காததுதான் என்று கருதுகிறேன். துரித நடவடிக்கை எடுக்க உடனடியாக அரசு நடவடிக்கை எடுத்து, அந்த வேலைகளை முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நெல்லை மாவட்டத்தில் பனை ஏறும் தொழிலாளர்கள் அதிக மாக இருக்கிறார்கள். அவர்கள் மரத்திலிருந்து விழுந்து இறந்து விட்டால் உதவித் தொகை வழங்க அரசு உத்தரவிட்டிருக்கிறது. அதன்படி மரணம் அடைந்தவர் குடும்பத்தினர், மனைவி, மக்கள் அங்கே இருக்கிற அரசு அலுவலகத்திற்குச் சென்று, மருத்துவ சர்டிபிகேட் மற்றும் பல அத்தாட்சிகளை கொடுக்கிறார்கள். ரெவின்யூ டிபார்ட்மெண்ட் சர்டிபிகேட்டையும் கொடுக்கிறார் கள். அப்படி இருந்தபோதிலும் இப்படிப்பட்ட மனுக்கள் கிட்டத்தட்ட 66-க்கு மேற்பட்டவை பைசல் செய்யப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன. அதிகாரிகள் சரியான பதில் கூறுவதில்லை. உதவித்தொகை வேண்டுமென்று அந்தபெண்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட நேரங்களில் ரெவின்யூ அதிகாரிகள் மிகவும் ஆமை வேகத்தில் செயல்படுவதால், அந்தப் பெண்களுக்கு உதவித்தொகை வழங்குவதற்கான ஏற்பாடு களைச் செய்துகொடுக்கும் மார்க்கம் இல்லை என்று அமைச்சர் அவர்களிடம் தெரிவித்து இருக்கிறோம். அவர்கள் அதுபற்றி விசாரித்தார்களோ இல்லையோ, தெரியவில்லை. உடனடியாக சம்பந்தப்பட்ட ரெவின்யூ அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பி, பனை ஏறும் தொழிலாளர்கள் கீழே விழுந்து மரணம் அடைந்தால் உடனடியாக தொகையைக் கொடுக்க வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். அதற்கு வாய்க்கால்களுக்கு சிமென்ட் லைனிங் செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். உடனடியாக இவ்வளவு தூரத்திற்கு சிமென்ட் லைனிங் கொடுக்க பொருளாதார வசதி இல்லை; சிறுக, சிறுக ஒவ்வொரு இடமாக, ஒவ்வொரு பாயின்டாக முடித்துக் கொடுப்போம் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இன் றைய சூழ்நிலையில் அங்கே லைனிங் செய்து கொடுத்தால், அத னால் சுகிவு ஏற்படாமல், தண்ணீர் மிச்சமாகி, அதிகமாக பாசன வசதி அளிக்க முடியும். இப்போது பக்கத்திலுள்ள பம்ப் செட்டு களுக்கு மின்னிணைப்புக் கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டிருப் பதால் அதனை நிவர்த்தி செய்ய இந்த வசதியை உடனடியாகச் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பல்வேறு நேரங்களில் கொடுமுடியாறு திட்டம், மணிமுத்தாறு தனிக்கால் திட்டம், பச்சையாறு திட்டம் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறேன். இந்தத் திட்டங்கள் நிறை

1979 அக்டோபர் 29] [திரு. ஜான் வின்சென்ட்]

வேற்றப்பட்டால் எங்கள் பகுதியில் பாசன வசதி பெருக வாய்ப்பு இருக்கிறது. குறிப்பாக பச்சையாறுத் திட்டம் வருமா? கொடு முடியாறு திட்டம் வருமா என்று மக்கள் ஏக்கத்தோடு எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். மிக விரைவிலேயே அங்குள்ள மக்களின் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில், கொடுமுடி யாறு, பச்சையாறு திட்டங்களை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொண்டு, எனக்கு பேசுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பைக் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. க. சுப்பு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த அரசினமீது கொடுக்கப்பட்டிருக்கிற பல்வேறு கண்டனத் தீர்மானங்கள் இருந்தாலும் எங்கள் கட்சியின் துணைத் தலைவர் பேராசிரியர் அவர்கள் இந்த அரசின்மீது கொடுத்திருக்கிற கண்டனத் தீர்மானத்தின் அடிப்படையில் என்னுடைய கருத்துக் களைக் கூற விரும்புகிறேன்.

இந்தக் கண்டனத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் முக்கிய எதிர்க்கட்சியாக இருக்கின்ற திராவிட முன் னேற்றக் கழகத்திற்கு அந்த உரிமை இருக்கிறது. ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தபோது தவறுகள் நடந்தன என்ற காரணத்தால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கிறது. ஆகவே, இந்த ஆட்சியிலே நடைபெறுகின்ற தவறுகளை சுட்டிக்காட்டுவது எங்க ளுடைய கடமையாகும். அதனால் நாங்கள் இந்தத் தீர்மானத் தைக் கொடுத்திருக்கிறோம். இந்தத் தீர்மானத்தை சில கட்சி யினர் ஆதரிக்கிறார்கள் ; சில கட்சியினர் எதிர்க்கிறார்கள் ; சில கட்சியினர் ஒன்றும் சொல்லாமல் இருக்கிறார்கள்; அவர்கள் நடுநிலைக் கட்சி ; பரவாயில்லை ; அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழக அரசு சரி யாகச் செயல்படவில்லை என்று சொல்லி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்திருப்பதால் இந்த ஆட்சியிலே நடைபெறுகின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டுவது எங்களுடைய தலையாய கடமையாக இருக்கிறது. காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஓ. எஸ். வேலுச்சாமி அவர்கள் இந்தத் தீர்மானத்தின் மீது பேசும்போது தெளிவான பல கருத்துக்களைச் சொன்னார் கள் ; பேராசிரியர் அவர்களும் சொன்னார்கள்.

பெரியவர் அவர்கள் சொன்னார்கள். அடிக்கடி இப்படித் தீர்மானங்கள் கொண்டு வருவதுபற்றி வருத்தப்பட்டார்கள். ஒரு வகையில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். இப்படி நாங்கள் தீர் மானம் கொண்டுவருவதால் தானே, நீங்கள் எல்லாம் பேச முடிகிறது ? இல்லாவிட்டால் பேசுகின்ற வாய்ப்பே இருக்காது. ஆனால், இந்த தீர்மானத்தை விவாதிக்கலாமா, வேண்டாமா என்றபோது மவுனமாக இருந்தார்கள். வாக்கெடுப்பிற்குகூட

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்

[திரு. க. சுப்பு] [1979 அக்டோபர் 29

மறுத்து விட்டார்கள். இந்தத் தீர்மானத்தின் மூலமாக அரசாங்கத்தின் கொள்கையைப் பற்றி விவாதிக்கலாமா, வேண்டாமா என்ற ஒரு சாதாரண நடவடிக்கையிலேகூட, வாக்கெடுக்கும் போது சும்மா உட்கார்ந்துகொண்டு, நிலையற்ற நிலையில் இருந்தார்கள் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

வழக்கமாக ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. தீர்மானம் ஏதாவது கொடுத்தால், சபையிலே பேச விரும்புவதில்லை. இப்போது ஜே. பி. அவர்கள் மறைவு குறித்து ஒரு தீர்மானம் கொடுக்கப்பட்டது. இது வழக்கமாக வருவதில்லை. என்றோ ஒரு நாள் வருகிறது. அதற்கு முதலமைச்சர் அவர்கள் வருவதில்லை. இது வழக்கத்திற்கு விரோதமானது. அவர்களுக்கு உடல்நலம் சரியில்லை என்று சொல்லப்படுகிறது. மூக்கையா தேவர் அவர்கள் மறைவு குறித்து தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதுவும் வழக்கமாக வருவதில்லை. அதிலும், பார்வேர்ட் பிளாக்கைச் சேர்ந்தவர்கள் தங்கள் கருத்தைச் சொல்ல முடியவில்லை. பரவாயில்லை. இதுவும் வழக்கத்திற்கு விரோதம்.

சில பேர்கள் அனுமதிக்க முடியாத கருத்தைத் தெரிவித்தார்கள். ஜெபமணி போன்ற பெரியவர்கள், என்ன ஏற்படுமோ என்று சிலர் புரியாமல் இருந்தார்கள். நாட்டிலே எது நிலையான போக்கு என்பது புரியாமல் சில பேர்கள் இருந்தார்கள். ஆனால், ஜேம்ஸ் அவர்கள் நிலையானவர். அவர் ஒரு விஷயத்தைத் தெளிவாகச் சொன்னார்கள். 'இது ஒரு கொலைகார அரசு, இது ஒழிய வேண்டும்' என்று சொன்னார்கள். முதல் அமைச்சர் அவர்கள்கூட அதற்கு வருத்தப்பட்டார்கள் .....

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, 'கொலைகார அரசு' எனறு சொனனேனே தவிர, 'இது ஒழிய வேண்டும்' என்று சொல்லவில்லை. அதைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

திரு. க. சுப்பு : ரொம்ப நன்றி. இவைகள் எல்லாம் சட்ட மன்ற நடவடிக்கைக் குறிப்பிலே இருக்கின்றன. முதல் அமைச்சர் அவர்கள் வருத்தப்பட்டுச் சொன்னார்கள். எனவே, அடிப்படையிலே தவறு இல்லை.

> ''இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
> கெடுப்பார் இலானும் கெடும்''

என்று வள்ளுவர் கூறியுள்ளார். இடிப்பார் இல்லாமலேயே மன்னன் கெட்டுப் போவான். மன்னனுக்கே அந்தக் கதி என்றால், மன்னாதி மன்னனுக்கு என்ன கதி? சொல்ல வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது. அப்படி சொல்லும்

1979 அக்டோபர் 29] [திரு. க. சுப்பு]

போது முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார். 'மாணவன் படிக்கும்போதே வேலைகொடுக்க வேண்டியது அரசின் பொறுப்பு; அதேபோல் குழந்தை பிறந்தவுடன் அது இந்த நாட்டிற்குச் சொந்தம்' என்று நாடோடி மன்னனில் நம் முதல்வர் அவர்கள் சொன்னார்கள். நாடோடி மன்னனுக்கு முன்பு ஒரு வேளை இப்படி இருந்திருக்க முடியும்.

நான் சொல்வதைச் சற்றுப் பொறுமையாகக் கேட்கவேண்டும். ஆளும் கட்சித் தரப்பிலே யாருமில்லை. முதல்வரே இல்லை; அப்படி இருக்கும்போது அவர்களைச் சொல்லி என்ன பிரயோஜனம்.

நான் 3, 4 ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்திருந்தேன். சேஷசாயி பேப்பர் மில்ஸ், காவேரி என்ஜினியரிங் ஒர்க்ஸ் மூடியிருப்பது பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அவைகளுக்கு எல்லாம் அனுமதி அளிக்கப்படவில்லை. அவைகளைப்பற்றியெல்லாம் கண்டனத் தீர்மானத்திலே பேசிக் கொள்ளலாம், அப்போது வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லப் பட்டது. ஆனால், பேசினால் அதற்கெல்லாம் பதில் சொல்வதற்கு யார் இருக்கிறார்கள்? பதில் வருமா? முதல் அமைச்சர் அவர்கள் இல்லை. ஆளும் கட்சி உறுப்பினர்கள் இடங்களும் காலியாக இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் பதில் சொல்ல, பொறுப்பாக முதலமைச்சர் அவர்கள் இங்கே வந்திருக்க வேண்டும். 3, 4, நாட்களாக சட்டமன்ற கூட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அவரால் வர முடியவில்லை. ஜே.பி. அவர்கள் மறைவு குறித்த தீர்மானத்திற்குக் கூட அவர்களால் பேச வர முடியவில்லை. தொண்டைக் கோளாறு என்று சொல்கிறார்கள். தொண்டைக் கோளாறு என்றால், இங்கே வந்து உட்காருவதற்கு என்ன கஷ்டம்? மறைந்தவருக்கு அஞ்சல் செலுத்தக்கூடவா வர முடியவில்லை? இங்கே சொல்லுகின்ற கருத்துக்களுக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டும். வரவாற்றிலே இப்படிப்பட்ட கண்டனத் தீர்மானம் வந்ததில்லை. நான் வருத்தப்படுகிறேன்; அனுதாபப் படுகிறேன்.

எத்தனை அவசரச் சட்டங்கள் வந்திருக்கின்றன? டைரக்டர் ஜெனரல் ஆப் போலீசுக்காக ஒரு அவசரச் சட்டம். மற்றும் 3 ஐ.ஜி. ஆப் போலீசுக்கு அவசரச் சட்டம். குதிரைப் பந்தயத்திற்கு ஒரு அவசரச் சட்டம். இந்த டர்பை ஒழிப்பதற்கு ஒரு அவரசச் சட்டம். இப்படி பலவற்றிற்கு அவசரச் சட்டங்கள் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

[முற்பகல் 11-20]

ஆக, அவசரச் சட்டம், அவசரச் சட்டம் என்றால் என்ன வென்றே தெரியவில்லை. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஆர்வனன்ஸ். எல்லாமே அவசரச் சட்டங்கள். இந்த ஆர்டினன்ஸ் போடுவதின் விளைவுகள் என்ன? சட்டமன்றம் கூடி ஆறு

[திரு. க. சுப்பு] [1979 அக்டோபர் 29

வாரத்திற்குள் ஆர்டினன்ஸ் சட்டமாக்கப்பட வேண்டும். அதற்கு ஆளும் கட்சியில் உள்ளவர்கள் கையுர்க்குகிறார்கள். அது அவர்களது பயிற்சி. ஆளும் கட்சியில் உள்ளவர்கள் யாராவது அமெண்ட்மெண்ட் கொடுக்கப்போகிறார்களா ? ஆளும் கட்சியில் இருப்பவர்கள் எப்போதாவது அப்படி அமெண்ட்மெண்ட் கொடுத்திருக்கிறார்களா, கொடுத்ததே கிடையாது. ஆர்டினன்ஸ் கொண்டு வந்துவிட்டு நிர்ப்பந்தப் படுத்தி அதைச் சட்டமாக்குவது என்ன முறை என்று கேட்கிறேன்?

மதுவிலக்குச் சட்டத்தில் உள்ள கோளாறுகள் பற்றி பல வேறு உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லி அந்தச் சட்டம் தோற்றுவிட்டது என்று சொன்னார்கள். அரசாங்கத் தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டது. பெரியார் நூற்றாண்டு விழாவில் முதல் அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், குடித்துவிட்டு தண்டனை பெற்றிருப்பவர்களை விடுதலை செய்கிறோம் என்று. அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று பெரியார் சொன்னாரா ? குடித்தவர்களை விடுதலை செய்ய வேண்டும், அவர்களை வெளியே விட்டுவிட வேண்டும் என்று பெரியார் சொல்லியிருக்கிறார்களா ? அப்படியானால், மதுவிலக்குச் சட்டத்தையே கொண்டு வந்திருக்க வேண்டாமே. பெரியார் கொள்கைக்கும் இந்தச் சட்டத்திற்கும் இடையே முரண்பாடு இருந்தால் சட்டத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டாமே. அவர் பெயரை ஏன் கெடுக்கிறீர்கள்? குடித்து விட்டு தண்டனை பெற்றவர்களை விடுதலை செய்கிறோம் என்று முதல் அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார் பெரியார் நூற்றாண்டு விழாவில். சட்டம் தோற்றுவிட்டது என்றால் அந்தச் சட்டத்தையே 'ஸ்க்ராப்' செய்து விடலாமே. ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பேர்கள்மீது வழக்கு இருக்கிறது, அவர்களை விட்டுவிடுவது என்றால், அவர்கள் பேரில் உள்ள வழக்குகளை வாபஸ் வாங்குவது என்றால் அந்த வழக்குகளை எப்படி முதல் அமைச்சர் அவர்கள் வாபஸ் வாங்கமுடியும் ? கோர்ட்டில் பெட்டிஷன் பைல் செய்துதான் கேஸ்களை 'வித்ட்ரா' செய்யலாம். கே.ஏ.கே. இருக்கிறார், அவருக்கு சட்டம் தெரியும். சட்ட அமைச்சர் இருக்கிறார். இராகவானந்தம் கொஞ்சம் கொஞ்சம் தெரிந்தவர். ஒரு வழக்கு போட்டுவிட்டால் அதை வித்ட்ரா செய்ய வேண்டுமென்றால், கோர்ட்டில் ஒரு பெட்டிஷன் பைல் செய்துதான் அதை வித்ட்ரா செய்ய வேண்டும். ஜார்ஜ் பர்னான்டஸையா விடுதலை செய்யப் போகிறீர்கள் ? அவர் குடித்ததற்காகவா சிறையில் தள்ளப்பட்டார். பரோடா டைனமைட் கேஸில் அவர் கைது செய்யப்பட்டார். ஆகவே, அவர் விடுதலை செய்யப்பட்டார். குற்றம் செய்து தண்டிக்கப்பட்டவர்களை விடுதலை செய்வது என்றால், கேஸை வாபஸ் வாங்குவது என்றால் கோர்ட்டில் பெட்டிஷன் பைல் செய்து வழக்கை வாபஸ் வாங்க வேண்டும்.

1979 அக்டோபர் 29] [திரு. க. சுப்பு]

அப்படிச் செய்யாமல் இன்று கோர்ட்டுகள் உங்கள் கைப் பாவையாக மாற்றப்பட்டிருக்கிறது. முதல் அமைச்சர் அவர்கள் தாமாக விடுதலை செய் என்று சொல்ல முடியாது. மதுவிலக்குச் சட்டத்தில் உள்ள ஷரத்துக்களின்படி அதற்கு விரோதமாக யார் பேசினாலும்கூட அவரை கைது செய்யலாம். சட்டத்தில் அப்படி இருக்கிறது. அதற்கு விரோதமாக யார் பேசினாலும் தவறு. முதல் அமைச்சர் அவர்கள் கூட பேசக் கூடாது. முதல் அமைச்சரை ப்ராஸிக்யூட் செய்ய வேண்டுமென்று கேட்டால் யார் செய்வது? வேதாளம் முருங்கை மரத்தில் ஏறுவது போல், சைத்தான் வேதம் ஓதுவதுபோல் இருக்கிறது. சட்டத்தை மீறி யார் நடந்தாலும் அவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். நான் அந்தச் சட்டத்திற்கு விரோதமாகப் பேசினால்கூட என்மீது நடவடிக்கை எடுக்கலாம். ஆகவே, குடித்தவர்களை விடுதலை செய்கிறோம் என்று எப்படி முதல் அமைச்சர் சொல்ல முடியும். தான் அதை நேராகச் சொல்லாமல் மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் — ரொம்பவும் நெருக்கமானவர்கள் — டால சுப்பிரமணியம் அவர்கள் இளிமேல் குடிப்பவர்களையும் பிடிக்கமாட்டேன் என்று என்னிடம் சொன்னார் என்று அவர் சொல்லியிருக்கிறார். இவர் என்ன அவரது ஏஜெண்ட்டா? பாலசுப்பிரமணியம் பொய் சொல்லமாட்டார். முதல் அமைச்சர் சொல்லமாட்டார் என்று சொல்லவில்லை. குடிப்பவர்களைப் பிடிக்காதீர்கள் என்று சொல்கிறார்கள். குடித்தவர்களின்மேல் உள்ள கேஸ்களை வாபஸ் வாங்குகிறோம் என்று சொன்னால் அந்தச் சட்டத்தையே ரத்து செய்துவிடலாமே.

ஆர்டினன்ஸ் போட்டு பஞ்சாயத்துக்கள் எல்லாம் கலைக்கப்பட்டிருக்கின்றன. திரு. ஜெபமணி அவர்கள்கூட வருத்தப்பட்டார்கள். வருத்தப்படட்டும். பஞ்சாயத்துக்களை கலைப்பது என்றால் ஏதாவது நிர்வாக ஊழல்கள் இருந்தால் அவற்றைக் கலைக்கலாம்.

நிர்வாகச் சீர்கேடுகள் இருந்தால் யூனியன்களைக் கலைக்கலாம். ஆனால் எல்லாப் பஞ்சாயத்துக்களையும் கலைத்திருக்கிறார்கள் ஆர்டினன்ஸ் மூலம். எல்லாப் பஞ்சாயத்துக்களிலும் நிர்வாகச் சீர்கேடு இருந்தால் அதிகாரிகளுக்கு பொறுப்பில்லையா ? அதிகாரிகளுக்கு பொறுப்பு என்று வரும்போது அமைச்சர் அவர்களுக்கு பொறுப்பில்லையா? அமைச்சரவைக்கு பொறுப்பில்லையா? கொள்கை தோற்றுவிட்டது என்றால் ராஜிநாமா செய்ய வேண்டும்.

காவல் துறையாக இருந்தாலும் சரி அல்லது எந்தத் துறையாக இருந்தாலும் எல்லாக் கொள்கைகளிலும் தோல்விதான். ''லெப்ட் டெமாக்ரட்டிக் போர்ஸ்'' ஒன்றுசேரப் போகிறார்களாம். கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாத கோவிந்தன் வானத்தைக் கிழித்து வைகுண்டம் போக வழி காட்டுவது

[திரு. கு. சுப்பு] [1979 அக்டோபர் 29

போல் என்று பழைய சபாநாயகர் சொன்னதாக நினைவு. சடைக்குள்ளே வரத் தெரியாமல் இருக்கிறார்களே, அவர்களுக்காவது வழி காட்டட்டும். கொள்கைகள் பற்றிப் பேசுகிறார்கள். கே.ஏ.கே. அவர்கள் பெரியார் மாவட்டத்தில் 11 இலட்சம் ரூபாயில் தீப்பெட்டித் தொழிற்சாலை தொடங்கப் போவதாகச் சொல்லி பத்திரிகைகளில் செய்தி வந்திருக்கிறது. முதல் அமைச்சர் சொல்லியிருக்கிறார், தீப்பெட்டித் தொழிற்சாலை இராமநாதபுரம் மாவட்டம் தவிர வேறு எந்த மாவட்டத்திலும் தொடங்க அனுமதி அளிக்கப் போவதில்லை என்று தீப்பெட்டித் தொழிற்சாலையை ஒரு மாவட்டத்தில் வைப்பது என்பது ஒரு பாலிசி டிவிஷனா என்று கேட்கிறேன். ஒரு மாவட்டத்தில்தான் தீப்பெட்டித் தொழிற்சாலை வைக்க வேண்டும் என்று எந்தச் சட்டத்தில் இருக்கிறது? ஒரு அமைச்சர் இப்படிப் பேசுகிறார், முதல் அமைச்சர் இப்படிப் பேசுகிறார். அமைச்சர் சரஸ்வதி அவர்கள் திருமங்கலத்தில் பட்டுப்பூச்சி வளர்த்து ஊரையே பட்டாக்குவோம் என்று சொல்லியிருக்கிறார். அந்தந்த ஊர்களுக்குச் செல்லும்போது அந்தந்த இடத்திற்குத் தக்கபடி பேசுகிறார்கள். இப்போது நாட்டிலுள்ள பிரச்சினைக்கு வருவோம். இந்த அமைச்சரவையைப் பொறுத்தவரை போர்ட் போலியோவை மாற்றினார்கள். அமைச்சர் பொன்னையன் அவர்கள் முன்னால் சொன்னார்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த நேரத்தில் ரேஷனலை சேஷன் எல்லாம் கிடையாது, அலாக்கேஷன் ஆப் போர்ட் போலியோ கிடையாது, இப்போது எங்கள் ஆட்சி காலத்தில் டிரான்ஸ்போர்ட் யார் கையில் இருக்கிறதோ அவர்கள் கையில் தான் ஹைவேஸ் இருக்க வேண்டும், இப்படி ரோடு போடுவதும் பஸ் விடுவதும் ஒரே ஆள் கையில், இப்படி லிங்க் உண்டு பண்ணியிருக்கிறோம் என்று சொன்னார்கள். இப்போது ஊலிங் பண்ணிவிட்டீர்களே, என்ன காரணம்? ரேஷனலை சேஷன், இர்-ரேஷனலைசேஷன் ஆகிவிட்டதே, என்ன காரணம்? இதற்கு ஏதாவது ஸ்டேட்மெண்ட் வைத்தார்களா? இப்படி போர்ட் போலியோ எதற்கு மாற்ற வேண்டும்?

எனக்குத் தெரிந்தவரை பாம்பன் பாலம் வேலை மத்திய சர்க்கார் வேலை. 6½ கோடி ரூபாய் வேலை, மத்திய சர்க்கார் வேலை. இந்த மாநில சர்க்காரால் கடந்த ஒரு வருடமாக வேலை நடக்கவில்லை. இதற்கு என்ன காரணம் என்று கேட்டபோது, நீலகண்டன் பிரதர்ஸ்-னால் வேலை செய்ய முடியவில்லை, கான்டிராக்டை மாற்ற வேண்டும் என்றும் சொல்லிவிட்டார்கள். இதற்காக காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும் என்று சொல்லப்பட்டது. பின்னால் இது அன்-ரீசனபிள் என்றும் காம்பன்சேஷன் கொடுக்கக்கூடாது என்றும் சொல்லப்பட்டது. இதுபற்றி விவாதம் நடைபெற்று பின்னால், சித்திரா கிருஷ்ணசாமி நீலகண்டன் பிரதர்ஸ்-ஸோடு

1979 அக்டோபர் 29] [திரு. க. சுப்பு]

அமைச்சர் இருக்கிற இடத்திற்கு வருகிறார். வந்தவுடனேயே என்சினியர்கள் வெளியே போய்விட்டனர். கடைசியில், கொஞ்சநாள் கழித்து போர்ட்போலியோ மாற்றம் வருகிறது. நீலகண்டன் பிரதர்ஸ்-க்கு காண்டிராக்ட் கொடுக்க வேண்டுமென்று ரெக்கமென்டேஷன் வருகிறது. காம்பன்சேஷன் கொடுக்க வேண்டும் என்றும் ரெக்கமென்டேஷன் வருகிறது. நீலகண்டன் பிரதர்ஸ்-க்கும் சித்ரா கிருஷ்ணசாமிக்கும் என்ன நெருக்கம் இருக்கலாம். சித்ரா கிருஷ்ணசாமிக்கும்— எம்.ஜி.ஆருக்கும்— முதலமைச்சருக்கும் நெருக்கம் இருக்கலாம். நெருக்கம் எதில் வந்து விழுகிறது? காண்டிராக்ட் வேலையை செய்ய முடியாது. இதை ஒப்புக்கொள்ள முடியாது என்று அமைச்சர் கூட்டத்திலும் ஒப்புக்கொள்ளப்பட்டு இவர்களால் இம்ளிமென்ட் செய்ய முடியாது என்று தீர்மானம் போட்ட பிறகு இப்போது காண்டிராக்டை மாற்றவேண்டும் என்று முதலமைச்சர் அவர்களது ஆணை எப்படி வருகிறது? சித்ரா கிருஷ்ணசாமி யார்? அவருக்கு இதில் ஹோல்ட் என்ன? அவர் வருகிறார் உள்ளே, இலாகா முதலமைச்சர் கையில், ஒன்றும் பண்ண முடியாது. பின்னால் இலாகா அலக்காகி விடுகிறது. ஹைவேஸ் பொன்னையனிடத்திலிருந்து போய் விட்டது. இப்போது என்ன ஆகிவிட்டது? ஹைவேஸ் பொன்னையன் அவர்களிடத்தில் இல்லை.

அதேமாதிரிதான் கதர், கைத்தறி மந்திரி சுப்புலட்சுமி அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கையில் டெக்ஸ்டைல்ஸ் இருந்தது. திடீரென்று பஸ் மந்திரியிடம் டெக்ஸ்டைல்ஸ் போகிறது. பஸ்ஸுக்கும் டெக்ஸ்டைல்-க்கும் என்ன சம்பந்தம்? நூலைக்கட்டி பஸ்ஸை இழுக்கவா? எதற்காக என்று தெரியவில்லை. எதற்காக இப்படி பிடுங்கினார்கள்? ஏற்கெனவே கதர் கைத்தறி கிராமத் தொழில் ஒன்றாக இருந்தது. அதை இரண்டாகப் பிரித்து கைத்தறியை சுப்புலட்சுமி பாருங்கள் என்று சொல்லிவிட்டு, காதியை இன்னொருவரிடம் கொடுத்துவிட்டு, கிராமக் கைத்தொழில் ரூரல் இண்டஸ்ட்ரிக்கு என்று தனியாக ராஜா முகமதை போட்டார்கள். இதில் என்ன ரேஷனலைசேஷன்? ஒன்றுமே கிடையாது. அதேமாதிரிதான் அதிகாரிகளை மாற்றினாலும் சரி, அமைச்சர்களை மாற்றினாலும் சரி, எந்தவிதமான முறையும் கிடையாது.

அதேமாதிரிதான் அவுசிங் போர்ட் சேர்மன், மிகவும் வருத்தப்பட்டு ரிசைன் பண்ணியிருக்கிறார். நல்ல இளைஞர், உற்சாகமாக வேலை செய்யக்கூடியவர். நாங்கள் எல்லாம் குறை சொல்லாத அளவுக்கு இருந்தார்கள். அவர் அங்கே வேலை செய்ய முடியாத அளவுக்கு ஒவ்வொரு ஸ்டப்பிலும் அசைல் செய்து அவரை வேலை செய்ய முடியாத அளவுக்கு ஆக்கினார்கள், இதற்கு என்னிடம் நிறைய இன்ஸ்டன்ஸ்ஸ் இருக்கிறது. இதைப்

[திரு. க. சுப்பு] [1979 அக்டோபர் 29

பற்றி பெரிய கடிதம் எழுதியிருக்கிறார். முதலமைச்சருக்கும் எழுதியிருக்கிறார். அதில் பூராவும் மோசமான நிலைமை, கடைசியில் அதிகாரிகள் சரியாக ஒத்துழைக்கவில்லை என்று கூறி விட்டு ராஜினாமா செய்திருக்கிறார்கள்.....

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வேண்டுகோள். அமைச்சர்களைப் பற்றிச் சொல்லும்போது, எனக்காகச் சொல்லவில்லை சொல்லும் போது கே. ஏ. கே. இராகவானந்தம் என்றெல்லாம் சொல்லுகிறார், அப்படிச் சொல்லுகின்ற மரபை, மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

திரு. க. சுப்பு : திரு. இராகவானந்தம் அவர்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்- மாண்புமிகு என்று சொல்லவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அவர்களுக்கும் செல்லையா அவர்களுக்கும் கருத்து வேறுபாடுகள் ஏற்படுவதற்கு என்ன காரணம்? காரணம் என்ன சொல்லப்பட்டது? சேர்மென் வேலைசெய்ய முடியாத அளவுக்கு இங்கேயிருந்து அதிகாரிகளுக்கு உத்தரவு போடுகிறார்கள். சேர்மென்-க்கு இருக்கின்ற பவரை கெடுத்துவிட்டார்கள் என்று சொல்லப்பட்டது. என்ன காரணம்? இதன் காரணமாக அவுசிங் போர்ட் என்ற இலாகாவே, ஒரு பெரிய இலாகாவே அலாட்மெண்டில் எல்லாம் அவ்வளவு மோசமான நிலைமையில் ராட்டனாக எப்படி டிஸிப்ளனை ஆகியிருக்கிறது. இதையெல்லாம் சொல்வதற்கு நேரம் இல்லை. திரு. இராகவானந்தம் அவர்கள் இதைப்பற்றி பின்னால் சொல்வார்கள் என்று நினைக்கிறேன்.

அதே மாதிரிதான், ஐ.ஜி.ஆப் போலீஸ் விவகாரத்தில்; இந்த ஸ்டேட்டில்தான் ஐ.ஜி.ஆப் போலீஸாக இருந்த ஒருவர் ரிசைன் செய்து விட்டு போயிருப்பதை பார்க்க முடிகிறது. யார் கிருஷ்ணசாமி என்பவர், என்ன காரணம்? இப்படியிருந்தால் எப்படி டிஸிப்ளினை என்போர்ஸ் செய்ய முடியும்? ஒரு ஐ.ஜி இருந்த இடத்தில் மூன்று ஐ.ஜி.யை போட்டிருக்கிறார்கள், எதற்கு இந்த ஐ.ஜி.க்கள், முன்னாள் டி.ஐ.ஜி. பார்த்துக் கொண்டிருந்த வேலையைத் தான் இந்த மூன்று பேரும் செய்து கொண்டிருக்கிறார்கள். அதற்கு மேலாக டைரக்டர் ஜெனரலாக ஒருவரை போடவேண்டும் என்பதற்காக, இப்போது டைரக்டர் ஜெனரலாக ஸ்ட்ரேசி இருக்கிறார். அவர் ஐ.ஜி. ஆப் போலீஸாக இருந்தபோது, ஆறு மாதம் எக்ஸ்ட்ன்ஷன் கேட்டார்கள். மத்திய சர்க்கார் எக்ஸ்டன்ஷன் கொடுத்தது. மறுபடியும் எக்ஸ்டன்ஷன் கேட்டார்கள். மத்திய சர்க்கார் மறுத்து விட்டது. ஒரு தடவை எக்ஸ்டன்ஷன் போதும் என்று மத்திய சர்க்கார் கூறி விட்டது.

1979 அக்டோபர் 29] [திரு. க. சுப்பு]

பின்னால் இந்தச் சர்க்கார் அந்த உத்தரவையெல்லாம் மீறி எக்ஸ்டன்ஷன் என்ற பெயரில் புதிதாக ஒரு போஸ்டை-டைரக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்ற போஸ்டை உருவாக்கி எக்ஸ்டன்ஷன் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக இவரையே அப்பாயின்ட்மென்ட் என்று போட்டார்கள். இப்படி ரிட்டயரான ஆட்களைப்போடலாமா? ரிட்டயரான கேஸ்கள் எல்லாம் இப்படித் தான். நாயுடு கமிஷனைப் போட்டார்கள். மதுரை தி.மு.க. எம்.எல்.ஏ. நாச்சிமுத்து பேரில் புகார் கொடுத்திருக்கிறார்கள், ஆனால் அவர் சேலம் மாவட்ட ஆத்தூர் எம்.எல்.ஏ. நாச்சிமுத்து என எழுதி ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். பரவாயில்லை, கெட்டிக்காரர், கோ. சி. மணியைப்பற்றி சொல்லும்போது, முன்னாள் எம்.எல்.சி. கோ.சி. மணி என்று எழுதியிருக்கிறார், அவர் இப்போது எதிர்க் கட்சித் துணைத் தலைவராக இருக்கிறார். கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் செயலாளராகவும் அதாவது அபிஷியலாகவும் இருந்த கோ.சி. மணி என்று எழுதி கொடுத்திருக்கிறார். நான்—அபிஷியல் எப்படிச் செயலாளராக இருக்க முடியும்? தலைவராக இருக்கலாம். செயலாளராக எப்படியிருக்க முடியும்? இவ்வளவு மோசமான ரிட்டயர்ட் கேஸ்கள்.

ஸ்ட்ரேசி அவர்களைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. மிகவும் நல்லவர். எங்களை அடிப்பது போல்தான் போலீஸ் காரர்களையும் அடிப்பார். பொதுமக்களை மிதிப்பது போல் தான் போலீஸ்காரர்களையும் மிதிப்பார். எல்லோரையும் ஒன்றாகவே நடத்துவார், சோஷியலிஸ முறையில்தான் அடிப்பார். சோஷியலிஸ ஸ்ட்ரேசி அவர்தான் இப்போது டைரக்டர்-ஜெனரலாக இருக்கிறார். அவரை குறை சொல்லவில்லை.

[முற்பகல் 11-30].

ஆனால், டைரக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் என்று ஒரு பதவி வருகிறது. அதற்குப் பின்னால், அவர் கீழே பணியாற்ற 3 இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் இருக்கிறார்கள். இதிலே ஒரு இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ஆப் போலீஸ் இன்ஸ்பெக்ஷனுக்கு வருகிறார். அவர் ப்ரொகிபிஷன் சம்பந்தப்பட்டவர். நல்லமுறையில் வேலை செய்வதாக எழுதிவிட்டுப் போகிறார். இன்னொருவர் வந்து இன்ஸ்பெக்ஷன் செய்யும்போது, அங்கேலா அண்டு ஆர்டர் மோசம் என்று எழுதுகிறார். இந்த இரண்டுக்கும் இடையில் உள்ள மற்றொரு ஐ.ஜி. வந்தால் அவர் நிலைமை என்ன? ஒரு சர்வென்ட் ஒரு மாஸ்டரிடத்தில் வேலை செய்தால் சரி. ஒரு சர்வென்ட் 4, 5 மாஸ்டர்களிடம் வேலை செய்யும்போது, அவனுடைய பெர்பார்மென்ஸ் எப்படி இருக்கும்?

[திரு. க. சுப்பு] [1979 அக்டோபர் 29

அதேபோல், ஒரு ஐ.ஜி. ரிசைன் செய்வதற்குப் பதிலாக வாலண்டரி ரிடையர்மென்டு எழுதிக் கொடுத்திருக்கிறார். ஒரு டி.ஐ.ஜி. தன் ப்ரமோஷன் ஓவர்-லுக் செய்ததாக கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார். இப்படி யார் வேண்டுமானாலும் கோர்ட்டுக்குச் செல்லக்கூடிய நிலைமை இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சர்க்காரின் பேரிலே கன்டெம்ட் ஆப் கோர்ட்டு என்று சொல்லி, ஒரு நாளைக்கு ஒரு பெடிஷன் போடலாம். எனவே, இந்த சர்க்கார் கன்டெம்சுவஸ் கவர்ன்மென்டாக இருக்கிறது. மத்திய அரசாங்கமோ என்றால், கேர்-டேக்கர் அரசாங்கமாக இருக்கிறது. இந்த அரசாங்கமோ கேர்லெஸ் கவர்ன்மென்டாக இருக்கிறது. இந்த இரண்டும் ஒன்று சேர்ந்திருக்கின்றன.

இந்த அரசாங்கத்தின் கொள்கை பற்றி சொல்லும்போது, முதல் அமைச்சர் அவர்கள் சேம்பர் ஆப் காமர்சில் பேசும்போது சொல்லியிருக்கிறார்கள். இன்டஸ்ட்ரியல் டெவலப்மெண்ட் ஆப் தமிழ்நாடு என்ற தலைப்பில் பேசும்போது, முதல் அமைச்சர் அவர்கள் பொதுத் துறை நிறுவனங்களைவிட தனியார் துறை நிறுவனங்களுக்கே ஊக்கமளிக்க வேண்டும் என்று பேசியிருக்கிறார்கள். அப்படி தனியார் துறையினருக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும் என்று பேசிவிட்டு, மொத்தத்தில் தொழில் துறையிலே தமிழ்நாடு முன்பு 3-வது இடத்தில் இருந்தது, இப்போது 4-5 அல்லது அதற்குக்கீழோ போய்விட்டது என்று சொல்லி இருக்கிறார்கள். அவர்களே தமிழ்நாடு இப்போது கீழே வந்து விட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொல்லுவதிலே கூட ஒரு உறுதி கிடையாது. முன்பு 3-வது இடத்தில் இருந்தது என்றால், இப்போது எந்த இடத்தில் இருக்கின்றது என்பது தெரிய வேண்டாமா? இதுகூடத் தெரியாத ஒரு இன்டஸ்ட்ரீஸ் மினிஸ்டர். இதுகூட தெரியாத ஒரு 'ஜரவி ஆப் பேட்' இந்தத் தமிழகத்தில். 3, 4-க்கு கீழே போய் விட்டது என்று சொன்னால், 6 என்றோ அல்லது 9 என்றோ சொல்லுங்கள் உறுதியாக.

இப்போது மத்தியிலே கூட்டணி வந்திருக்கிறது. மத்திய சர்க்கார் உதவி செய்வதாகச் சொல்லுகிறார்கள். ஜெபமணி அவர்கள் கூட சேர்ந்திருக்கிறார்கள். சென்ட்ரல் கவர்ன்மென்ட் அசிஸ்டென்ஸ் மற்ற மாகாணங்களைக் காட்டிலும் ரொம்ப கம்மி என்று சொல்லுகிறார்கள். பீகாருக்கு 2,509 கோடி என்றும், அதேபோல் மத்திய பிரதேசத்திற்கு 1,492 கோடி என்றும், ஆனால் தமிழ் நாட்டிற்கு 402 கோடி மட்டுமே அசிஸ்டென்ஸ் என்றும் சொல்லுகிறார்கள்; வருத்தப்படுகிறார்கள். மொரார்ஜி தேசாய்க்கு ஆதரவு கொடுத்தார்கள்; அவரைக் கேட்பது தானே? இதற்கெல்லாம் அவர்கள்தான் பதில் சொல்ல வேண்டும்.

1979 அக்டோபர் 29] [திரு. க. சுப்பு]

லோக் நாயக் ஜெயப்பிரகாஷ் அவர்கள் மறைவு குறித்து இந்த சபையிலே ஒரு தீர்மானம் வருகிறது. அதற்கு முதலமைச்சர் இந்த சபைக்கு வருகிறாரா? இல்லை. ஆனால், ஜெபமணி அவர்கள் வருத்தப்பட்டு என்ன பிரயோஜனம்? முதலமைச்சர் அவர்கள் அல்லவா இதற்கு பதில் சொல்ல வேண்டும்? ஆனால், அவர் சபைக்கே வரவில்லை.

மத்திய சர்க்காருடைய இன்றைய நிலைமை என்ன? திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கை, ''உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்'' 'என்பது. மத்தியில் நிலையான அரசு இருக்க வேண்டுமென்பதற்காக கை கொடுக்கிறோம். அவர்கள் மேலே இல்லை என்றால் யாரிடத்தில் கை கொடுப்பது? காற்றிலா கை கொடுப்பது? அங்கே சர்க்கார் இல்லை என்ற நிலைமை வந்திருக்கிறது.

சமீபத்திலே திரு. எஸ்.என். மிஸ்ரா அவர்கள் ரஷ்யாவிற்குச் சென்றிருந்தார்கள். ஒரு ஒப்பந்தத்திலே கையெழுத்து போடுகிறேன் என்று சொல்கிறபோது, கையெழுத்து போட வேண்டாம் என்று கூறி விட்டார்கள். என்ன காரணம்? லோகஸ்ஸ்டாண்டி இல்லை. என்ன மரியாதை இருக்கிறது? ''யூ கேன்னாட் சைன் தி அக்ரிமென்ட், யு ஹாவ் நோ லோகஸ் ஸ்டாண்டி'' என்று சொல்லிவிட்டார்கள். எனவே, மரியாதை இல்லை. மரியாதையற்ற நிலையில் போய் விட்டது.

மத்தியில் நிலையான ஆட்சி இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் பா.ரா-வை மத்திய அமைச்சராக அனுப்பினோம். எங்கள் கறுப்பு-சிகப்பு கொடியில் மக்கள் பா.ரா.-வை பாராமல் போகக் கூடாது என்பதற்காகத்தான் எங்கள் கொடியில் அனுப்பினோம். அண்ணா தி.மு.க.-வைச் சார்ந்த திரு. இராஜா முகமது அவர்கள்கூட போட்டியிட்டார்கள். 6 தொகுதிகளும் தி.மு.க. வுக்கு என்று தெரிந்தும், பா.ரா.-வை அங்கே எம்.பி.-யாக அனுப்பினோம். அந்த வகையிலேதான் ஜனதா கட்சிக்கு ஆதரவு கொடுத்தோம். நீங்களும் நல்லமுறையிலே பணியாற்றினீர்கள். ஆனால், இப்போது நீங்கள் இல்லை. அதற்கு நாங்கள் பொறுப்பல்ல.

சிக்மகளூர் தொகுதியிலே நீங்கள் வேண்டாம் என்றீர்கள்; நாங்கள் சிக்கி விட்டோம். அங்கே தேர்தல் வேலைகள் செய்யச் சென்றோம். ஜனதா கட்சியிலே இருந்த ஜார்ஜ் பெர்னான்டஸ் வந்தார்; வீரேந்திர படேல் அன்றைக்கு எதிர்த்தார். ஆனால் இன்றைக்கு வீரேந்திர படேல் இந்திரா காங்கிரஸில் இருக்கிறார்.

அன்றைக்கு காங்கிரஸ் கட்சியில் இருந்தார்கள். இந்திரா காந்தி எதேச்சாகாரத்தை கொண்டு வந்தார் என்று சொல்லுகிறார்கள். பெரியவர் ஜெபமணி அவர்கள் ஜெயிலில் இருந்தார்.

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்

[திரு. க. சுப்பு] [1979 அக்டோபர் 29

நானும் இருந்தேன். அவர் அதிகமாக அடி வாங்கியவர். அன்று தீர்மானம் கொண்டு வந்தார் பாபு ஜெகஜீவன் ராம். பெரியவர்கள் சி. சுப்பிரமணியம், டி. ஏ. பை. ஆகியவர்கள் மந்திரி சபையில் இந்திரா காந்தியுடன் இருந்த லெப்டினன்ட்ஸ். அவர்கள் எல்லாம் எங்கே இருக்கிறார்கள்? அவர்களை நாங்கள் ஆதரிக்கவில்லை. இந்திரா காந்தி மட்டும் எதேச்சதிகாரி என்றால் அவர்கள் எல்லாம் அப்போது எங்கே இருந்தார்கள்? தமிழ்நாட்டில் ஜனசங்கம் இல்லாத ஜனதாவை ஆதரிக்கிறோம் என்று மார்க்சிஸ்ட் தோழர்களும் மற்ற நண்பர்களும் சொல்லுகிறார்கள். அதேமாதிரி இந்திரா காந்தியின் இடம் டில்லி— இங்கே ஒன்றும் இல்லை என்று சொல்ல முடியாதா? திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலை என்ன? பிரிவென்டிவ் டிடென்ஷன் கூடாது, மிசா கூடாது என்று சொல்லி இந்திரா காந்தியை எதிர்த்தோம். பா.ரா. வெளியே இருந்தார், நாங்கள் உள்ளே இருந்தோம். கிட்டிபாபு செத்துவிட்டார். பாலகிருஷ்ணன் செத்துவிட்டார் என்று வருத்தப்படுகிறார்கள். நாங்கள் பலி கொடுத்தோம். ஆனால் ''ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுவது'' மாதிரி அவர்கள் வருத்தப்படுகிறார்கள்.

திரு. ர. ஜெபமணி : துணைச் சபாநாயகர் அவர்களே.....

திரு. சென்னை மு. அரங்கநாதன் : அவர்கள் பேசும்போது குறுக்கிடக்கூடாது என்று சொல்லிவிட்டு இப்போது அவர் குறுக்கிட அனுமதிப்பது எப்படி?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு ஜெபமணி அவர்கள் குறுக்கிடுவதற்கு திரு. சுப்பு அவர்களே வாய்ப்புத் தந்து உட்கார்ந்த காரணத்தால் அவர் பேசுகிறார். பின்னால் திரும்பிப் பாருங்கள்.

திரு ர. ஜெபமணி : என்னைக் குறிப்பிட்டுப் பேசியதால் உங்கள் அனுமதியோடு பதில் சொல்ல விரும்புகிறேன். திரு சுப்பு அவர்களும் ஒத்துக் கொண்டார்கள். அவர்கள் பேசும் போது வீரேந்திர பட்டீல் இங்கே இருக்கிறார் என்றார். அதுபற்றி நான் பேசவில்லை. காரணம் அவர்கள் கட்சியில் 145 பேர் ஜெயித்து வந்தார்கள். இரண்டாக உடைந்தார்கள், உடைத்துக் காட்டினார்கள்.....(குறுக்கீடு) இந்திராவை ஆதரிப்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை, தவறு இல்லை. கடற்கரையில் தமிழ்நாட்டு மக்கள் அவ்வளவு பேருக்கு முன்னால் பேசிய பேச்சில் உண்மைக்குப்புறம்பாகப் பேசினீர்கள். நீங்கள் ஆண்மையோடு அன்று சொன்னதை இன்று சொல்லியிருக்க வேண்டாமா? ஆண்மையற்று நின்று விட்டீர்களே என்றுதான் கவலைப்படுகிறேன்.

1979 அக்டோபர் 29]

திரு. சி. ஆறுமுகம் : அகில இந்தியாவிலேயே ஆண்மையோடு இருப்பவர்களை நாங்கள்தான் என்பதை உறுப்பினர் மறந்திருக்க மாட்டார்.

திரு. க. சுப்பு : நான் ஏற்கனவே குறிப்பிட்டேன். எதிர்க்க வேண்டிய அவசியம் வரும்போது எதிர்க்கவேண்டிய கொள்கைகளை எதிர்த்திருக்கிறோம். எமர்ஜென்சியை எதிர்த்திருக்கிறோம். சிறைக்குச் சென்றிருக்கிறோம். இன்றைக்கு ஜனதாவோடு ஏன் இருக்க முடியவில்லை ? ஜெயமணி அவர்கள் அதிகமாக பேப்பர் படிக்கிறவர். ஆம்னஸ்டி இண்டர்னேஷனல் என்ற நிறுவனம் செப்டம்பர், 21, 1978-ல் இந்தியாவின் சிறை நிலைமை பற்றி ஒரு ரிப்போர்ட் கொடுத்தது. எந்த சர்க்காரிடம் கொடுத்தது? எமர்ஜன்சி சர்க்காருக்குக் கொடுத்ததா? இந்திரா காந்தி ஆட்சியில் அல்ல.

ஆகஸ்டு 27, 1979-ல் திகார் சென்ட்ரல் ஜெயிலில் ஒரு கைதிக்கு நேர்ந்த அவலநிலை பற்றி சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் மெண்டில் கண்டித்திருக்கிறது. ஹுனைல் மிளகாய்ப் பொடியை ஏற்றி கொடுமைப்படுத்தியது எமர்ஜன்சியில் அல்ல. சுப்ரீம் கோர்ட் கண்டித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. ஆம்னஸ்டி இண்டர்நேஷனல் அறிக்கை கொடுத்து ஒன்றரை வருஷங்கள் ஆகிறது. அந்த ஆம்னெஸ்டி இண்டர் நேஷனல் டி.எம்.கே. அல்ல. காங்கிரஸ் கட்சி அல்ல. அந்த 84 பக்கம் என்ன ஆனது தெரியுமா? எங்கோ இருக்கிறது. அந்த அறிக்கையின் பேரில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

* * * * * * * *

இது முதலமைச்சருக்குப் பெருமை தரக்கூடிய செய்திதான்.

[முற்பகல் 11—40]

THE HON. THIRU K. NARAYANASWAMY: Sir, the allegations about the two prisoners have been subjected to what I call an attack by jail officials or according to the Government version, they have committed suicide—judicial enquiry. Therefore, it is sub-judice. The relevant remarks made in this regard, which are pending in the courts, attributed to the death of suicide or homicidal may be expunged.

திரு. க. சுப்பு: அந்த மரபுகள் எல்லாம் மீறப்பட்டு ரொம்ப நாளாகிவிட்டது. வாகைகுளத்திலே நடந்த துப்பாக்கி சூடு பற்றி விசாரணை நடக்கும்போதே அதைப்பற்றி முதலமைச்சர் பேசிக்கொண்டிருக்கிறார், உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. காளிமுத்து பேசிக்கொண்டிருக்கிறார். ஒரு கமிஷனைப் போட்டு

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. க. சுப்பு] [1979 அக்டோபர் 29

தீர்ப்புக் கொடுப்பதற்கு முன்னாலேயே அவர்கள் தீர்ப்புக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். முதலமைச்சர் எங்கு எங்கு என்ன என்ன பேசினார் என்பதையெல்லாம் பற்றி வழக்குகள் போடப்பட்டு இருக்கின்றன. நீதி மன்றத்திலே டிரான்ஸ்பர் பெட்டிஷன்கள் போட்டதற்கே அதுதான் காரணம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இருந்தாலும் ** ஜுடிஷியல் என்குயரி இருக்கும்போது அப்படிப் பேசுவது நல்ல தல்ல. ஆகவே அந்த இரண்டு வார்த்தைகளையும் அவைக் குறிப்பி லிருந்து நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. க. அன்பழகன்: தங்களுடைய உத்திரவில் அவர் சொன்ன கருத்து இல்லை. * * என்பதால்தான் கமிஷன் போடப்பட்டு இருக்கிறது. * * என்று சேர்த்துக் கொண்டால் பிரச்சினை எழாது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அவர் அப்படிச் சொல்லவில்லை. அவர் சொன்னதை நீக்கிவிடலாம். புதிதாக் சேர்க்க வேண்டியதில்லை. அதை நீக்கிவிடலாம்.

THE HON. THIRU K. NARAYANASWAMY: I beg leave to mention about the kindness and benediction with which the hon. Member Thiru Suppu has blessed my continuation as Law Minister of the Government. But I would like to assure the House and particularly Mr. Suppu that I am one who is never, never keen on any office or any public office except when I deem it as a venue for public service. I have got my practice, I can always resume my practice as a senior advocate of the Supreme Court and I am sure that Tamil Nadu which stood by me for the last 30 or 40 years will again stand behind me by entrusting me with enough briefs to have a prosperous pratice which I have enjoyed through out my career.

திரு. க. சுப்பு: அமைச்சர் நீண்ட ஆயுளையும் அதிகமான பிராக்டிஸையும் பெற்று வாழ வேண்டுமென்பது என்னுடைய ஆசை. I am not keen. என்று சொன்னார்கள். அப்படி இருக்கக் கூடாது. ஏனோ தானோ என்று இருக்கக் கூடாது. ஸ்டிரிக்ட்டாக இருக்கவேண்டும். முடியவில்லையென்றால் போய்விடலாம். Go by. தீர்ந்து போய்விட்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.

1979 அக்டோபர் 29] [திரு. க. சுப்பு]

நயினார்தாஸ், போலீஸ் சபார்டினேட் அசோசியேஷனுடைய தலைவர். சிறையில் அவரைச் சிலர் பார்க்க வேண்டுமென்று கேட்கப்பட்டபோது அவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மிசா இல்லை. எமர்ஜன்சி இல்லை. இருந்தாலும் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அவரை பாளையங்கோட்டையில் கைது செய்து அவர் சென்னைக்குக் கொண்டுவரப்பட்டு, வேலூரிலே அடைத்து வைத்திருக்கிறார்கள், நள்ளிரவுக்குப் பின் ஸ்டேட்மென்ட் வெளியிடப்படுகிறது. ஆனால் அவர் வெளிவிடப் படவில்லை. அவரைப் பார்க்கவேண்டுமென்று கட்சிக்கு அப்பாற் பட்ட முறையிலே மனித உரிமைக் கழகத்தின் சார்பிலே நாங்கள் கடிதம் கொடுத்தோம். அது ஒரு கட்சியல்ல. அம்னஸ்டி இன்டர் நேஷனல் மாதிரி அது ஒரு கழகம். யாராய் இருந்தாலும் சிவில் லிபர்ட்டி என்று இருக்கிறது. Everybody has got civil liberty.

நாங்கள் பார்க்க வேண்டுமென்று கடிதம் நம்முடைய அமைச்சரைப் பார்த்து கொடுத்தோம். நாங்கள் ஒரு புரசீஜரை பாலோ பண்ணுகிறோம். நான் கையெழுத்துப் போட்டு ஹோம் செக்ரட்டரிக்கு அனுப்புகிறேன். ஹோம் செகரட்டரி தேவையென்றால் சீப் செகரட்டரிக்கு அனுப்புவார். சீப் செக்ரட்டரி தேவையென்றால் முதலமைச்சருக்கு அனுப்புவார். முதலமைச்சர் தேவையென்றால் பெர்மிஷன் கொடுப்பார், இல்லையென்றால் இருந்துவிடும் என்று சொன்னார். இப்போது நான் நினைக்கிறேன். நயினார்தாஸ் விடுதலையானவுடன் எங்களுக்கு அனுமதி கிடைக்கும் என்று நம்புகிறேன். அவர் சித்திரவதைப் படுத்தப்படுகிறார் என்று கேள்விப்பட்டுத்தான் அவரைப் பார்க்க வேண்டுமென்று, நாங்கள் என்ன என்று பார்க்கலாம் என்று அனுமதி கேட்கிறோம். காயங்கள் ஆறிவிட்ட பின்னால் பார்க்கலாம் என்று சொல்கிறார்கள். அது இந்த அரசாங்கத்தினுடைய நல்ல குணத்தைக் காட்டுகிறது. அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. சிறையிலே சென்று பார்ப்பதற்கு அனுமதி கொடுக்கின்ற இண்டரீம் அதிகாரம் கூட அமைச்சருக்கு இல்லையா? அதிகாரம் இல்லை என்றாலும் மந்திரி பதவியை விட்டுவிட முடியுமா? இப்படி இருதலைக் கொள்ளி எறும்பாக பலபேர்கள் இருக்கிறோம். நீங்கள் இருப்பதால் உங்களைப் பார்த்து பெட்டிஷனாவது கொடுக்கிறோம். முதலமைச்சரைப் பார்த்துக் கொடுக்க முடியுமா ? முதலமைச்சரைப் பார்க்க முடியுமா ? அவரோ பாவம் தர்ம தரிசனம் மாதிரி இருக்கிறார். என்றோ ஒரு நாளைக்குத் தான் சபைக்கு வருகிறார். வந்தாலும் யாரும் கேட்க முடியாது. கேட்டாலும் பதில் வராது.

நான் சுருக்கமாக ஒன்றிரண்டு சம்பவங்களைச் சொல்லி முடித்துக்கொள்கிறேன். முன்னுரைக்கே இவ்வளவு நேரம் என்றால் என்னுடையது இனிமேல் தான் வருகிறது. சேஷசாயியில் விவகாரம் பற்றி திரு. உமாநாத் நன்றாகப் பேசினார்கள்,

[திரு. க. சுப்பு] [1979 அக்டோபர் 29

சர்க்கார் செய்த தவறினால்தான் இப்படி எல்லாம் நடக்கிறது என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் ஒரு முடிவு எடுத்த பிறகு என்ன செய்வது? உடன்பாடு வைத்துக்கொள்ள வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த உடன்பாட்டிற்கு ஊனம் ஏற்படாமல் எந்த அளவிற்கு விமர்சனம் செய்ய வேண்டுமோ அந்த அளவிற்கு விமர்சனம் செய்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பு அவர்கள் பேசும்பொழுது உமாநாத் அவர்கள் பேசியது குறித்துச் சொல்லும்பொழுது அந்த உடன் பாட்டைப் பாதுகாக்கின்ற வகையில் இந்தப் பிரச்னையைப்பற்றிப் பேசியதாகக் குறிப்பிட்டார்கள். ஆனால், இந்த மன்றத்திலே சேஷசாயி பேப்பர் மில்லைப் பொறுத்தவரையில் மிகவும் வன்மையாக எதிர்த்தது தோழர் உமாநாத் அவர்கள். எனவே, தேர்தல் உடன்பாட்டிற்கும், தொழிலாளர் பிரச்னைகளை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. நாங்கள் அப்படிப் பார்ப்பது இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் சொன்னதெல்லாம், தீர்மானத்தை விவாதிக்கலாமா என்று கேட்டதற்கு விவாதிப்பதற்கு ஒத்துக் கொள்ளாத கட்சி. அதைப்பற்றி விவாதிக்கலாம் என்று எழுந்து நிற்கவில்லை. அது எந்த அளவிற்குப் பொருந்தும் என்றுதான கேட்கிறேன்.

திரு. என். சங்கரய்யா : தலைவரவர்களே, விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்று பிரச்னையை அரசியல் சம்பந்தமான முறையில் இந்திரா காங்கிரஸோடு சேர்ந்து கொண்டு வந்திருக்கிறீர்கள். தஞ்சாவூர் பார்லிமெண்ட் தேர்தலில் இந்திரா காங்கிரஸை எதிர்த்துவிட்டு இப்பொழுது உறவு வைத்திருக்கிறீர்கள், அதெல்லாம் வேறு விஷயம்.

திரு. க. சுப்பு : நீங்கள் எங்களோடு சேர வேண்டாம், சேஷசாயி பேப்பர் மில் தொழிலாளர்களோடு சேர வேண்டாம். ஆனால், அவர்களை ஏமாற்ற வேண்டாம். அவர்கள் ரொம்பவும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. என். சங்கரய்யா : அங்கே போராடியதில் எங்கள் தொழிலாளர்களை நூற்றுக்கணக்கான பேர் சேலம் மத்திய சிறைச்சாலையிலே அடைபட்டிருக்கிறார்கள். வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னணியில் நின்று நடத்தியவர் சி.ஐ.டி.யூ.வைச் சேர்ந்த நாராயணன் அவர்கள். சேலம் மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ராமசாமி அவர்கள் சேலம் சிறையில் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட உண்மைகளை தற்காலிக அரசியல் நன்மைக்காக மறுக்க வேண்டாம்.

1979 அக்டோபர் 29]

திரு. க. சுப்பு : அதில் ஐ.என்.டி.யூ.சி. யைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். காங்கிரஸ்காரர்களும் இருக்கிறார்கள். இப் பொழுது நீங்கள் தேரை இழுத்துத் தெருவிலே விட்டிருக் கிறீர்கள்.

திரு. என். சங்கரய்யா : சேஷசாயி பேப்பர் மில்லைப் பொறுத்த வரையில நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத் திருந்தோம். இன்றைக்கு காங்கிரஸ் கட்சி பற்றி நீங்கள் சொல் கிறீர்கள். சென்ற தடவை இதே மன்றத்திலே சென்ஷ்யூர் மோஷன் வந்த பொழுதும், நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்த காலத்திலேயும் காங்கிரஸ் கட்சி உங்களோடு நிற்கவில்லை. அப் பொழுது நீங்கள் அதை ஆட்சேபிக்கவில்லை. எனவே, இன் றைக்கு நீங்கள் நிதானமாகப் பிரச்னைகளை அணுகுவது நல்லது. சேஷசாயி பிரச்னையில் எங்கள் கட்சியைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான தொழிலாளர்கள் போராடி சிறையிலே இருக் கிறார்கள். சி.ஐ.டி.யூ.வைச் சேர்ந்தவர்கள் மாநிலத்தில் தர்ணா நடத்தித் தொழிலாளர் பிரச்னைக்காக இன்றைக்குப் போராட்டத் திலே நிற்கிறார்கள். இதிலே அரசியலை நாங்கள் புகுத்த விரும்ப வில்லை.

திரு. க. சுப்பு : நேற்றையதினம் தொழிலாளர் மந்திரி சுரேந்திர மோகன அவர்கள் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். Ide l g cal pretensions அதாவது, நாட்டில் தத்துவார்த்த வேடங்கள் போட்டுக்கொண் டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். நாம் ஒரு இஷ்யூ வின்மேல் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறோம், எல்லோ ரும் சேர்ந்து நடத்திக்கொண்டிருக்கிறோம். ஆனால், அதைப் பற்றிய விவாதத்தை நீங்கள் அனுமதிக்கவில்லை. அதற்காக நாங்கள் வருத்தப்படவில்லை.

சேஷசாயி பேப்பர் மில்லைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் எம்.பி.யான இராமமூர்த்தி அவர்கள் சப்-கமிட்டியிலே இருக் கிறார்கள். அவர் சொல்லியிருக்கிறார், இந்திரா காங்கிரஸ் எம்.பி. சப் கமிட்டியிலே காண்ட்ராக்ட் லேபரை அபாலிஷ் செய் வதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். பேப்பர் மில்லாக இருந் தாலும், சிமெண்ட் பேக்டரியாக இருந்தாலும் அதைப்பற்றி அந் தக் கமிட்டியிலே அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அது இரகசிய அறிக்கை. அந்த அறிக்கை முதலாளிக்குப் போகிறது. அதுபற்றி இராகவானந்தம் அவர்களோ, இலாக்கா அதிகாரிகளோ பதில் சொல்லவில்லை ; முதலமைச்சர் சொல்லவில்லை. அனால், அந்த முதலாளிக்கு அறிக்கை எப்படிப் போகிறது ? காண்ட்ராக்ட் முறையை ஒழிக்க வேண்டுமென்று சொல்லும் அறிக்கையைப் பற்றிச் சம்பந்தப்பட்ட பேப்பர் மில் முதலாளிகள் தங்கள் கருத் துக்களைச் சர்க்காருக்குக் கொடுக்கிறார்கள். இந்த விஷயத்

[திரு. க. சுப்பு] [1979 அக்டோபர் 29

தைப்பற்றி விவாதித்திருக்கிறார்கள். அவர்களுக்கு எப்படி இந்த அறிக்கை போயிற்று ? அவர்கள் சொல்வதையும் ஏற்றுக் கொண்டு சர்க்கார் உத்தரவு போடுகிறது.

சிமெண்ட் பேக்டரியாக இருந்தாலும், பேப்பர் மில்லாக இருந்தாலும், பஞ்சாலையாக இருந்தாலும் அவர்களது காண்ட்ராக்ட் முறையை முறைப்படுத்துவோமே தவிர ஒழிக்க மாட்டோம் என்று சொல்லும் நிலைமை இருக்கிறது. இது சென்ட்ரல் கவர்ன்மெண்டுக்கு விரோதமானது. ஆனால், நீங்கள் அவ்வாறு சென்ட்ரல் கவர்ன்மெண்ட்டுக்கு விரோதமாகச் செய்தாலும் அது உங்கள் மீது நடவடிக்கை எடுக்காது என்பதால் இம்மாதிரி தவறுகள் தொடரட்டும்.

[முற்பகல் 11—50.]

சிமெண்ட் பாக்டரி, பேப்பர் மில்ஸ், பஞ்சாலைகள் இவைகளில் எல்லாம் கான்ட்ராக்ட் லேபர் முறையை ஒழிக்க மாட்டோம் என்று போட்டிருக்கிறீர்கள். இது சென்ட்ரல் ஆக்டிற்கு விரோதமில்லையா ? சென்ட்ரல் கவர்ன்மெண்ட் நடவடிக்கை எடுக்காது என்ற காரணத்தால், நடவடிக்கை எடுக்கக் கூடிய சர்க்கார் அங்கே இல்லை என்ற காரணத்தால் சென்ட்ரல் ஆக்டிற்கு விரோதமாகப் போகலாம்.

சேஷசாயி பேப்பர் மில்லில் சுமார் 3,000 தொழிலாளர்கள் கான்ட்ராக்ட் லேபர் முறையினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதில் சி.ஐ.டி.யூ.சி.யைச் சேர்ந்தவர்களும் 110 பேர் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் பி.எப்., ஈ.எஸ்.ஐ. வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று சர்க்காரை அணுகி அவர்களுக்கு வாங்கினார்கள். ஆனால், நிர்வாகம் நிரந்தரம் ஆக்கினால்தானே பி.எப்., ஈ.எஸ்.ஐ. கொடுக்க வேண்டும். அவர்களை வேலையை விட்டு ரிட்ரென்ச் பண்ணுகிறோம் என்று சொல்லி, 13 வருஷம் சர்வீஸ் ஆன தொழிலாளர்களை வெளியே போகச் சொல்லிவிட்டார்கள். 110 பேர்கள் இன்றைக்கு வெளியே இருக்கிறார்கள். நாம் இங்கே கூட்டு பேசிக் கொண்டு இருக்கிறோம். நான் அதைப்பற்றி இங்கே விவரமாகச் சொல்ல விரும்பவில்லை.

அந்த சேஷசாயி மில்லிலே இன்றைக்கு முதலமைச்சர் நினைத்தால் அவர்களுக்கு நன்மை செய்ய முடியாதா ? முதலமைச்சர் சொல்கிறார் ''சட்டம் குறுக்கிடுகிறது'' என்று. சட்டம் குறுக்கிட்டால் நீங்கள் விட்டு வைப்பீர்களா ?

குதிரைப் பந்தயத்திற்குக் கூட இப்பொழுது ஒரு சட்டம் போட்டிருக்கிறீர்கள். டர்ப் ஏஜன்சியை ஒழிக்கும் சட்டம் போட்டிருக்கிறீர்கள். நாம் எல்லாம் அண்ணாவின் கொள்கையை கறாராகப் பின் பற்றுகிறோம். குதிரைப் பந்தயத்தில் அண்ணாவின் கொள்கை என்ன ? குதிரைப் பந்தயம் இருக்க வேண்டும்

1979 அக்டோபர் 29] [திரு. க. சுப்பு]

என்பதா ? ஒழிக்க வேண்டும் என்பது. நாம் குதிரைப் பந்தயத் தயத்தை ஒழித்தோம். உடனே அவர்கள் கோர்ட்டிற்கு போனார்கள். ஹை கோர்ட் கொடுத்த தீர்ப்பிற்கு எதிராக சுப்ரீம் கோர்ட்டிற்குப் போனார்கள். கேஸ் 3 வருடமாக கோர்ட்டிலே இருக்கிறது. 1975-லிருந்து இப்போது 1979 ஆம் ஆண்டு ஆகிறது. 3 வருடமாக இந்த சர்க்கார் அந்த வழக்கை துரிதப்படுத்த நடவடிக்கை எடுத்தார்களா ? கிடையாது.

கேசை துரிதப்படுத்துவதை விட்டு விட்டு அதை எப்படியெல்லாம் முடமாக்க முடியுமோ அதற்குரிய நடவடிக்கைகளில் இறங்கி இருக்கிறது இந்த அரசு. குதிரைப் பந்தய முதலாளிகள், மெயில் பத்திரிகையில் முந்தாநாள் மாலையில் பார்த்தேன், 300 குதிரைகள் வருகின்றன டர்ப் ஏஜன்சியை ஒழித்ததற்கு சர்க்காருக்கு நன்றி தெரிவிக்கிறோம் என்று கூறியிருக்கிறார்கள். அதனுடைய சேர்மன் திரு. ஏ. சி. முத்தையா, தூத்துக்குடி ஆல்க ஹாலிக் கெமிக்கல்ஸினுடைய சேர்மன். அவர் தூத்துக்குடியில், ஜப்பானுடன் சேர்ந்து தொழிற்சாலை ஆரம்பிக்க லைசன்ஸ் வாங்கியிருக்கிறார். நம்முடைய முதலமைச்சர் ஜப்பானுக்குப் போயிருந்தபோது அவர்தான் முதலமைச்சரை வரவேற்றார். பரவாயில்லை. இரண்டு பேரும் நெருங்கிய நண்பர்கள். ஆகையால் அவர் அங்கே சேர்மனாக வருகிறார். குதிரைப் பந்தயத்திற்கு வந்தார். டர்ப் ஏஜென்சியை ஒழித்தார். அதற்கெல்லாம் நமக்கு அவசரச் சட்டம் வருகிறது. அண்ணாவினுடைய கொள்கையைக் குழி தோண்டிப் புதைத்தாயிற்று. நீங்கள் என்ன பண்ணுவீர்கள்?

நாங்கள் நேஷனலைஸ் பண்ணுவோம் என்று சொன்னார்கள். இது என்ன நேஷனலைஸா ? தனிப்பட்ட ஆளை சேர்மனாகப் போடுகிறீர்கள்.

சேஷசாயியில் Anti-labour policy, unfair labour policy, contract labour policy அமுல் செய்கிறீர்கள். அது நம்முடைய அமைச்சர் இராகவானந்தம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அவரே போன தடவை அங்கே போராட்டம் நடத்தியவர். இந்த சர்க்காரைப் பொறுத்த வரையில் கூட அமைச்சர் இராகவானந்தத்திடம் ஒரு வித்தியாசம் இருக்கிறது. அவர் போராட்டமே வேண்டாமென்று சொல்பவர் அல்ல. வேலை நிறுத்தம் வேண்டாம் என்று சொல்பவர் அல்ல. ஆனால், நான் அமைச்சரவையில் இருக்கும்பொழுது வேண்டாம் என்கிறார். அவரே இந்த சேஷசாயி மில் தொழிலாளர்களுக்காக 45 நாட்கள் போராட்டம் நடத்தியவர். அவர் வேண்டாம் என்று எப்படிச் சொல்வார் ? இன்றைக்கு ஏன் சொல்கிறோம் என்றால், நாங்கள் ஆட்சியில் இருக்கிறோம் என்கிறார். எதையும் மறைத்துச் சொல்கிற பழக்கம் இல்லை. உழைக்கும் கரங்கள் ஆட்சியில் இருக்கும் பொழுது நீங்கள் ஏன் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும் என்று கேட்கிறார்.

[திரு. க. சுப்பு] [1979 அக்டோபர் 29

அமைச்சர் ராஜா முகமது கூட ஒரு தத்துவத்தை. எடுத்துச் சொன்னார். எந்தக் கட்சி என்று அவர் சொல்லவில்லை. ஒரு கூட்டத்தில் பேசுகிறார் ''சுரண்டல் சமுதாயம் ஒழிக்கப் பட வேண்டும், உழைப்பவர் கையில் ஆட்சி வரவேண்டும்'' அப் பொழுது தான் சுரண்டலுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்ற தத்துவத்தை, மார்க்ஸீய தத்துவத்தைக் கூறுகிறார். ''மார்க்ஸிஸம் இஸ் ஆம்னிபொடன்ட்'' ''ஆம்னிபொடன்ட்'' தத்துவத்தை ''ஆம்னிபொடன்ட்'' தான் பேசவேண்டும். ''இம்பொடன்ட்'' பேசக்கூடாது. பேசிவிட்டார்.

இராகவானந்தம் சொல்லியிருக்கிறார். ''உழைக்கும் கரங்களின் ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது. நீங்கள் ஏன் ஸ்டிரைக் செய்கிறீர்கள். ரஷ்யாவில் ஸ்டிரைக் நடக்கிறதா? அதுமாதிரி இங்கேயும் நடக்கக் கூடாது'' என்று ரஷ்யாவில் பிரஷ்னேவ். அவரா இவர் என்று தெரியவில்லை எனக்கு. அவர் அமைச்சராக இல்லாதபோது நடத்திய போராட்டம். ஜெயிலுக்குப் போனார். தொழிலாளர்கள் வீட்டிலேயே தங்கினார்; சாப்பிட்டார். இன்றைக்கும் அவர்கள் சாப்பாடு போடுவதற்குத் தயார். ஆனால் அவர் விசுவநாதன் வீட்டுக்குப் போய்விடுகிறார். அது உறவிலே ஏற்பட்ட ஏமாற்றம்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, தலையிடக் கூடாது என்றுதான நான் சொன்னேன். எப்பொழுது நான் விசுவநாதன் வீட்டில் சாப்பிட்டேன்? எந்த முதலாளியைப் பார்த்தேன்? வேலை நிறுத்தம் செய்யக் கூடாது என்று எப்பொழுது நான் சொன்னேன்?

It is the birth right of a worker to go on strike. என்று சட்ட மன்றத்தில் சொன்ன ஆட்சி புரட்சித் தலைவர் ஆட்சி. அப்படிச் சொன்னது ரிகார்டில் இருக்கிறது.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, அவருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். வேலைநிறுத்தம் செய்வது பிறப் புரிமை. அந்த உரிமையைப் பறிப்பதற்குச் சட்டம் போடுவது என்ன உரிமை? பிறப்புரிமையைப் பறிக்கிற ஒரு சர்க்கார் பிற உரிமையை எப்படித் தர முடியும் ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, நான பதில சொலலிவிடுகிறேன. இது வரையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த 27 மாதத்திலே எந்த ஸ்டிரைக்கையும் தடுக்கவில்லை. யார், யார், எப்பொழுது எப்பொழுது தடை செய்து இருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தை மாலையிலே மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொல்வார்கள்.

1979 அக்டோபர் 29]

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, தடை செய்யாத சர்க்காருக்கு ஒரு தடைச் சட்டம் தேவையில்லை. அது ஏன ஒரு தடைக் கல்லாக இருக்க வேண்டும்? நீங்கள் திரும்பப் பெற வேண்டும். முதலமைச்சர் அவர்கள் செய்வார்கள் என்று நான் நம்புகிறேன். இல்லாவிட்டால் நீங்கள் வெளியேறிவிடுவீர்கள் என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் நீங்கள் ரொம்ப ரோஷக்காரர். அதெல்லாம் தப்பாகச் சொல்லக்கூடாது. நான் சொல்ல வருவது சேஷசாயி மில்லைப் பொறுத்த வரையில் போராட்டம் நடத்தியவர் அமைச்சர், அமைச்சராக இல்லாத போது.

டிரான்ஸ்போர்ட் டிபார்ட்மென்டைப் பொறுத்த வரையில் ஜப்பானியத் தொட்டத்தை எதிர்த்து சி.ஐ.டி.யு. போராட்டம் நடத்தியபோது முதலமைச்சர் அவர்களும் தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் பணம் கொடுத்ததாக தோழர் சௌந்தரராஜன் அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஸ்டிரைக்கிற்கு ஆதரவு கொடுப்பவர்களுக்கு ஒரு வருஷம் ஜெயில் தண்டனை என்று இப்போதைய சட்டத்தில் இருக்கிறது. இதற்கு ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட் கொடுத்தால், சி.ஐ.டி.யூ.வை போராட்டம் நடத்தச் சொல்லி அன்றைக்குப் பணம் கொடுத்ததாக முதலமைச்சர் அவர்களையும் அமைச்சர் அவர்களையும் உள்ளே போடுவதா ?

நீங்கள் ஆட்சியில் இருந்தால் ஒன்று. ஆட்சியில் இல்லாவிட்டால், இன்னொன்றா? இப்படிப் பேசலாமா? தி.மு.க. ஆட்சியில் இருந்தால் போராடலாம். மற்றவர்கள் இருந்தால் போராடக் கூடாதா ? (மணியடிக்கப்பட்டது) முடித்து விடுகிறேன். நிறைய குறுக்கீடுகள். தாங்க முடியாத குறுக்கீடுகள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் 15 நிமிடம் தான் கேட்டு இருக்கிறீர்கள். பேரவைத் தலைவர் உங்களுக்கு 30 நிமிடம் கொடுத்து இருக்கிறார். இப்போது 50 நிமிடம் ஆகிவிட்டது. நீங்கள் நன்றாகப் பேசக்கூடியவர். நீங்கள் ரொம்ப நேரம் பேசிவிட்டீர்கள். பாக்கி இருப்பவர்களும் பேச வேண்டும். அதனால் சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. க. சுப்பு : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் சேஷசாயி கம்பெனியில் ஒரு விழாவில் கலந்து கொண்டபோது, முதலமைச்சர் அவர்கள் திரு. விஸ்வநாதன் அவர்களை என்னுடைய இதயக் கனி என்று குறிப்பிட்டார். ஒரு முதலமைச்சர் அவர்களின இதயக் கனியாக இருப்பதில் என்ன தப்பு? அவரைத்தான் அமெரிக்கா விறகுப் போனபோது முதலமைச்சர் அவர்கள் அழைத்துக்கொண்டு போனார். இரண்டுபேரும் ஹாலிவுட்டில் தங்கினார்கள். அதிலே தப்பு கிடையாது.

[திரு. க. சுப்பு] [1979 அக்டோபர் 29

அந்த விஸ்வநாதன் தான் சேஷசாயி கம்பெனியின் தலைவராக இருக்கிறார். முதலமைச்சர் சொன்னால், மீறக் கூடியவர் அல்ல. முதலமைச்சர் சொன்னால் மரியாதையோடு ஏற்றுக் கொள்ளக்கூடியவர். அந்த சேஷசாயி கம்பெனிக்குத் தலைவராக இருக்கும் விஸ்வநாதன் தான் திருச்சியில் இருக்கும் சிம்கோ கம்பெனிக்கும் தலைவர். நாம் போராட்டம் கூட நடத்தினோம். சி.ஐ.டி.யூ. கூட நடத்தினார்கள். இங்கே திரு. உமாநாத் அவர்கள் உரிமைக்குரல் எழுப்பினார்கள். திரு. கருணாநிதி அவர்கள் கூட எழுந்து நின்றார்கள். அப்படி நாம் ஒற்றுமையைக் காட்டினோம். இப்பொழுது நாமும் ஒன்றுபட்டு இருக்கிறோம். அப்படியிருக்கிறபோது, முதலமைச்சர் அவர்களும், தொழிலாளர் நல அமைச்சரும் சொல்வதை அந்த சேஷசாயி கம்பெனி தலைவர் கேட்கமாட்டார் என்று சொல்வதில் எந்த விதமான நியாயமும் இல்லை. அந்த சேஷசாயி கம்பெனிக்கு அரசு யூகாலிப்டஸ் மரம் வெட்டிக் கொள்ள அனுமதி கொடுத்து இருக்கிறது.

நம்முடைய கோவில் மந்திரி, அதாவது அறநிலையத்துறை அமைச்சர் திரு. வீரப்பன் அவர்கள் கூட சொன்னார்கள். அனுமதி கொடுத்தது யூகாலிப்டஸ் மரம் வெட்டிக்கொள்வதற்கு; ஆனால் அந்தக் கம்பெனி சந்தன மரங்களை வெட்டி எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். 300 டன் வெட்ட அனுமதி அளிக்கப்பட்டு இருக்கிறபோது, 2,000 டன் வெட்டி எடுத்துக்கொண்டு போய் இருக்கிறார்கள். இது எல்லாம் ரொம்ப சாதாரண நடவடிக்கைகள். ஒரு கண்டக்டர் ரூ. 2 எடுத்துவிட்டால், அவனை உடனடியாக வேலையில் இருந்து நீக்கப்பட வேண்டும். 300 டன் மரம் வெட்டி எடுக்கவேண்டியவன் 2,000 டன் வெட்டி எடுத்தால் அது பெரிய மனிதன் செய்யும் வேலை. அவருக்கு என்னென்ன மரங்கள் வெட்டுவதற்கு உரிமை கொடுத்து இருக்கிறோம் தெரியுமா ? யூகாலிப்டஸ் மரம் கருவேலம் மரம் போன்ற எல்லா மரங்களையும் வெட்டி எடுத்துக்கொள்ள— குறைந்த விலையில் வெட்டி எடுத்துக்கொள்ள 20 ஆண்டு காலத்திற்கு திரு. வீரப்பன் அவர்கள் வந்த பிறகு குத்தகைக்கு விட்டு இருக்கிறார்கள். ஊரான் வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே என்று சொல்வார்கள். அதைப்போல வீரப்பன் வந்த பிறகு 20 ஆண்டு காலத்திற்கு அந்தக் கம்பெனிக்கு கான்ட்ராக்ட் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

மேலும், அதற்குப் பக்கத்திலேயே சர்க்கார் துறையில் பேப்பர் தொழிற்சாலை ஒன்று 140 கோடி ரூபாய் அளவில் அமைக்க இருக்கிறார்கள். அந்த 140 கோடி ரூபாய் மூலதனம் போட்டு ஆரம்பிக்கும் தொழிற்சாலைக்கு யார் தெரியுமா சேர்மன், நம்முடைய அமைச்சர் ராகவானந்தம் சொல்வார்—ஐதே சேஷசாயி கம்பெனியின் மானேஜிங் டைரக்டர் விஸ்வநாதன் அவர்கள் தான். அவர் தான் 'அன்போர் லேபர் ப்ராக்டீசுக்குத் தந்தை'.

1979 அக்டோபர் 29] [திரு. க. சுப்பு]

அவர்தான் முதலமைச்சரால் இதயக்கனி என்று வருணிக்கப் பட்டவர். அந்த இன்டிவிஜூவலைத்தான் சேர்மனாகப் போட்டு இருக்கிறார்கள். இப்படிச் செய்கிற சர்க்காரைக் கண்டிக்க முடிய வில்லை. தொழிலாளியைப் பட்டினி போட்டவன், ஜெயிலில் போட்டவன், அன்பேர்-லேபர் ப்ராக்டீஸ் பிறபற்றியவன அவர்களை சப்போர்ட் செய்வோம், அவர்களை சேர்மனாகப் போடுவோம். இதை அவர்கள் ஆட்சி என்று சொல்கிறார்கள். நாங்கள் அப்படிச் சொல்ல முடியவில்லை. (மணியடிக்கப்பட்டது) குறிப்புகளை மட்டும் சொல்லிவிட்டு விடுகிறேன்.

பஞ்சாயத்துக்களைக் கலைத்தீர்கள். பஞ்சாயத்துக்களை கலைப்பதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை. கானாடு காத்தான் பஞ்சாயத்து பற்றி அமைச்சர் வீரப்பன அவர்களுக்குத் தெரியும். 50 ஆண்டுகாலமாக இருக்கும் டவுன் பஞ்சாயத்து அது. அதை திடீரென்று 3 ஆகப் பிரிக்கவேண்டும் என்று சொன்னார்கள். தீர்மானம் பஞ்சாயத்தில் நிராகரிக்கப் பட்டது. அடுத்து நடவடிக்கை எனன தெரியுமா? பஞ்சாயத் துகள் கலைக்கப்பட்ட உடனே ஸ்பெஷல் ஆபீசர் பொறுப் பேற்றவுடன் அதை 3 ஆகப் பிரிக்க வேண்டும் என்று தீர்மானம் நிறவேற்றப்பட்டது. பஞ்சாயத்தில் 25-2-70 என்று தீர் மானம் நிறைவேற்றப்பட்டது. அதே தினத்தில் ஒன்றியத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்து இரண்டு நாளில் டி.டி.சி.யிலும் அப்படியொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதற்கு அடுத்த நாள் 29-4-70 அனறு ஆர்.டி.எல்.ஏ.வலும் ஜி.ஓ. இஷ்யூ ஆகிறது. சர்க்கார் எவ்வளவு துரிதமாக நகரு கிறது பாருங்கள். முதலமைச்சரிடத்தில் பைலே நகரவில்லை என்று சொல்கிறார்கள். யார் சொன்னது. நன்றாக நகர்கிறது. நகரவேண்டிய இடத்தில் நகரவில்லையே தவிர மற்ற இடத்தில் நன்றாக நகர்கிறது. கானாடுகாத்தானில் வசதி படைத்தவர்கள் ஒரு பகுதி, ஏழைகள் ஒரு பகுதி என்றும், ஜாதி அடிப்படையில் ஒரு பகுதி என்றும் பிரிக்கப்பட்டு, அங்கே மக்கள் தொந்தரவு செய்யப்படுகிறார்கள் என்றும் விண்ணப்பம் போட்டு இருக் கிறார்கள். அங்கே ரூ. 28,600 வருமானம் இருந்தது என்று சொன்னால் இப்போது ரூ. 18,000தான் வருமானம் என்று சொல்கிறார்கள். இப்படி திடீரென்று ஸ்பெஷல் ஆபீசர் ஆட்சியில் தீர்மானம் போட்டு இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது) முடித்து விடுகிறேன். வேண்டுமானால் எங்கள் நேரத்தைக் குறைத்துக்கொள்ளுங்கள். டாக்டர் சமரசம் நேரத்தையும் நான் எடுத்துகொள்கிறேன். (சிரிப்பு.)

இன்னொரு விஷயத்தையும் நான் கல்வி அமைச்சர் அவர் களின் கவனத்திற்கு நான் கொண்டு வந்து இருக்கிறேன். மெஷின் ஆப்பரேட்டர் வேலைக்கு ஆள் எடுப்பதற்காக டைரக்டர் ஆப் எம்ப்ளாய்மெண்ட் அண்ட்டிரெயினிங் ஒரு அட்வர்டைஸ்மெண்ட்

[திரு. க. சுப்பு] [1979 அக்டோபர் 29

கொடுக்கிறார். 12 பேர் எம்ப்ளாய்மென்ட் எக்ஸ் சேஞ்சியிலிருந்து வருகிறார்கள். அந்த 13 பேரில் அந்தப் பத விக்குத் தகுதிவாய்ந்த ஒரு நபர் இருக்கிறார். அவருக்கு குவாலிபி கேஷன் பி.எஸ்ஸி. பார்ஸ்ட் கிளாஸ், மேஜர் மேதமெடிக்ஸ், ஆன்சிலரி ஸ்டாடிஸ்டிக்ஸ், டைப்ரைட்டிங் ஹையர், ஜி.கி.எல்., ஐ.பி.எம். கோர்ஸ் பாஸ் செய்து இருக்கிறார். அந்த ஐ.கி.எல். மெஷன் ஆபரேட் செய்யத் தெரியும். இன்னொரு நபர் பி.ஏ. தேர்ட் கிளாஸ், டைப்ரைட்டிங் ஹையர், மெஷின் ஆப்ப ரேட் செய்யத் தெரியாது. மெஷின் ஒட்டத் தெரிந்தால்தான் வேலைக்கு எடுக்க வேண்டும் என்று இருக்கிறது. ஆனால் மெஷின் ஓட்டத் தெரியாதவர் தான் செலக்ட் ஆகிறார். அவர் பெயர் ஜே. பழனியப்பன். செலக்ட் ஆகாதவர் பெயர் ஜே. சுப்பிரமணியம். இவர் ஏழை பையன். அவர் வந்து சொன்ன வுடனே நான் அமைச்சர் அவர்களிடத்தில் சொன்னேன். அமைச் சர் அவர்களும் அனுதாபத்தோடு கேட்டு, உடனே கவனிக்கி றேன் என்று சொல்லி அதிகாரிகளிடத்திலும் சொன்னார்கள். அதிகாரிகள் ரொம்ப சிரமப்பட்டு சொல்லியிருக்கிறார்கள். நாங் கள் போட்டது சரியாகத்தான் இருக்கிறது. இன்டர்வியூவில் அவன்தான் கெட்டிக்காரன் வேலையில் என்று கண்டுபிடித் தோம் என்று. மறுபடியும் பெட்டிஷன் கொடுத்து இருக்கிறோம். இந்த ஆட்சி பாகுபாடு இல்லாத ஆட்சி என்ற காரணத்தால் இந்த ஒரு உண்மையை மட்டும் நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

[நண்பகல் 12–00]

இன்னும் ஒன்றை மட்டும் குறிப்பிட்டு முடித்துக்கொள்கிறேன். அது பாரஸ்ட் டிப்பார்ட்மென்ட் பற்றியது. அமைச்சர் பல்வேறு நேரங்களில் ஸ்டேட்மென்ட் கொடுக்கிறார். ஒரு தனிப் பட்டவர் பாரஸ்ட் லான்ட், அது பட்டா நிலம். 'சான் ஜோஸ் எஸ்டேட்' என்ற பிரைவேட் பாரஸ்ட்; அது ஏற்காட்டில் இருக்கிறது. அங்கிருந்து மரத்தை வெட்டி எடுத்துக்கொள் வதற்கு கான்ட்ராக்ட் ஆக்டின்கீழ் சப் கான்ட்ராக்ட் செய்துகொள் கிறார்கள். சுமார் 50 இலட்சத்திற்கு சற்று மேற்பட்ட கான்ட்ராக்ட் அது. நம்முடைய அமைச்சர் அதிலே தலை யிட்டிருக்கிறார். ஒரு சட்டமன்ற உறுப்பினர் சௌத் இந்தியா விஸ்கோஸ் நிறுவனத்திற்கு யூகலிப்டஸ் மரங்களை சப்ளை செய் வதற்கு கான்ட்ராக்ட் எடுத்திருக்கிறார். அதில் தவறில்லை. ஆனால் அமைச்சர் அந்த சட்டமன்ற உறுப்பினரை அழைத்துக் கொண்டு போய் அந்த எஸ்டேட் ஓனரை மிரட்டியிருக்கிறார்; அது சரியல்ல. அந்தச் செய்தி பத்திரிகையிலும் வந்திருக் கிறது.

மரத்தை வெட்டக் கூடாது என்று தடை செய்திருக்கிறார்கள். அதை எதிர்த்து ஹைகோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். கலெக்டர் 'கட் ஆர்டர்' கொடுத்திருக்கிறார். பாரஸ்ட்

1979 அக்டோபர் 29] [திரு. க. சுப்பு]

அதிகாரிகள் அந்த ஆர்டர்படி டிரான்ஸ்போர்ட் பண்ணுவதை பார்த்துக் கொள்ள வேண்டும். ஆக, கலெக்டரும் ஆர்டர் கொடுத்து, டிஸ்ட்ரிக்ட் பாரஸ் ஆபீசர் அனுமதி கொடுத்த பிறகு, பாரஸ்ட் ரேஞ்ச் ஆபீசர் தடை செய்திருக்கிறார். அதை எதிர்த்து ஹை கோர்ட்டுக்குப் போயிருக்கிறார்கள். அட்வகேட் ஜெனரல் அதிலே புத்திசாலித்தனமாக நடந்துகொண்டிருக் கிறார். ஆர்டர் கொடுத்தது சரிதான்; அதில் தவறு ஒன்றும் இல்லை; ஆகவே நாங்கள் கவுண்டர் பைல் செய்யவில்லை எனறு மெக்னானிமசாக அட்வகேட் ஜெனரல் ஒத்துக்கொண்டிருக்கிறார். தவறுக்கு வருத்தம் தெரிவித்திருக்கிறார்; மரத்தை வெட்டிக் கொள்வதற்கு ஆட்சேபம் இல்லை என்று தெரிவித்திருக்கிறார். அவர்கள் கோர்ட்டிலே போய் மரத்தை வெட்டுவதற்கு உத்தரவு வாங்கியிருக்கிறார்கள். இருந்தபோதிலும் வெட்ட முடிய வில்லை. என்ன அநியாயம் பாருங்கள். அது அரசாங்க நிலமும் அல்ல. அது ஒரு பட்டா லான்டு. அதில் போய் சர்க்கார் தலையிடுகிறது. மரத்தை வெட்டச் சொல்லும்போது சர்க்கார் மரங்களை வெட்டக்கூடாது என்று சொல்லி, இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்திருக்கிறது என்று கலெக்டர் ப்ரொசீடிங்க்ஸ் போடுகி றார். அட்வகேட் ஜெனரல் ஆட்சேபம் இல்லை என்று தெரிவித்த பிறகு, கோர்ட் உத்தரவு போட்ட பிறகு, அந்த உத்தரவையும் சர்க்கார் மீறுகிறது. 70 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள காண்ட்ராக்ட் அது. இந்த 70 இலட்சம் ரூபாய் அவருக்கு ஏது என்று அமைச்சர் கேட்கிறார். இது என்ன கேள்வி? அவர் சம்பாதித்திருக்கிறார்; அவருடைய பணம்; அவர் காண்ட் ராக்ட் எடுத்திருக்கிறார். தடைசெய்ததால் கோர்ட்டுக்குப் போய் உத்தரவு வாங்கியிருக்கிறார். அதை தடுப்பது என்ன நியாயம் ?

இப்படிப்பட்ட அரசாங்கத் தலையீடுகளினால் இன் றைக்கு சேலம் மட்டுமல்ல; தமிழ்நாடு பூராவும் 'ப்ரீயர்வுட்' விலை ஏறிக்கொண்டிருக்கிறது. ஐ.எப்.எஸ். அதிகாரிகளைப் போட வேண்டிய இடத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரியைப் போடுவ தால் ஏற்படுகின்ற விளைவு இது. நம்முடைய பகுதியை தான் போட்டிருக்கிறார்கள். அவர்மீது வருத்தம் இல்லை. ஆனால், அவர்கள் போடுகிற ஆர்டர் எல்லாம் சட்டத்திற்குப் புறம்பாக இருக்கிறது. செக்ரட்டரி போடும் ஜி.ஓ.-வுக்கு சபார்டினேட்டாக இருக்கிறவர் கிளாரிபிகேஷன் கேட்கிறார் என்றால் நிர்வாகம் எப்படி நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம். இதை யெல்லாம் பேராசிரியர் சொன்னதை வழிமொழிகிற வகையிலே நான் சொல்கிறேன்.

அடுத்தது பல்கலைக் கழகத்தைப் பற்றிய விவகாரம்: சென்னைபல்கலைக் கழகத்தில் நம்முடைய சர்க்கார் பணம் இருக் கிறது. ஒரு கண்டக்டர் இரண்டு ரூபாய் மிஸ் பண்ணுகிறார்

[திரு. க. சுப்பு] [1979 அக்டோபர் 29

என்றால் உடனே அவரை ரிமூவ் பண்ணுகிறார்கள். மெட்ராஸ் யூனிவர்சிடிக்கு ஆடல்ட் எஜுகேஷனுக்காக 50 இலட்சம் ரூபாய் சர்க்கார் பணம் போகிறது. அவர்களிடமிருந்து அதற்கான அக்கவுண்ட்ஸ் இதுவரை வந்ததா? கணக்கு காட்டாதவர்களுக்கு ஏன் பணம் கொடுக்க வேண்டும்? வைஸ் சான்சலர் கையெழுத்து இல்லாமல் அங்கே மோசடி நடந்திருக்கிறது. லோக்கல் ஃபண்ட் ஆடிட் இல்லாமல் சார்ட்டட் அக்கவுண்டன்ட் வைத்து ஆடிட் செய்து, வைஸ் சான்சலர் கையெழுத்தை எரேஸ் செய்து அரசாங்கத்திற்கு அனுப்புகிறார்கள். இப்படி பல தவறுகள் நடைபெற்றிருக்கின்றன. சிவில் சப்ளைஸ் டிபார்ட்மென்ட், பி.டபிள்யு.டி. கணக்கில் 30,000 ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். என்.எஸ்.எஸ். ஸ்கீமிலுள்ள பணத்தை எடுத்து அதற்கு செலவழித்துவிட்டு, சரியான கணக்கும் காட்டாமல், 30,000 ரூபாய்க்கு வவுச்சரும் கொடுத்திருக்கிறார்கள். அதை விசாரித்து கண்டுபிடித்திருக்கிறார்கள்; புகார் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இன்னும் நடவடிக்கை எடுக்கவில்லை. ஏன் என்று கேட்டால் விசாரணை செய்ய அதிகாரிகளைப் போட்டிருக்கிறோம் என்கிறார்கள். இத்தகைய தவறுகளுக்கு சரியான நடவடிக்கை எடுக்க முடியவில்லை. அதற்குக் காரணம் அங்கே தற்போது பெரிய பெரிய அதிகாரிகள் எல்லாம் போய் பார்ட் டைம் கோர்ஸ், ஈவினிங் காலேஜில் டிபார்ட்மென்ட் ஆஃப் பிஸ்னஸ் மானேஜ்மென்ட் படிக்கிறார்கள். ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் படிக்கிறார்கள்; ஐ.பி.எஸ். அதிகாரிகள் படிக்கிறார்கள். பிஸினஸ் மானேஜ்மென்ட் படித்து விட்டு அவர்கள் எங்கே போய் பிஸினஸ் பண்ணப் போகிறார்கள் என்று தெரியவில்லை. ஐ.பி.எஸ். அதிகாரி பாஸ்கரன் படிக்கிறார்; டிபுடி செக்ரட்டரி, பைனான்ஸ் கூட பார்ட் டைம் கோர்ஸ், பிஸ்னஸ் மானேஜ்மென்ட் படிக்கிறார். இன்னும் யார், யாரெல்லாமோ படிக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லாம் போய் இடம் பிடித்துக்கொள்வதால் மற்றவர்களுக்கு அங்கே இடம் கிடைக்கவில்லை. இந்த அதிகாரிகள் அங்கே போய் இடம் பிடித்துக்கொண்டதால் அங்கே கிரிமினல் கேசில் கூட நடவடிக்கை எடுக்க முடியவில்லை. ஐ.ஜி. மகன் அங்கே ஒரு ஸ்டூடன்ட். ஐ.ஜி. சொல்வதைச் செய்வார்களா? ஐ.ஜி மகன் சொல்வதைச் செய்வார்களா? அல்லது மற்றவர்கள் சொல்வதைச் செய்வார்களா?

அதுமட்டுமல்ல; அட்மிஷனில் பெரிய கோளாறு. எம்.பி.ஏ. கோர்சில் ஏற்கனவே போட்ட மார்க்கைத் திருத்தி, வேண்டியவர்களுக்கு அட்மிஷன் கொடுத்திருக்கிறார்கள். பெரிய பெரிய ஆட்களுக்கு, ஆந்திரா பாங்க் சேர்மன் மகளுக்கு அட்மிஷன் கொடுப்பதற்காக ஏற்கனவே போட்ட மார்க்கைத் திருத்தி, கூடுதல் மார்க் போட்டிருக்கிறார்கள். அந்த அம்மா இங்கேதான் படிக்க வேண்டுமா? வேறு எங்காவது போகக் கூடாதா அல்லது இடம் கிடைக்காதா? இப்படிப்பட்ட தவறுகளைப்பற்றி

1979 அக்டோபர் 29] [திரு. க. சுப்பு]

னல்லாம் கவர்னரிடம் புகார் கொடுத்திருக்கிறார்கள் ; கவர்னரும் ஒத்துக்கொள்கிறார். சி.பி.ஐ.யிடம் விசாரணைக்காக அனுப்பியிருக்கிறார்கள். அவர்களும் குற்றம் நடைபெற்றிருப்பதாகச் சொல்கிறார்கள். இப்படி அரசாங்கம் அலாட் செய்கிற பணம் முழுவதும் வீணாகிறது.

பேரவைத் துணைத் தலைவரவர்களே. உங்களுடைய கவனத்திற்கு இன்னும் ஒன்றை மட்டும் கொண்டுவர விரும்புகிறேன். நான் இந்த ஏவறுகளைப் பற்றி ஒரு கேள்வியில் கேட்டிருந்தேன். அதற்கு பதில் சொல்கிறார்கள். தங்களுடைய சட்டப்பேரவை வினா எண்ணைக் குறித்து கீழ்க்கண்ட விவரம் கோரப்படுகிறது. விவரம் கோரப்படுகிறதாம். வினாவில் கூறப்பட்டுள்ள புகார் மனு அரசுக்கு வந்துசேரவில்லை என்று தெரிய வருவதால், குறிப்பாக எப்போது அனுப்பப்பட்டது என்ற விவரம் கோரப்படுகிறது.

சென்னைப் பல்கலைக் கழக பதிவாளர், மற்றும் அதிகாரிகளைப் பற்றி 27—2—1978 அன்று புகார் அனுப்பப்பட்டுள்ளது. அப்படி தேதி சொல்லி, குறையை எடுத்துச் சொல்லியும் இதுவரை எந்தவிதமான பதிலும் இல்லை. இந்த டிபார்ட்மென்டைக் குறை சொல்லவில்லை. அவர்கள் விஷயத்தில் சும்மா இருந்து வருகிறது. சென்னைப் பல்கலைக்கழகப் பதிவாளராக இருந்தாலும் சரி, வைஸ்—சான்சலராக இருந்தாலும் சரி, அவர்கள் பணக்காரர்களாக இருக்க வேண்டுமென்பதில்லை. படித்தவர்களாக இருந்தால் போதும். அவர்கள்மீது இதுவரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்த நிலைமையில் இன்றைக்கு யூனிவர்சிடி போய்க் கொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பட்டது.).....

*திரு. சோ. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற கண்டனத் தீர்மானத்தில் என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாடு ஒரு 30, 35 ஆண்டுகளுக்கு முன்பு நம்முடைய நாடு அடிமையாக இருந்த காலத்தில் எப்படி இருந்ததோ அந்த நிலையில் இன்று நம்முடைய தமிழகம் இருக்கிறது என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய தமிழகத்தில் இப்போது நடந்து கொண்டிருக்கிற அரசாங்கத்தின் மூலம் ஏற்பட்ட பல குறைபாடுகளினால் மக்கள் மிகவும் துன்பத்தையும், துயரத்தையும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே இதற்கு முன்னால் பல உறுப்பினர்கள் மனதார பேசியவர்கள் சொன்னார்கள்—நம்முடைய நாட்டில் தமிழ்நாட்டில் விவசாயிகள் 100-க்கு 80 சதவீதம் பேர்கள் இருக்கிறார்கள். ஆனால் அந்த விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக ஏராளமாக கடன் வாங்கி உணவு உற்பத்தியை பெருக்

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1979 அக்டோபர் 29

கினார்கள். ஆனால் இப்போது இந்த அ.தி.மு.க. ஆட்சி வந்த பிறகு இந்தக் கூட்டுறவு சங்கங்கள் மூடப்பட்டு இப்போது விவசாயிகள் பெரிய முதலாளிகளிடம் கடன் வாங்கி உரம், விதை முதலியவற்றை வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது.

[மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.]

தமிழகத்தில் விவசாயிகளுக்காக எத்தனையோ பேர் போராடி இருக்கிறார்கள். ஆனால் இப்போது நாராயணசாமி நாயுடு அவர்கள் தலைமையில் போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. தமிழக விவசாயிகளுக்கு ஒரு அருமையான தலைவராக அவர்கள் திகழ்கிறார்கள். விவசாயிகள் குறைகளை ஆணித்தரமாக அரசுக்கு எடுத்துச் சொல்லக் கூடிய தலைவராக வந்தார்கள். அவர் மீது பொய் வழக்குகளைப் போட்டு, கொலை குற்றம் செய்தார்கள் என்று பொய்க் குற்றம் சாட்டி அவரைக் கைதியாக்கி இருக்கிறார்கள்.

இன்றைய தினம் விவசாயிகள் அவருக்காக கண்ணீர் வடிக்கும் நிலையில் இருக்கிறார்கள், அதற்கு இந்த அரசாங்கம் காரணம் என்பதை ஆணித்தரமாகச் சொல்கிறேன்.

அது மட்டுமல்ல; இன்று போலீஸ்காரர்கள் போராட்டம், பல ஆண்டுகளாக தன்னுடைய வாழ் நாள் முழுதும் போலீஸ் காரர்களுக்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்ட நைனார் தாஸ் அவர்களை சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்கள். அதனால் 50,000-க்கும் மேற்பட்ட போலீஸ்காரர்கள் இன்று போராட்டத்தைத் தொடங்கி இருக்கிறார்கள், இந்தப் போலீஸ்காரர்கள் போராட்டத்தின் காரணமாக அமைதி சுத்தமாக சீர் குலைந்து விட்டது. நாட்டில் எங்கு பார்த்தாலும் கொலை, கொள்ளைகள் நடப்பது வழக்கமான செயலாகி விட்டது. இப்படி எத்தனையோ காரியங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்ல முடியும்.

[பிற்பகல் 12-10]

இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு இடத்தில் பல ஆண்டு காலமாக செய்ய முடியாததை போலீஸ் இல்லை என்ற நிலையைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். மாலை முரசு பத்திரிகையில் ஒரு செய்தி வருகிறது. அதை நான் இங்கே படிக்க விரும்புகிறேன். ''கோஷ்டி கலவரம் ரூ. 8 இலட்சம் நகைகள் கொள்ளை. வீடு புகுந்து அள்ளிச் சென்றனர். கோஷ்டி கலவரத்தில் ரூ. 8 லட்சம் நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டன. வீடுகளுக்குள் புகுந்து நகைகளை அள்ளிச் சென்றார்கள்.

1979 அக்டோபர் 29] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

போலீஸ் வேலை நிறுத்தத்தை ஒட்டி ஒரு கோஷ்டியினர் அடுத்த கோஷ்டியினரின் வீடுகளுக்குச் சென்று கொள்ளை அடிக்க திட்டமிட்டார்கள். கன்னையன், சின்னச்சாமி, பேரப்பன், கண்ணன், முருகேசன், மற்றும் ஏறத்தாழ 40 பேர் ஆயுதங்களுடன் அடுத்த கோஷ்டியைச் சேர்ந்தவர்களின் வீடுகளுக்குச் சென்றார்கள்.''

[மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.]

இந்தச் செய்தி பத்திரிகையில் வந்திருக்கிறது. போலீசுக்கு தகவல் கொடுத்தால் கூட போலீஸார் இல்லாத காரணத்தால் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. இப்போது அங்கிருக்கிற மக்கள் தங்கள் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு தேட என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருப்பதாக எனக்குக்கூட தந்தி கொடுத்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம், இந்த அரசு போலீஸ்காரர்களிடம், போலீஸ் அதிகாரிகளிடம் சரியான அணுகு முறையை வைத்திருந்தால் இப்படிப்பட்ட கொடுமை நடந்திருக்காது. அதிகாரிகள் இந்த அரசாங்கத்திற்கும் சரி, அல்லது முன்பிருந்த அரசாங்கத்திற்கும் சரி, எந்த அரசாங்கம் வந்தாலும் சரி, அவர்கள் விசுவாசமான ஊழியர்களாக, அவர்களின் ஏவலாளர்களாக அவர்கள் சொன்ன காரியங்களைச் செய்த அருமையான ஊழியர்கள். அரசு தவறான காரியங்களைச் செய்ய உத்தரவிட்டால் கூட அவர்கள் அதற்காகப் பணிந்து போய் கெட்ட பெயர் வாங்கியவர்கள். அவர்களை நேரடியாகக் கூப்பிட்டு அரசாங்கம் பேசியிருந்தால் இப்படிப்பட்ட போராட்டம் நடந்திருக்காது. இது போன்று தொழிலாளர்களை எடுத்துக் கொண்டாலும், தொழிலாளர்களுக்கு இந்த அரசு எந்தவிதமான நன்மையையும் செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வதை தடுக்க ஒரு தடைச் சட்டம்கூட வர இருக்கிறது என்று எதிர்பார்க்கிறோம். தொழிலாளர்கள் தடைச் சட்டம் வருவதன் மூலம் தொழிலாளர்களை மறுபடியும் அடிமைகளாக்கி முதலாளிகளுக்கு ஒரு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்த இந்த அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. இன்று சென்னையை அடுத்த ஒரு இடத்தில் குரோம் லெதர் கம்பெனி என்று ஒன்று இருக்கிறது அங்கே ஆயிரம் தொழிலாளர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக அந்தக் கம்பெனியில் இருந்து சம்பளம் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக தொழிலாளர் நல அமைச்சர் அவர்களை நான் கூட அந்தத் தொழிலாளர்களோடு சேர்ந்து சந்தித்தேன். எவ்வளவோ முறை அவர்களை அணுகி அந்தத் தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கேட்டும்கூட இந்த அரசாங்கம் அவர்களுக்கு சிறிய அளவு கூட உதவி செய்யக்

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1979 அக்டோபர் 29

கூடிய விதத்தில் ஒன்றும் செய்யவில்லை என்று நான் குற்றஞ் சாட்ட விரும்புகிறேன். ஆயிரம் தொழிலாளர்கள் ஐந்நூறு தொழிலாளர்களாக ஆகி இன்று அவர்களது நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. அந்தத் தொழிலாளர்கள் இப்போது என்ன செய்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

குரோம் லெதர் கம்பெனி என்பது இந்த நாட்டில் நல்ல லாபம் தரக் கூடிய கோடானு கோடி ரூபாய் வருமானம் வரக் கூடிய ஒரு தொழில். அங்குள்ள தொழிலாளர்களின் அவல நிலையை போக்குகிற சூழ்நிலை ஏற்படாத நிலையில் இந்த அரசு நடந்து கொண்டிருக்கிறது. அதுமட்டுமல்ல,

திருச்சி மாவட்டத்தில் கல்லக்குடியில் சிமெண்ட் தொழிற் சாலை மூடப்பட்டுள்ளது. அதிலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் அரசு சொல்கிற எல்லாவிதமான சட்ட திட்டங்களுக்கும் உட்பட்டு நடக்கிறோம் என்று சொல்லியும் இந்த அரசு எந்த விதமான உதவியையும் செய்யவில்லை. இது மாதிரி எவ்வளவோ தொழிற்சாலைகள் மூடப்பட்டுக் கிடக் கின்றன.

தமிழகத்தைப் பொறுத்த வரையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தோடு காங்கிரஸ் கட்சி நீண்ட நாட்களாக உறவு வைத்துக் கொண்டிருந்ததன் காரணமாக எங்களுக்கு சமுதாயத்தில் இருந்த ஒரு பெரிய மரியாதைக்கு இழப்பு ஏற் பட்டது. இப்போது அந்தஉறவை ரத்து செய்து கொண்டிருக்கும் நிலையில் தமிழ்நாட்டு மக்கள் எங்களுக்கு ஒரு மரியாதையும் மதிப்பும் தந்திருக்கிறார்கள். இந்த நேரத்திலாவது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசினால் ஏற்பட்டிருக்கிற துன் பங்களையும் துயரங்களையும் சட்ட மன்றத்தில் எடுத்து வைக்க வேண்டும் என்று மக்கள் எங்களைக் கேட்டுக் கொண்ட தற்கிணங்கத்தான் நாங்கள் இந்தக் கண்டனத் தீர்மானத்தை கொடுத்திருக்கிறோம். இங்கு இந்தச் சட்ட மன்றத்தில் பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. பெரிய பெரிய திட்டங்கள் எல்லாம் கொண்டு வரப் போவதாக அறிவிக்கப்பட்டன. அதில் முக்கியமாக சொல்லப்பட்ட ஒரு திட்டம் நிலப் படை ஏற் படுத்தப் போகிறோம் என்பதாகும். நிலப்படை என்று

1979 அக்டோபர் 29] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

சொன்னவுடன் நான் கூட மகிழ்ச்சியடைந்து இந்த அரசைப் போல் ஒரு அரசு உண்டா என்று பாராட்டிப் பேசினேன். ஆனால் நிலப் படை வரவில்லை. இரண்டரை ஆண்டுகள் ஆகியும் நிலப்படை என்ன ஆயிற்று என்று தெரியவில்லை.

அதற்குப் பதிலாக அமைச்சர் ராகவானந்தம் அவர்கள் ஒரு திட்டத்தை அறிவித்தார்கள். 18 வயது நிறைந்த அத்தனை பேரும் அவர்கள் படித்தவர்களாக இருந்தாலும் சரி, படிக்காத வர்களாக இருந்தாலும் சரி, அவர்களுக்கு உடனடியாக வேலை கிடைக்கும் என்று சொன்னார்கள். நானும் எங்கள் பகுதியிலுள்ளவர்களிடம் வேலையில்லாமல் இருக்கும் ஆட் களிடம் உங்களுக்கெல்லாம் வேலை கிடைக்கும் என்று சொன்னேன். நம்முடைய அமைச்சர் அவர்களை அணுகி யாரிடம் இதற்காக அணுகுவது என்று கேட்டேன். கிராம சேவக்குகளைப் போய்ப் பார்த்து கேட்டால் போதும், அவர்கள் அரிசி கொடுப்பார்கள், நல்ல வேலை கிடைக்கும் என்று சொன் னார்கள். அமைச்சர் என்ன சொல்லுகிறார் என்றால், அரிசியைக் கொண்டு கருவாடு வாங்கலாம், கத்தரிக்காய் வாங்கலாம், உப்புக் கண்டம் வாங்கலாம், நன்றாக சாப்பிட்டு கொழு கொழு என்று இருக்கலாம் என்று திட்டத்தைப் பற்றி சொல்லுகிறார்கள்.

இதில் வேடிக்கை என்னவென்றால், இந்தத் திட்டத்தைப் பற்றி நாடோடி மன்னன் என்ற படத்தில் முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறாராம், நாடோடி மன்னன் படம் பார்த்திருக்கிறீர்களா என்று கேட்டார்கள். நாடோடி மன்னன் படத்தை நான் பார்க்கவில்லை என்று சொன்னேன். என்ன ஒவ்வொருவரும் பத்து தடவை பார்த்ததாக சொல்லு கிறார்கள். நீங்கள் ஒரு தடவைகூடப் பார்க்கவில்லை என்று சொல்லுகிறீர்களே என்று கோபப்பட்டுக் கொண்டார்கள். அந்தப் படத்தில் ''உணவு கொடு வேலை கொடு, வேலை கொடு உணவு கொடு'' என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். எவ்வளவுபெரிய தத்துவம், அந்த நாடோடி மன்னன் படத்தை இங்கேயே பெரிய இடமாக இருக்கிறது— போட்டுக் காண்பித்தாலும் கூட நல்லது தான். இப்படி அந்த நாடோடி மன்னன் தத்துவத்தை அமைச்சர் மாண்புமிகு இராகாவானந்தம் அவர்கள் ஊர் ஊராக பேசிக் கொண்டு இருக்கிறார்கள். அதிலும் முதலமைச்சர் அவர்களை வைத்துக் கொண்டே பேசுகிறார். அவரும் அதைப் பார்த்துக் கொண்டு சந்தோஷப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி இந்த அரசாங்கத்தை ஒரு கோமாளி அர சாங்கமாகவே மாற்றிவிட்டார்களே தவிர, உறுதியான ஒரு அரசாங்கமாகவோ, திறமையான அரசாங்கமாகவோ இல்லை. கேவலமான ஒரு சூழ்நிலையில் இன்றைய அரசாங்கம் வந்தி ருக்கிறது என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1979 அக்டோபர் 29

இன்றைக்கு எல்லா தரப்பார்களும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். விவசாயிகள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். தொழிலாளர்கள் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். காவல் துறையினர் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். ஆனால் சினிமா கொட்டகைக்காரர்கள் மட்டும் திருப்தி அடைந்திருக்கிறார்கள். தங்கள் வரியை காம்பவுன்ட் செய்து கொள்ளலாம் என்ற முறையை கொடுத்திருப்பதால் தங்களுக்கு மிகவும் திருப்தியாக இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசால் லாபம் அடைந்தவர்கள் சினிமாக் கொட்டகைக்காரர்களே தவிர வேறு யாரும் இல்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள், பாலிடெக்னிக் ஆசிரியர்கள், ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் இப்படி எல்லோருமே போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள். சிறிய கோரிக்கையைத்தான் அவர்கள் அரசின் முன் எடுத்து வைத்திருக்கிறார்கள். 10, 15 ஆண்டு காலமாக அவர்கள் வேலையில் அமர்ந்திருக்கிறார்கள், எங்களை எல்லாம் பெர்மெனண்ட் ஆக்குங்கள் என்று கேட்கிறார்கள். இவர்கள் ஒன்றுமே செய்ய மாட்டேன் என்று சொல்லுகிறார்கள். இதற்காக இன்றைக்கு மிகப் பெரிய போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் ஒரே ஒரு டிபார்ட்மென்டில் மட்டும் அதாவது திரைப்படக் கல்லூரில் பெர்மனென்ட் செய்தாகிவிட்டது. அந்த திரைப்படக் கல்லூரிக்கு சினிமா டைரக்டர் நீலகண்டன் என்பவர் தலைவராக இருக்கிறார். அங்கே 12 பேர்கள் பணியாளர்களாக இருக்கிறார்கள், அவர்கள் பெர்மனண்ட் செய்யப்பட்டு விட்டார்கள். காரணம் முதலமைச்சர் அவர்கள் எளிதில் பார்க்கக்கூடியவர் நீலகண்டன் ஒருவர் தான். அவர் பார்த்து இந்த 12 பேர்களையும் பெர்மனென்ட் பண்ணியிருக்கிறார்கள். இதைப்பார்த்தால், இப்படி முதலமைச்சர் அவர்களை பார்க்கின்ற சக்தியுள்ளவர்களுக்குத்தான் எதுவும் நடைபெறும் என்று தெரிகிறது, நமது கல்வி அமைச்சர் அவர்களுக்கு அந்த சக்தியில்லாமல் இருப்பதால் தான் ஆசிரியர்கள் போராட்டம் வளருகிறது. ஆசிரியர்களை பெர்மனன்ட் செய்வதில் என்ன கஷ்டம் இருக்கிறது என்று தெரியவில்லை. ஆனால் அரசு அதை பண்ணமாட்டேன் என்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், கல்வித்துறையைப் பொறுத்தவரையில் நமது கல்வி அமைச்சர் அவர்கள் நல்ல கெட்டிக்காரர் என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தேன். இப்போது ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்ஸ்டியூட் ஆப் காமர்ஸ் எஜூக்கேஷன் என்கின்ற அமைப்புக்கு காமர்ஸ் என்றால் வணிகம்—காமர்ஸ் படித்தவரை—எம். காம் படித்தவரை இதற்கு பிரின்ஸ்பாலாக போட்டிருக்கலாம். அதற்குப் பதிலாக ஒரு இன்சினியரை பிரின்ஸ்பாலாக போட்டிருக்கிறார்கள். இவர் சென்னையில் இருக்கவேண்டும் என்று விரும்புகிறாராம். இதற்காக இன்சினியர் ஒருவரை இன்ஸ்டியூட் ஆப் காமர்ஸ் காலேஜுக்கு பிரின்சிபாலாக போட்டிருக்கிறார்கள்.

1979 அக்டோபர் 29] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

கடைசியாகச் சொல்லவேண்டுமானால், தாய்மார்களை சுடு கின்ற போலீஸ் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசி லுள்ள போலீஸ்தான். முதலமைச்சர் அவர்களுடைய தொகுதி யிலேயே வாகைகுளத்தில் பெண்களைச் சுட்டார்கள். ஏராள மான பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்று தகவல் கொடுத்தும், நம்முடைய அரசு கொஞ்சம்கூட கவலைப் படாமல் ஒரு துப்பாக்கிச் சூடு நடத்தியது என்று சொன்னால், இந்த அரசு தானே தவிர வேறு எந்த அரசும் இருக்க முடியாது.

[பிற்பகல் 12—20]

பிறகு, பரமக்குடி தாலுகாவிலே கரம்பக்கூட்டம் என்ற கிரா மத்திலே விவசாயிகளையெல்லாம் போலீசாரை வைத்து அடித் தார்கள் ; மிகக் கடுமையாகத் தாக்கினார்கள். நான் இதைப் பற்றி மேலதிகாரிகளிடம் போய் கேட்டேன். கூட்டுறவு வகு லில் போலீசார் இவ்வளவுதூரம் கடுமையாக நடந்து கொண் டார்களே, இப்படி அக்கிரமமாக ஏன் நடந்து கொண்டார்கள் என்று கேட்டேன். எங்களுக்கு மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருக்கிறது. கூட்டுறவு வகுலில் உதவி செய்யவேண்டும், இதற்கு ஷூட்டிங்வரை செல்வதற்கும் சொல்லியிருக்கிறார்கள் என்றார்கள்.

கடைசியாக, இப்போது பஞ்சாயத்துக்களைக் கலைப்பது என் பது மிகவும் கொடுமையான செயல். கேரளாவிலே 14 ஆண்டு கள் வரை பஞ்சாயத்து தேர்தல் நடக்காமல் இருந்தது ; கடைசி யாக பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்தி விட்டார்கள். பார்லி மென்ட் தேர்தல் அறிவிப்பு வந்த பிறகும் பஞ்சாயத்து தேர் தலை நடத்தினார்கள். கர்நாடகாவிலும், தேவராஜ் அர்ஸ் அவர்கள் பஞ்சாயத்து தேர்தலை நடத்தி முடித்து விட்டார்கள். நம்முடைய அரசாங்கம் வந்து 2½ ஆண்டுகள் ஆகின்றன. வந்த தும் செய்வதாகச் சொன்னார்கள். உடனடியாகத் தேர்தலை நடத்திவிடுவதாகச் சொன்னார்கள். ஆனால் அப்படிச் சொன்னவர்கள் என்ன செய்தார்கள் ? 13,000 பஞ்சாயத்துக் களையும் கலைத்து விட்டார்கள். இது மிகவும் கொடுமையான செயல். எல்லா பஞ்சாயத்து தலைவர்களும் நல்லவர்கள் என்று நான் சொல்லவில்லை. அக்கிரமக்காரர்களும், அயோக்கியர் களும், திருடர்களும் சிலர் இருப்பார்கள். ஆனால், மொத்த முள்ள 13,000 பஞ்சாயத்துக்களிலே உள்ளவர்களும் கெட்டவர் கள் என்று சொல்ல முடியாது. அப்படிச் சொன்னால், இந்த நாட்டை ஆளும் அரசாங்கமும் கெட்ட அரசாங்கம்தான். ஒரே நாளில் சட்டத்தைப் போட்டு, 13,000 பஞ்சாயத்துக்களையும் கலைக்கக்கூடிய கொடிய அரசாங்கம் இனி இந்த நாட்டிலே இருக்கக்கூடாது என்று கூறிக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

4. அறிவிப்பு.

பேரவை அலுவல் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 29–10–1979 கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுத்த முடிவுகளின்படி, பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

29–10–1979 (திங்கட்கிழமை) ..	மாலை பேரவைக் கூட்டம் இல்லை.
30–10–1979 (செவ்வாய்க்கிழமை) ..	1. கேள்வி நேரம் இல்லை. 2. அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம்.
31–10–1979 (புதன்கிழமை) ..	1. 1979–80 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கை மீது விவாதமும், வாக்கெடுப்பும். 2. நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு அறிமுகம் செய்தல்.
1–11–1979 (வியாழக்கிழமை) ..	பக்ரீத்—விடுமுறை.
2–11–1979 (வெள்ளிக்கிழமை) ..	அரசினர் சட்ட முன்வடிவுகள்.
3–11–1979 (சனிக்கிழமை) ..	அரசின் ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானத்தின்மீது மேலும் விவாதம்—கடைசி நாள்.
4–11–1979 (ஞாயிற்றுக்கிழமை) ..	விடுமுறை.
5–11–1979 (திங்கட்கிழமை) ..	அரசினர் சட்ட முன்வடிவுகள்.
6–11–1979 (செவ்வாய்க்கிழமை) ..	அரசினர் சட்ட முன்வடிவுகள்.

பேரவை வழக்கம்போல் காலை 9 மணி முதல் கூடும்.

5. அரசினர் தீர்மானம்.

விதி 22ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் 'வினாக்கள்—விடைகள்' என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 22-ஐ நாளை 30–10–1979 அன்று தளர்த்தி அந்நேரத்தை வேறு அலுவல்களுக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற தீர்மானத்தை மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.

அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்— விவாதம் (தொடர்ச்சி).

*திரு. கு. ரமணி: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பில் இங்கே நடைபெறும் விவாதத்தில் அரசாங்கத்தினுடைய கொள்கைகள், நடைமுறைகள், சம்பந்த எங்கள் கட்சியினுடைய விமர்சனங்களை ஏராளவுக்கு நான் முன்பே பேசியவர் முன் வைத்துள்ளார். அதையொட்டி இன்னும் சில விஷயங்களையும் நான் சொல்ல விரும்புகிறேன்.

அரசாங்கம் தொழிலாளர்கள் மத்தியில் அனுஷ்டிக்கின்ற கொள்கைகளில் உள்ள குறைபாடுகளும், முரண்பாடுகளும், இது எப்படி தொழிலாளர்கள் வர்க்கத்தின் எண்ணங்களுக்கும், வாழ்க்கைக்கும் ஒத்துவராத முறையில் முரண்பாடாக வளர்ந்து பல போராட்டங்கள் நடந்துகொண்டே போவதற்கு வழி செய்கின்றது என்பதை நான் இங்கே எடுத்துக்காட்ட உள்ளேன்.

அந்த நிலையிலிருந்து அரசாங்கம் தன் போக்கை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் ஆதியிலிருந்து நாங்கள் கேட்டுக்கொண்டு வருகிற விஷயம். அணுகுமுறையில் மாற்றங்கள் வேண்டுமென்ற எங்கள் உறுதியான நிலையை எடுத்துக் கூறியுள்ளோம்.

அரசாங்கம் தொழிலாளர்களுக்காக கொடுக்கிற வாக்குறுதிகளை ஒன்றுகூட தவறாமல் நிறைவேற்ற வேண்டும். போராட்டங்கள் நடக்கிற காலத்தில் தொழிலாளர்கள்மீது வழக்குகள் வருகின்றன. போராட்டங்கள் முடிந்தபிறகு

[திரு. கு. ரமணி] [1979 அக்டோபர் 29

அந்த வழக்குகளை வாபஸ் வாங்குவது என்பது அநேகமாக சென்ற காலங்களில் வழக்கமாக நடந்து வந்துள்ளதைப் பார்த்துள்ளோம். இன்னும் அரசாங்கம் சில வழக்குகளை வாபஸ் வாங்கியிருக்கிறது. இல்லையென்று சொல்லவில்லை. ஆனால் வாக்குறுதிகள் கொடுத்த அந்த வழக்குகள் எல்லாவற்றையும் வாபஸ் வாங்காமல் நீண்ட நாள் இழுத்தடித்து தொழிலாளர்களுக்குச் சங்கடத்தையும் வேதனையையும் உண்டாக்கிய நிகழ்ச்சிகள் உண்டு.

தூத்துக்குடி ஸ்பிக் தொழிற்சாலையில் 90 தொழிலாளர்கள் மீது கிரிமினல் வழக்குகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. பொதுவாக அந்தத் தொழிலாளர்கள்மீது கொடுக்கப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற்று நல்ல சூழ்நிலையை உண்டாக்குகிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கைக்கேற்ப அந்தத் தொழிலாளர்கள் மீது வழக்குகள் வாபஸ் வாங்கப்படவில்லை. ஏற்கனவே இன்னொரு பிரச்சினை பற்றி இதே மாமன்றத்தில் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

கோவையில் லட்சுமி மில்ஸ் தொழிலாளர்கள் ஐந்தரை மாதம் போராடிய காலத்தில் ஆயிரம் தொழிலாளர்கள் மீது போடப்பட்ட 34 வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களிடம் நானே இரண்டு முறை நேரில் சொல்லி அவர்களும் அதைச் செய்கிறேன் என்று உறுதி சொல்லி செயலாளரைக் கூப்பிட்டு நடவடிக்கை எடுக்கும் படி எனக்கு முன்னாலேயே உத்திரவிட்டும்கூட அந்தத் தொழிலாளர்கள் மீதான வழக்குகள் வாபஸ் வாங்கப்படவில்லை. கடைசிவரை அந்த வழக்குகள் முழுவதையும் நீதிமன்றத்திலே வாதிட்டு விடுதலை பெற வேண்டி இருந்தது. இப்படிப்பட்ட நடைமுறை நிச்சயமாக அரசின்மீது தொழிலாளர்களுக்கு நல்லெண்ணம் வளர இடம் கொடுக்குமா என்றால் கொடுக்காது. இந்த நிலையை மாற்றி கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டும்.

ஈரோடு ஸ்ரீ கிருஷ்ணா ரிஃபைனரிஸ் மில்லில் 298 தொழிலாளர்களை, 111 பெண்கள் உட்பட, தொழிற்சாலையை விட்டு வெளியேற்றியிருக்கிறார்கள். அப்படி வெளியேற்றிவிட்டு, தஞ்சை போன்ற பிரதேசங்களில் இருந்து புதிய கூலித் தொழிலாளர்களைக் கொண்டு வந்து கம்பெனியில் வேலைக்கு முன் வைத்து பழையவர்கள் மீது எல்லாவிதமான அடக்குமுறைகளையும் கையாண்டிருக்கிறார்கள். தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருந்த பந்தலை ரவுடிகளை விட்டு கலைத்திருக்கிறார்கள். கடந்த ஒன்றரை ஆண்டு காலமாக அந்த 298 தொழிலாளர்களும் கம்பெனிக்குள் செல்லவில்லை. அதன் இரண்டு முதலாளிகள், இரண்டு மனைவிமார்கள் ஆக நான்கு பேர்கள் கொண்ட டைரக்டர்கள் ஐந்து கம்பெனிகளை ஆறு வருஷ காலம் ரிஜிஸ்டர்

1979 அக்டோபர் 29] [திரு. கு. ரமணி]

பண்ணாமல் நடத்திய கூட்டம் அது. இந்த தைரியம் எப்படி அவர்களுக்கு வந்தது? அரசாங்கத்திலுள்ள சில உயர்மட்ட அதிகாரிகள் லேபர் இலாகா உத்தியோகஸ்தர்கள், பாக்டரி இன்ஸ்பெக்டரேட் உத்தியோகஸ்தர்கள் இப்படி பலர் இவர்களுடைய செல்வாக்கில் இருக்கிறார்கள். இந்தத் தகவல் அத்தனையையும் இரண்டு முறை எழுதி முதலமைச்சர் அவர்களுக்கு நானே எடுத்துக் காட்டியபோது நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொன்னார். இந்த மன்றத்தில் இதுபற்றி எடுத்துக் காட்டியபோது அது சம்பந்தமாக பரிசீலனை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று சொன்னார். ஆனால், இன்றுவரை அதன்பேரில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மேலும், அங்கு அண்மையில் 40 ஆயில் மில்களில் தொழிலாளர்கள் போராட்டம் நடந்து கலெக்டர் தலையிட்டு மில்களைத் திறக்கும்படி வற்புறுத்திப்பேசி ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அங்கிருக்கும் முதலாளிகள் என்ன செய்தார்கள் என்றால் சிவில் சட்டத்தின் கீழ் இன்—செங்ஷன் ஆர்டர்—சொத்துப் பாதுகாப்பு என்ற முறையில் தடை உத்தரவு பெற்று தொழிற்சங்க இயக்கம் தலைதூக்க முடியாதபடி செய்து கொண்டிருக்கிறார்கள்.

[பிற்பகல் 12-30]

இப்படிப்பட்ட நிலைமைகள் வரும்பொழுது சிறிய தொழிலாளி, பெரிய தொழிலாளி என்பதல்ல பிரச்சினை, தொழிலாளர்களுடைய சட்டபூர்வமான உரிமையைப் பாதுகாப்பதற்கு அரசே முன்வந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும், அரசியல் பிரச்சினை ஒரு பக்கம் இருக்கலாம், இருந்தாலும் அரசாங்கம் தானே முன்வந்து நடவடிக்கைகள் எடுக்கின்ற நிலைமையில் அதன் நன்னடத்தை காரணமாக தனக்கு எதிராக இருக்கின்ற எதிர்க்கட்சிகளின்கீழே உள்ள தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்களைக்கூட அது வசிகரிக்கக்கூடிய நிலைமைகூட வரும். அப்படிப்பட்ட நடவடிக்கைகள் அரசினிடத்திலே இருந்து வரவேண்டும். அதே மாதிரி பீடித் தொழிலாளர்கள் பிரச்சினை. இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் தமிழ் நாட்டிலே இருக்கிறார்கள். அவர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டமும் ஒழுங்காக அமல் நடத்தப்படவில்லை. சட்டத்திலே பிராவிடண்ட பண்ட் பற்றி இருக்கிறது. ஆனால் முதலாளிகள் அதைப் பிடிப்பது இல்லை. அதைப் பிடிப்பதற்கு முடியாது என்றும் தங்களுக்கு கஷ்டம் ஏற்படுகின்றது என்றும் சொல்லி உயர்நீதி மன்றத்திலே வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். அதே மாதிரி எத்தனையோ விதிமுறைகள் இருக்கின்றன. அவைகள் புறக்கணிக்கப்படுகின்றன. தொழிலாளர்—முதலாளிகள் உறவை ரிக்கார் பண்ணுவதற்கு அடையாள கார்டுகள் போக்கன்கள் கொடுக்கப்படவில்லை. இந்த விஷயங்களில் முதலாளிகளை

[திரு. கு. ரமணி] [1979 அக்டோபர் 29

அழைத்துப் பேசி, அரசாங்கம் தன் செல்வாக்கைப் பயன்படுத்தி உயர்நீதிமன்றத்திலே வழக்குப்போட வேண்டாம், உங்களுக்குள்ள உறவை சரிப்படுத்தி பிராவிடண்ட் பண்ட் பிடிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கலாம். அவர்கள் கேட்காவிட்டால் அவர்கள் சட்டப்படி நடக்கவில்லை என்று அரசு வழக்கு போடுவதற்குப் பதிலாக இன்றைக்கு அவர்கள் வழக்கு போடக்கூடிய நிலைமையும் அதற்குத் தடையுத்தரவு வாங்கக்கூடிய நிலைமையும்தான் இருக்கிறது. அவர்கள் பிராவிடண்ட் பண்ட் பிடிக்கவே முடியாது என்று சொல்லமுடியாது, அதிலே அவர்கள் நிற்க முடியாது. எப்படியிருந்தாலும் பிடித்துத் தீரவேண்டும். அவர்களை வைத்துப் பேசி, நீதிமன்றத்திலே வழக்கு இருந்தாலும் அதை வாபஸ் வாங்கும்படிச் செய்து பிராவிடண்ட் பண்ட் பிடித்தம் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும், அந்தச் சட்டம் நல்ல முறையிலே நிறைவேறுமாறு செய்ய வேண்டிய கடமை அரசாங்கத்திற்கு இருக்கிறது. தொழிலாளர்களுக்குச் சட்டப்படி கிடைக்கவேண்டிய நன்மைகள் கிடைக்கச் செய்ய வேண்டியது அரசாங்கத்தினுடைய பிரதான கடமையாகும். அந்தக் கடமையைச் செய்யாத காரணத்தால் தொழிலாளர்களுக்குச் சங்கடங்கள் ஏற்படுகின்றன.

அதே போன்றுதான் தமிழகம் முழுவதும் உள்ள சானிடரி ஓர்க்கர்களை எடுத்துக் கொண்டால், பஞ்சாயத்துக்களிலும், நகராட்சிகளிலும் மாநகராட்சிகளிலும் தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட மக்கள் தொழிலாளர்களாகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும். அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற குறைந்தபட்ச ஊதியத்திற்குச் சமமாக ஊதியமும், பஞ்சப்படியும், வீட்டு வாடகைப்படியும் லீவு வசதிகளும் கொடுக்கப்பட வேண்டுமென்ற அந்த கோரிக்கைகளை வைத்து அவர்கள் கோரிக்கைகளை ஆதரித்து தமிழகம் முழுவதும் உள்ள தொழிற்சங்கங்கள் ஒன்று சேர்ந்து பேசினோம். ஒரு சந்தர்ப்பத்தில் நானும் திரு. கோதண்டராமன் அவர்களும் ஆக இரண்டு சட்டமன்ற உறுப்பினர்களும் இரண்டு அமைச்சர்களை அதாவது உள்ளாட்சி துறை அமைச்சரையும் – சுகாதார துறை அமைச்சரையும் சந்தித்துப் பேசி – ஒருவர் சம்மதித்தாலும் மற்றொருவர் சம்மதிக்காவிட்டால் அதை நிறைவேற்றமுடியாது. உத்தரவு போடமுடியாது – கூட்டாகப் பேசியும்கூட இன்றுவரையில் அதுபற்றி உத்தரவுகள் போடப்படவில்லை. ஜி. ஓ. போடப்படவில்லை. அதன் காரணத்தினால் அந்தத் தொழிலாளர்களிடத்திலே குமுறல் ஏற்பட்டிருக்கிறது. அவர்கள் நோட்டீஸ்விட்டு வேலை நிறுத்தம் செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது. அதேபோல் பீடித் தொழிலாளர்களும் நோட்டீஸ் விட்டு வேலை நிறுத்தம் செய்யக்கூடிய நிலைமை இருக்கிறது. இவர்களையெல்லாம் போராட்டம் போராட்டம் என்று அலைகிறார்கள்

1979 அக்டோபர் 29] [திரு. கு. ரமணி]

என்று குற்றஞ்சாட்ட முடியுமா ? தொழிலாளர்கள் மன எரிச்சலும், குமுறலும் அடைந்திருக்கிறபோது அதைப் போக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து கல்வியைப் பொறுத்தவரையிலே பள்ளிக்கூடங்களிலே பல இடங்களிலே ஆசிரியர்கள் நியமிக்கப்படாத குறை இருந்து வருகிறது. எனக்குத் தெரியும், கோவை நகரம் சித்தாபுதூரில் உள்ள மேல்நிலைப்பள்ளியில் 16 ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருக்கிறார்கள். 11-வது வகுப்பு, 12-வது வகுப்புக்கு வேண்டிய ஆசிரியர்கள் விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கான ஆசிரியர்கள் போடப்படாத நிலைமை இருக்கிறது. இதன் காரணத்தால் நான்கு மாதங்களுக்குப் பிறகும் அந்த வகுப்புகளில் காலாண்டுத் தேர்வு நடைபெறாத நிலைமை இருக்கிறது.

இப்படி பல உயர்நிலைப்பள்ளிகள், மேல்நிலைப்பள்ளிகள் ஆகியவைகளில் அந்த நகரத்திலே நடந்திருக்கின்றன. எத்தனை கிராமங்களில், எத்தனை பஞ்சாயத்து யூனியன்களில், எத்தனை பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் போடப்படாமல் இருக்கிறார்கள் என்பது யோசிக்கப்பட வேண்டிய விஷயம். நாங்களும் முனிசிபாலிட்டியிடம் சொல்லிப் பார்த்தோம், கல்வி அதிகாரிகளிடம் சொல்லிப் பார்த்தோம். ஆனால் அவர்கள் சொல்வது, நாங்கள் இதற்குக் கிலியரன்ஸ் கொடுத்திருக்கிறோம் என்பது. அப்படியானால் அதை யார் செய்யாமல் இருக்கிறார்கள் என்பது சந்தேகமாக இருக்கிறது. உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் கார்ப்பரேஷனில் உள்ள காலியிடங்களைப் பற்றிச் சொல்லும்பொழுது நிதிப்பற்றாக்குறை இதற்கொரு காரணம் என்று சொன்னார்கள். அந்தக் கண்ணோட்டத்தோடு இது நடக்கிறது என்றால், பள்ளிகளில் வகுப்புகளை நடத்த வேண்டிய நேரத்தில் ஆசிரியர்கள் இல்லாமல் மாணவர்கள் படித்தால் எப்படி பத்தாவது தேறுவார்கள், பதினொன்றாவது தேறுவார்கள், 12-வது வகுப்பிலே எப்படித் தேறுவார்கள் ? அவர்களுடைய கல்வி என்ன ஆகும் ? இந்த நிலைமைக்கு யார் காரணம் ? கல்வியமைச்சரைக் கேட்டால் நான் செய்யவேண்டியதைச் செய்து கொடுத்து விட்டேன் என்று சொல்கிறார்கள். இப்படி ஒரு இடத்தில் டபுள் அதிகாரம் இருப்பதால் நடத்த முடியாமல் சிக்கலா ? அதனால்தான் இந்தச் சீரழிவா ? எப்படியிருந்தாலும் இதன் காரணமாகப் பெற்றோர்களுக்கும், பொது மக்களுக்கும் மன எரிச்சல் இருக்கிறது. தங்கள் குழந்தைகளுக்குக் கல்வி கற்றுக் கொடுக்க ஆசிரியர்கள் இல்லையே என்ற வருத்தமும், வேதனையும் அவர்களிடத்திலே இருக்கிறது. இது கட்சிக் கண்ணோட்டத்தோடு, அரசியலோடு, கூட்டுச் சேரும் விஷயத்தோடு ஒப்பிட்டுப் பார்த்து, ஊரைத்துப் பார்த்து செய்ய வேண்டிய விஷயம் அல்ல, இது அரசாங்கத்தின் நடைமுறை பற்றிய

[திரு. கு. ரமணி] [1979 அக்டோபர் 29

விஷயம். ஆகவே, அரசு இதைக் கவனத்திற் கொண்டு, எந்தெந்தப் பள்ளிகளில் ஆசிரியர்கள் போடப்படாமல் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் உடனடியாக ஆசிரியர்கள் போடப்படவேண்டும். படித்துப் பட்டம் பெற்ற ஆசிரியர்கள், செகன்டரி கிரேடு ஆசிரியர்கள், தமிழாசிரியர்கள், இன்னும் மற்ற ஆசிரியர்கள் வேலையில்லாமல் தெரு சுற்றிக்கொண்டு வந்து அரசினிடத்தில் வேலை கேட்கின்ற இந்த நேரத்தில் ஆசிரியர்கள் இல்லாமல் தேர்வு நின்று விட்டது என்றால் அது மிகவும் வெட்கக்கரமான விஷயம் என்பதைச் சிந்திக்க வேண்டும். இதைத்தான் அரசாங்கத்தைத் தாக்கக்கூடிய சரியான ஆயுதமாகப் பயன்படுத்துகிறார்கள். அதற்காக ஆத்திரப்பட்டுப் பிரயோசனம் என்ன? இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, சேஷசாயி பேப்பர் மில் பிரச்சினையைப்பற்றி தோழர் உமாநாத் அவர்கள் பேசும்பொழுது மிகவும் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். திரு. சுப்பு அவர்கள்கூட எங்களைத் தாக்கியும் கிண்டலுமாகப் பேசினார்கள். இன்றைக்கு நான் சொல்ல விரும்புகிறேன். 12 (3) சட்டத்தைப் பாதுகாப்பது என்ற பெயரால் இம்மாதிரி பல தொழில் தகராறுகள் முடிக்கப்பட வேண்டிய காலத்தில், ஒரு சிறு அணுகுமுறை தந்திரத்தில் மாற்றம் செய்துகொண்டு வர அரசால் முடியும். அவ்வாறு முடிக்கக்கூடிய விஷயத்தில் தலையிடாமல் இருப்பது மிகப்பெரும் தவறு.

கோவை லட்சுமி மிஷின் ஒர்க்ஸ் போராட்டத்தில்கூட 12 (3) செட்டில்மெண்டு போட்டதால் வேறு ஒப்பந்தம் செய்ய முடியவில்லை என்று இறுதியில் முதலமைச்சரின் தீர்ப்புக்கு விட்டுவிட்டோம். அவர்கள் தீர்ப்பு கொடுத்து பிரச்னை தீரவில்லையா?

அன்றைக்கு சிம்கோ மீட்டரைப் பொறுத்த வரையில் ஐ.என்.டி.யூ.சி. கோர்ட்டிலே வழக்கு தொடர்ந்திருக்கிறார்கள். அதற்கு பிரஜூடிஸ் இல்லாமல், சட்டத்தை மீறிச் செல்லாமல், முதலமைச்சர் அவர்கள் பேசி தீர்ந்து விட்டது; பிரச்சனை முடிக்கப்பட்டு சந்தோஷமான நிலை ஏற்பட்டது.

இதைப்போல சேஷசாயி காகித ஆலை பிரச்சனையிலும் செய்ய முடியாதா? செய்ய முடியும். அவர்களுக்குக் குறைகள் இருக்கின்றன. ஐந்து வருஷ ஒப்பந்தம் என்பதை அவர்கள் ஒப்புக்கொள்ளவில்லை. 4,500 டன் உற்பத்தி கொடுத்தால்தான் உற்பத்தி போனஸ் என்பதையும் அவர்கள் ஒப்புக் கொள்ளவில்லை. இவைகளை அந்தப் போராட்டத்தை நடத்தக்கூடிய தொழிலாளர்கள் சொல்கிறார்கள். அடிப்படைச் சம்பளமான ஐந்து ரூபாய் மட்டும் இணைக்கப்படாது, தனியாகத்தான் இருக்கும் என்று சொல்லப்படுகிறது. இதையெல்லாம் லேபர் இலாக்கா டிப்டி

1979 அக்டோபர் 29] [திரு. கு. ரமணி]

லேபர் கமிஷனர் எப்படிப் புரிந்துகொண்டு கையெழுத்துப் போடுகிறார் என்று தெரியவில்லை. இது அரசைக் கேட்க வேண்டிய கேள்வி, அதிகாரிகளைக் கேட்க வேண்டிய கேள்வி. இது அவர்களிடம் கராராக லசானைப்போட்டுப் பிடித்து கேட்கப்பட வேண்டியவை ஆகும். அதிகாரிகள் பெரும் செல்வம் படைத்த முதலாளிகளிடம் சிக்கிக்கொண்டு திண்டாடுகிறார்கள். அதன் கெடுதலை பஞ்வை சர்க்கார் ஏன் ஏற்றுக்கொள்ள வேண்டும்? எனவே, இந்தப் பிரச்னை ஹைகோர்ட்டில் இருக்கிறது என்ற நிலை இல்லாமல், 12(3) செட்டில்மெண்ட்டின் பத்தினித் தன்மையை அசைக்கக் கூடாது என்று இல்லாமல், அரசு தன்னுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி, முதலாளிகளோடு பேசி முடிவு காண வேண்டும். தொழிலாளர்கள் இன்றைக்கு எரிச்சல் அடைந்திருக்கின்ற காரணத்தால் 150 டன் காகிதம் எடுக்கின்ற அந்தக் கம்பெனியில் உற்பத்தி இல்லை. இது உண்மை நிலை. பலாத்காரம் செய்கிறார்கள் என்று சொல்லி தொழிற்சங்க இயக்கத்தைத் தடை செய்தால் பிரச்சனைகள் தீராது, அது நீண்டுகொண்டேதான் இருக்கும்.

[பிற்பகல் 12-40]

தொழிலாளர்கள் பிரச்னைகளை இந்த அரசாங்கம் பேசி சுமுகமாக முடிவு செய்ய வேண்டும். அப்படிப் பேசி முடிவு செய்தால் அந்தத் தொழிலாளருக்கு உங்கள் அரசாங்கத்தினுடைய தன்மையைப் பற்றி மனதிற்குள் திருப்தி ஏற்படுகிறதா இல்லையா என்று பாருங்கள்.

சென்னை நகரத்திலே குரோம் லெதர் ஃபாக்டரி இருக்கிறது. 16 மாதங்களாக இது மூடிக் கிடக்கிறது. அரசாங்கம் நடவடிக்கை எடுக்க மாட்டார்கள் என்ற துணிவில் அக்கிரமமாக முதலாளி லாக் அவுட் செய்திருக்கிறார். 500, 600 தொழிலாளர்கள் பட்டினி கிடக்கிறார்கள். 8 தரம் கோட்டையை நோக்கி ஊர்வலம் வந்திருக்கிறார்கள். அவர்களைப் பட்டினியில் இருந்து காப்பாற்ற முதலமைச்சர் நிதியிலிருந்து ரிலிப் கொடுத்து கம்பெனியை நடத்துவதற்கு எந்த முறையிலாவது பொருளாதார ஏற்பாடு செய்வதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கத்தினுடைய அணுகுமுறையில் தொழிற்சங்கங்களும், தொழிலாளர்களும் பாதிக்கப்படும் வகையில் மட்டும் சட்டம் பயன்படுத்தப்படாமல், தொழிலாளர்களைப் பாதுகாக்கிற முறையில் அரசின் அணுகுமுறை இருக்க வேண்டும். கிரிமினல், சிவில் சட்டங்களைப் போல தொழிற்சட்டங்களைப் பிரயோகிக்கக் கூடாது. ஜனநாயக நடைமுறையில் எப்படி

[திரு. கு. ரமணி] [1979 அக்டோபர் 29

சட்டத்தைப் பிரயோகித்தால் வளர்ந்து வருகிற ஜனநாயகத்திற்கு ஏற்புடையதாக இருக்குமோ அப்படிச் சட்டங்களைப் பிரயோகிக்க வேண்டுமென்பது எங்களுடைய கருத்து. இந்தப் போக்கு அரசிடத்தில் மிக மிகக் குறைவு என்பது எங்கள் கணிப்பு.

தேவையான இடங்களில் அரசாங்கம் தலையிட வேண்டும். அப்படித் தலையிட்ட சில சமயங்களில் நல்ல பலன் ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர்களுடைய பிரச்சனைகளை புதிய முறையில் அணுக வேண்டும். தேவையான இடங்களில் தொழிலாளர்களைப் பாதுகாக்க அரசு தலையிட வேண்டும் என்பது எங்கள கோரிக்கை.

இன்னும் ஒன்றிரண்டு விஷயங்களைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். என்னுடைய மதிப்பிற்குரிய நண்பர் தோழர் சுப்பு அவர்கள் பேசுகிறபோது ஒன்றைக் குறிப்பிட்டார். தமிழகத்தில் இருக்கிற ஜனதா கட்சி, ஜனசங்கம் இல்லாத கட்சி என்று கூறி மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உடன்பாடு செய்து கொள்கிறது என்று சொன்னார்கள். அவரை நான் ஒன்று கேட்க விரும்புகிறேன். ஜனதா கட்சியோடு மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இந்தத் தேர்தலுக்காக ஒப்பந்தம் செய்து கொண்டதாக எந்த ஒரு நிகழ்ச்சியையாவது நீங்கள் காட்ட முடியுமா ? அகில இந்திய ரீதியிலே அக்கட்சியோடு எங்கள் கட்சி ஒப்பந்தம் செய்வது இல்லையே, எங்களுக்கும் ஜனதா கட்சிக்கும் கொள்கையிலே வேறுபாடே தவிர வேறு விரோதங்கள் இல்லை. வகுப்புவாத சக்திகளோடு ஜனதா கட்சிக்குத் தொடர்பு இருப்பதால் கொள்கை வேறுபாட்டால் நாங்கள் அவர்களோடு கூட்டு சேருவதில்லை. இது ஊர் அறிந்த, உலகம் அறிந்த உண்மை. சுப்பு அவர்களுக்குத் தெரியாதா ? தாககுவதற்கு வேறு எதுவும் கிடைக்காவிட்டால் விறகு கடைக்குப் போய் சரக்கை ஏற்றி இறக்குமதி செய்யக் கூடாது.

திரு. க. சுப்பு : தோழர் ரமணி அவர்களுக்கு ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அவர் ஜனதா கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கூட்டே இல்லை என்று சொன்னார்கள், ஆனால் 1977-ல் ஜனதா, கம்யூனிஸ்ட் (மார்க்ஸிஸ்ட்), தி.மு.க. எல்லோரும் சேர்ந்து போட்டியிட்டிருக்கிறோம்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, தோழர் சுப்பு அவர்கள் வாதம் செய்கிறார். அந்த விவாதத்திற்கு விதண்டாவாதம் என்று சொல்லலாம். நான் அந்தப் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அன்றைக்கு நாங்கள் ஜனதாவை ஆதரித்தது தப்பு என்று அவர் சொல்கிறாரா ? சர்வாதிகாரத்தை வீழ்த்து

1979 அக்டோபர் 29] [திரு. கு. ரமணி]

வதற்கு இந்த நாட்டினுடைய அத்தனை சக்திகளும் கட்சிகளும், சேர்ந்து போராடினோம், போட்டியிட்டோம். நீங்களும் சேர்ந்து தான் செய்திருக்கிறீர்கள். நாங்கள் அந்த ஒற்றுமையைப் பயன் படுத்திக் கொண்டோம். நீங்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இப்போது சர்வாதிகாரத்தைப் பெற்றெடுத்த சர்வாதிகாரிக்கு நீங்கள் ஏஜண்டுகளாகப் போய்விட்டீர்கள் என்று சொல்வது சரியாக இருக்கும்.

திரு. த. ஆறுமுகம் : தலைவரவர்களே,

திரு. க. சுப்பு : தலைவரவர்களே, நான் அவருக்கு விளக்கம் சொல்லி விடுகிறேன்.

திரு. கு. ரமணி : ஐ ஆம் நாட் யில்டிங். நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், தோழர் ஆறுமுகம் அவர்களும், நேமிழர் சுப்பு அவர்களும் எனக்கு ரொம்ப மதிப்பிற்குரிய தோழர்கள். அவர்களோடு நாங்கள் சேர்ந்தது உண்டு. தமிழகத்தில் இருக்கும் வர்க்க அமைப்பு, பொருளாதார அமைப்பு, சமூக அமைப்பு இவற்றைப் பற்றி எங்களுக்கு ஒரு விஞ்ஞான கண்ணோட்டம் உண்டு. அந்தக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் திராவிட முன்னேற்றக் கழகமும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் எங்களுக்கு என்றென் றைக்கும் அரசியல் விரோதிகள் அல்ல. அவர்களோடு சரியான சமயங்களில் கூட்டு சேர்ந்து காரியங்கள் செய்வோம். அவர் களுடைய கண்ணோட்டம், போக்கு மாறுபட்டால், நாங்கள் தந்திரங்களை மாற்றி விடுவோம். இன்றைக்கும் அவர் கள் கொள்கையில் மாற்றம் கொள்ளாமல் இருந்து இருந்தால் ஒப்பந்தம் இருந்து இருக்கும். அவர்கள் கொள்கை மாறி வந் தால் மறுபடியும் நாங்கள் சேருவோம். இல்லையென்றால், அவர்கள் மாறிவருகிறவரையில் அவர்கள் கொள்கைகளை நாங்கள் விமர்சனம் செய்தும், எதிர்த்தும் கண்டித்துக்கொண்டும் இருப்போம். ஆனால் மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியின் நிலையில் மாறுதல் இருக்காது.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நாங்கள் மாறினால் அவர்களும் மாறுவோம் என்று குறிப்பிட்டார். நன்றி. 1977 நாடாளுமன்றத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சியோடு சேர்ந்துதான் தேர்தலில் ஈடு பட்டது. அதற்குப் பிறகு நாங்கள் எந்த மாற்றத்தையும் பெற வில்லை. தோல்வி அடைந்தோம் என்பதைத் தவிர வேறு இல்லை. சட்டசபைத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சி இணையாத காரணம் என்ன ? நாங்கள் என்ன மாற்றத்தை ஏற்படுத்தினோம்? ஏன் நீங்கள் இணையவில்லை?

[1979 அக்டோபர் 29

திரு. என். சங்கரய்யா : இதே கேள்வி முன்பு நடந்த ஒரு விவாதத்தில் விரிவாக நான் பதில் சொல்லி இருக்கிறேன். நான் மீண்டும் அதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். 1977 மார்ச்சில் நடைபெற்ற தேர்தலில் அகில இந்திய ரீதியில் யார் ஆட்சியை அமைப்பது என்பது குறிக்கோளாக இருந்தது. அந்த நேரத்தில் இந்திரா காங்கிரஸ் கட்சியை முறியடிக்க ஜனதா கட்சியோடும், திராவிட முன்னேற்றக் கழகத்தோடும் சேர்ந்து போராடினோம். 1977 ஜூனில் நடைபெற்ற தேர்தலில் தமிழகத்தில் யார் ஆட்சியை கைப்பற்றுவது என்பது குறிக்கோளாக இருந்தது. 1970 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருந்தவரை, நாங்கள் எதிரும் புதிருமாக இருந்தோம் என்பதை நாடு அறியும். தோழர் வி. பி. சிந்தன் அவர்களை கத்தியால் குத்தும் அளவிற்கு திராவிட முன்னேற்றக் கழகம் எங்கள் தொழிற்சங்க இயக்கத்தை தாக்கியது என்பதும் தெரியும். சிம்சன் போராட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சி போராடியது. ஆகவே, அகில இந்திய ரீதியில் 1977 மார்ச்சில் தி.மு.க.வோடு சேர்ந்து நாங்கள் போராடிய போது, தி.மு.க. ஆட்சிக்கு வரப் போவது இல்லை. ஆகவே, தைரியமாக ஆதரித்தோம்.

ஆனால் 1977 ஜூனில் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு சேர்ந்து இருந்தால், தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து இருக்கும். இந்த மாநிலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் நடத்துகிற ஆட்சியில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்கிற காரணத்தாலும், கடந்த கால சரித்திரத்தின் அடிப்படையில் தமிழ் நாட்டு மக்கள் தி.மு.க.வை விரும்பவில்லை என்ற காரணத்தாலும், நாங்கள் ஜனநாயக ரீதியில் அவர்களோடு சேரவில்லை. நான் மேலும் சொல்லுகிறேன். சமீபத்தில் தஞ்சாவூரில் நடந்த தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சியை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்த்ததால், அவர்களோடு முழுமனதோடு நாங்கள் சேர்ந்து போராடினோம். இன்றும் இந்திரா காங்கிரஸ் கட்சியை அவர்கள் எதிர்த்து இருந்தால், அவர்களோடு தொகுதி உடன்பாட்டிற்கு வந்து இருப்போம், அவர்கள் மாறிவிட்டார்கள். நாங்கள் என்ன செய்ய முடியும்.

திரு. மு. கருணாநிதி : இன்றைக்கு தமிழகத்தில் உள்ள ஆளும் கட்சி தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை தடை செய்து உத்தரவு பிறப்பித்து இருக்கிறது. இப்போது நடை பெறுகின்ற தொழிற்சங்கப் போராட்டங்கள் எல்லாம் உடைக்கப் படுகின்றன. அதைப் பற்றி திரு. உமாநாத் அவர்கள் கண்டனம் செய்தார்கள். அவைகளை ஏன் நீங்கள் கணக்கு எடுத்துக் கொள்ளவில்லை;

1979 அக்டோபர் 29]

திரு. எஸ். சங்கரய்யா : நிச்சயமாக கணக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்றுகிறது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மாநிலத்தின ஆளும் பொறுப்பில் உள்ள கட்சி. அதன் கொள்கையில் தவறு ஏற்படுகிறபோது அதைக் கண்டித்து இந்த மாநிலத்தில் போராட்டங்கள் நடத்திக்கொண்டு தான் இருக்கிறோம். ஆனால் அதைக் காரணமாக வைத்து, இன்றைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக்கழகத்தையும், இந்திரா காங்கிரசின் யதேச்சாதிகாரத்தையும் எதிர்த்துப் போராட முன வருகிறபோது, அவர்களுடைய இந்த தொழிலாளர்கள் கொள்கை, மற்ற கொள்கைகளைக் காரணமாக வைத்து நாங்கள் சேரமாட்டோம் என்று கூறினால், நீங்கள் செயலலி யிருப்பதுபோல், தமிழகத்தில் 40 பாராளுமன்றத் தொகுதியில் 23-ஐ இந்திரா காங்கிரஸ் கட்சி எனகிற யதேச்சாதிகார கடசுக்கு தானம் கொடுத்ததுபோல் ஆகிவிடும். அப்படிச் செய்ய வரும் பாத காரணத்தால்தான் அதைச் செய்யவேண்டியிருக்கிறது.

அவசரச் சட்டம் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் ஆட்சி கொண்டு வந்து இருப்பது பற்றி கூறினார்கள். நாங்கள் அவர்களிடம் கூறியிருக்கிறோம். அந்த வாபஸ் வாங்கவேண்டும் என்று. அத்தியாவசிய சாவீசுகளில் வேலை நிறுத்தத்தைத் தடைசெய்து அவசரச் சட்டம் கொண்டு வந்து இருப்பதை வாபஸ் வாங்காமல், சட்டமன்றத்தில் சட்டமாக அந்த ஆக்க முன்வந்தால், அதை நாங்கள் வன்மையாக எதிர்ப்போம். எந்த நிலை வந்தாலும் அந்தச் சட்டம் வரக்கூடாது, அதை வன்மை யாக எதிர்ப்போம் என்பதையும், தொழிலாளர்களுக்கு விரோதமாக வரும் எதையும் நாங்கள் எதிர்ப்போம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பாரம்ப காரசாரமாக யதேச்சாதி கார இந்திரா காங்கிரஸ் கட்சி என்று சொன்னார்கள். என்ன யதேச்சாதிகாரத்தை நாங்கள் இங்கே செய்து கொண்டு இருக்கிறோம். ஆட்சியில இருந்து கீழே நாங்கள் இறங்கி இருக்கிறோம். இப்போது ஆட்சியைப் பிடிக்கப்போகிறோம். நாளைக்கு இந்திரா காந்தி பிரதம அமைச்சராக வந்து ஆட்சியைக் கைப்பற்றப் போகிறார்கள். அதை யாராலும் தடுக்க முடியாது. எங்கே யதேச்சாதிகாரம் இருக்கிறது. எங்கே சர்வாதிகாரம் இருக்கிறது என்பதை நாளைக்குப் பார்க்கப்போகிறோம்.

திரு. மு. கருணாநிதி : திரு. சங்கரய்யா அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். ஏதோ அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இந்திரா காங்கிரஸ் கட்சியின் யதேச் சாதிகரத்தை எதிர்த்த காரணத்தால தான் உடன்பாடு கொள்ள வில்லை என்று குறிப்பிட்டார்கள். அது ஏற்றுக்கொள்ளக்கூடிய

[திரு. மு. கருணாநிதி] [1979 அக்டோபர் 29

கருத்து அல்ல. இந்திரா காங்கிரஸ் கட்சியோடு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் உடன்பாடு கொள்ளாததுயதேச்சாதிகாரம் காரணம் அல்ல என்பதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். அவர்களுக்குள் உடன்பாடு ஏற்படாத காரணத்தால்தான் மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சி அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத்தோடு உடன்பாடு ஏற்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

[பிற்பகல் 12—50]

திரு. என். சங்கரய்யா : இப்போது அவர்கள்கூறுகிறார்கள். அண்ணா துராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்திரா காந்தி காங்கிரசுக்கும் உடன்பாடு ஏற்படாமல் போனதற்குக் காரணம் யதேச்சாதிகாரம் என்றும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உறுதியான கொள்கை இல்லை என்றும் கூறுகிறார்கள். எங்களுடைய அணுகுமுறையில் தி.மு.க. வும் அண்ணா தி.மு.க. வும் அகில இந்திய ரீதியிலே இந்திய பெரும் முதலாளிகளை வைத்து நடத்துகிற கட்சிகளோடு சேர்ந்திருக்கிறீர்கள். ஆனால் எங்களுடைய கண்ணோட்டத்திலே நாங்கள் ஒரு கொள்கையை வகுத்துக்கொண்டு அதற்கு முன் பின் முரண் இல்லாமல் நடந்துகொண்டிருக்கிறோம்.

எதார்த்தத்திலே முன்பெல்லாம் நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அண்ணா தி.மு.க. கூட்டணி, தி.மு.க. கூட்டணி என்று இப்போது நீங்கள் செய்திருக்கிற ஏற்பாட்டின்படி தி.மு.க. கூட்டணி என்று சொல்ல முடியாது. இந்திரா காங்கிரஸ் கூட்டணியில் தி.மு.க. போய் சேர்ந்திருக்கிறது. இதில் நீங்கள் எப்படி இருந்தாலும், கடந்த காலத்தில் அண்ணா தி.மு.க. என்ன கருத்து கொண்டிருந்தாலும், வருங்காலத்தில் லோக்சபை தேர்தலில் இந்திரா காங்கிரஸை வன்மையாக எதிர்க்கக்கூடிய அணியில் அவர்கள் இருப்பதால் அவர்களோடு சேர்ந்திருந்தால் பெரும் பாலான இடங்களில் இந்திரா காங்கிரஸை தோற்கடிக்க முடியும் என்ற அரசியல் கண்ணோட்டத்துடன்தான் இன்றைக்கு நாங்கள் ஆவர்களோடு சேர்ந்திருக்கிறோம்.

திரு. மு. கருணாநிதி : இதிலும் சங்கரய்யா தவறு செய்கிறார். அண்மையிலே திருச்சியிலே பேட்டி கொடுத்த பாலபழநியர் அவர்கள் ஒருவேளை மத்தியில் இந்திரா காங்கிரஸ் அமைச்சரவை அமையுமானால் அதற்கும் நாங்கள் ஆதரவு கொடுப்பது தவிர்க்க முடியாதது என்று கூறியிருக்கிறார்.

திரு. என். சங்கரய்யா : அப்படி ஒரு நிலையை எடுத்தால் அதை நாங்கள் எதிர்ப்போம். அதைப் போல மற்றவர்களையும் சொல்ல முடியாது. ஆனால், நீங்களே கூறியிருக்கிறீர்கள். ஜகஜீவன்ராமை போன்ற அரிஜன் ஒருவர் பிரதமராக வர

1979 அக்டோபர் 29] [திரு. என். சங்கரய்யா]

வேண்டுமென்பது தி. மு. க.வினுடைய இலட்சியம் என்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். அப்படியானால் அவர்களுடைய கை மேலோங்கும்போது நீங்கள் ஜகஜீவன்ராமை ஆதரிக்கமாட்டீர்கள் என்பது என்ன நிச்சயம் ?

திரு. மு. கருணாநிதி : அடிக்கடி நிறம் மாற்றிக்கொள்கிற கம்யூனிஸ்ட் கட்சியல்ல, திராவிட முன்னேற்றக் கழகம்.

திரு. என். சங்கரய்யா : கம்யூனிஸ்ட் கட்சி நிறம் மாறாத பூக்கள். ஆனால் நீங்கள்தான் முன்பு இங்கே இருக்கிறவர்கள் இந்திரா காந்திக்கு வேலை செய்கின்ற அடிமையாக இருக்கிறார்கள் என்று சொன்னீர்கள். ஆனால் இன்றைக்கு இந்திரா காந்திக்கு சேவை செய்கின்ற புதிய அடிமைகளாக நீங்கள் போய் சேர்ந்திருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(திரு. கு. ரமணி எழுந்தார்.)

திரு. க. சுப்பு : நான் ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது). அரசியலுக்கு உள்ளே நான் போகவில்லை ; ஒரு கருத்தை மட்டும் சொல்லிவிடுகிறேன் ..... (திரு. கு. ரமணி அழைக்கப்பட்டார்).

திரு. கு. ரமணி : மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய காரியதரிசி பாலசுப்பிரமணியம் அவர்கள் அகில இந்திய அண்ணா தி. மு. க. அரசினுடைய முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்களிடம் பேசிய நேரத்தில் எங்களுடைய கொள்கையையும் கோரிக்கைகளையும் வலியுறுத்திச் சொன்னார்கள். அப்போது மதுவிலக்குச் சட்டத்தினால் ஏற்பட்ட கொடுமையை எடுத்துச் சொல்லி, அதனால், பலன் இல்லை என்று சொன்னார்கள். அந்தக் கருத்தை ஏற்று, குடித்தவர்கள் எல்லாம், அவர்கள் மீது கேஸ் இருந்தாலும் குடித்தார் என்ற குற்றத்திற்காகப் போடப்பட்ட வழக்குகளை வாபஸ் வாங்குகிறோம் என்று உறுதியளித்து, அவர்களை விடுதலை செய்வதாய் கூறினார்கள். அதைத்தான் எங்கள் கட்சியின் காரியதரிசி வரவேற்றுச் சொன்னார். அப்படிச் சொன்னதற்கு எம். ஜி. ஆரின் ஏஜெண்ட் என்று சுப்பு குறிப்பிடுகிறார். எங்களுடைய கருத்தை ஏற்றுக் கொண்டதால் அதை நாங்கள் வெளியில் தெரிவித்ததற்கு ஏஜெண்ட் என்று சொன்னால், நீங்கள் செய்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் உங்களை ஏஜெண்ட் என்று நான் சொல்ல முடியும். அது அழிவுத் தன்மையுடைய விமரிசனமே தவிர ஆக்கப்பூர்வமான விமரிசனம் அல்ல,

[திரு. கு. ரமணி] [1979 அக்டோபர் 29

அடுத்தபடியாக, அவர்கள் சொன்னார்கள்.

Pretenders of Marxism

நாங்கள் உண்மையான மார்க்சிஸ்ட் அல்ல ; மார்க்சிஸ்ட் வேடதாரிகள் என்று சொன்னார்கள். நான் மிகுந்த பரிதாபத்தோடும் வேதனையோடும் சொல்கிறேன். ஒரு காலத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் அங்கத்தினராக இருந்து மார்க்சித்தையும், லெனினிசத்தையும் எந்த அளவுக்கு சுப்பு கற்றார் ; எந்த அளவுக்கு அவருக்கு பயிற்சி அளித்தார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அந்த மார்க்சிசத்தையும், லெனினிசத்தையும் இதயத்தில் ஏற்று, அவரால் நிலைத்து நிற்க முடியவில்லை. ஆகவே தான்,

Comrade Thiru S bb has deserted Marxism and Leninism and surenderd to Mataal m and Maxal the ry.

இதுதான் இன்றைக்கு நாட்டிலே நடந்து கொண்டிருக்கிறது ; அவர் திரும்ப சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மார்க்சிஸ்ட் கட்சியில் எந்த ஒரு நபரும், கட்சியின் தலைமையை ஏற்றுக்கொண்டு.....

திரு. க. சுப்பு : ஆன் ஏ பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷன், பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னதாக அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். அது தப்பு. நான் சொன்னது என்ன வென்றால் Ideological pretenders of marxist party என்று சுரேந்திரமோகன் அவர்கள், ஜனதா கட்சியின் செயலாளர் சொல்லிவிட்டார். அவர்கள் தெரிவித்ததைச் சொன்னேன். நிறம் மாறாத பூக்களாக இருங்கள், ஆனால் சிவப்பு ரோஜாவாக மாறாதீர்கள்.

திரு. எஸ். சங்காயியா : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டிலே யார் மாறிக் கொண்டு வருகிறார்கள் என்பதைத் தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். ஆசவே, மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரையில் இந்திரா சாந்தியின் யதேச்சாதிகாரச் சொல்கையை எதிர்க்கின்ற வகையில், அதை மையமாகக் கொண்டு அரசியலை நடத்திக்கொண்டு வருகிறோம் என்ற யதார்த்த உண்மையை இன்றைய அரசியலில் பார்க்க முடியும். அந்த சர்வாதிகார ஆட்சி மீண்டும் ஏற்படாமல் இருப்பதற்கு, அதை எதிர்ப்பதற்குக் கான் எல்லா ஜனநாயக சக்திகளும் ஒன்று ஒன்று சேர்ந்திருக்கிறோம். ஆனால் அவருக்குக் கிண்டலும், கேலியும் ஆக இருக்கிறது. அதனால் உண்மையை மறைக்க முடியுமா ? தஞ்சாவூர் தேர்தலில் கருணாநிதி அவர்களுடன் சேர்ந்து இந்திரா சாந்திக்கு எதிராகப் போராடினோம். ஆனால், இன்றைய தினம் தி. மு. க. இந்திரா சாந்தி அவர்களுக்கு வேலை செய்யப்போகிறது என்றால், அதன் பொருள் என்ன ?

1979 அக்டோபர் 29]

திரு. கு. ரமணி : சுப்பு அவர்கள் சொல்லிய பிரிட்டண்டர்ஸ் ஆப் மாக்சிஸ்ட ஐடியாலஜி என்றால் கூட மார்க்சிஸம், லெனினிஸம் என்றால் என்ன ?

What is the meaning of marxist ideology. The ideal adopted by marxist party. That is the ide logy of marxism, leninism

உங்களால் விளக்கம் கொடுக்க முடியாது. ஒரு கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்து வெளியேறிய ஒருவருக்கு மார்க்கிஸத்தைப் பற்றி எப்படி தெரியும். அதோடு வேறு ஒரு கட்சிக்கு சென்று விட்ட நீங்கள் அங்கிருந்து எப்படி மார்க்சிஸம் பேச முடியும்

(திரு. சி. ஆறுமுகம் நிற்கிறார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ரமணி அவர்கள் திரு. சுபபு அவாகளுக்குத்தாலை பதில் சொல்கிறார். தாங்கள் எழுந்து நிற்க வேண்டாம். உட்காருங்கள்.

திரு. கு. ரமணி : அது எப்படி இருக்கிறது என்றால், சைதாந்தாலை வேதம ஓதுவது போல இருக்கிறது. (குறுக்கீடு)

திரு. பி. ராஜசிறிப்பத்தன் (அமைச்சரின் பேரவைச் செயலர்): நண்பா ரமணி அவாகளை ஓர் உதாரணம் சொன்னார். என் காதில் விழவில்லை. அதை மறுபடியும் அவர்கள் சொல்வாரா?

திரு. சு. சுப்பு : தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கட்சியைப் பற்றிச் சொல்கிறீர்கள். தி. மு. க. தான் உண்மையிலேயே கம்யூனிஸ்ட் கட்சி என்று அண்ணா அவர்கள் சொல்லியிருக்கிறார். கம்யூனிஸ்ட், மார்க்கிஸ்ட் ஐடியாலிஜி என்பது ஒரு கட்சிக்கும் சொந்தமானது அல்ல. அது எல்லோருக்கும் பொதுவான ஒரு மறை. ஒரு வேத புத்தகம் அல்ல. That is an omnipotent policy.

திரு கு. ரமணி: சுப்பு அவர்கள் அதற்கு ஒரு புரோகிதர் அல்ல. இப்படிச் சொல்வது சைத்தான் வேதம் ஓதுவது போலத்தான். மார்க்சிஸ்ட், கம்யூனிஸ்ட் கொள்கை என்பது உலகம் முழுவதும் இருக்கிற ஒன்று. நீங்கள் வேறு கட்சியிலிருந்து கம்யூனிஸம் பற்றி பேசுவது என்பது உண்மையிலேயே ஏற்றுக்கொள்வதற்கில்லை. நீங்கள் பேசும் அந்த தத்துவத்தை நாங்கள் ஏற்றுக்கொள்வதற்கில்லை. கம்யூனிஸ்ட் கட்சித்தான் அதை நடைமுறைக்குக் கொண்டு வரமுடியும். அதாவது தத்துவம் ஒன்று கட்சி வேறொன்று ஆக முடியாது. Practice and theory combined it scientific socialism.

(திரு. சி. ஆறுமுகம் நிற்கிறார்.)

[திரு. கு. ரமணி] [1979 அக்டோபர் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ரமணி அவர்கள் திரு சுப்பு அவர்களுக்குப் பதில் சொல்கிறார். தங்களுக்குப் பதில் சொல்லவில்லை. தாங்கள் அமருங்கள்.

[பிற்பகல் 1-00.]

திரு. கு. ரமணி: கம்யூனிஸம் என்பது கடைச் சரக்கல்ல. தின்று விட்டு வாந்து எடுத்த சரக்கு அல்ல. உலகத்திலுள்ள அத்தனை தத்துவங்களுக்கும் மீறி நிற்கிற ஒரே தத்துவம் மார்க்ஸால் உருவாக்கப்பட்ட கம்யூனிஸம் ''ஸயன்டிபிக் சோஷலிஸம்''. இதுதான் இன்று உலகத்தை இரண்டு முகாம்களாக ஏற்படுத்தியிருக்கிறது. இன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்சிஸ்ட் கட்சியும் சேர்ந்து இரண்டு கட்சிகளும் சேர்ந்துதான் நடக்க இருக்கிற பாராளுமன்ற தேர்தலில் இந்தியாவினுடைய தலைவிதியை மற்ற ஜனநாயகக் கட்சிகளுடன் சேர்ந்து நிர்ணயிக்கப் போகிறார்கள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ளட்டும்.

*திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின சார்பில் எனது கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்கம் கடந்த காலத்தில் எந்தத் தவறுகளைச் செய்திருக்கிறது என்பதை இன்று எடுத்து, இடித்துக் காட்டக்கூடிய நிலையில் கம்யூனிஸ்ட் கட்சி இருந்து கொண்டிருக்கிறது என்பதை உங்கள் முன்னால் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். பஞ்சாயத்துத் தேர்தல்கள் சம்பந்தமாக பல தடவை மதிப் பிற்குரிய அமைச்சர் அவர்கள் இந்தச் சபையில் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். முதல் பட்ஜட்டில், நிச்சயமாக இந்த ஆண்டு கொண்டு வந்துவிடுவோம் என்று சொன்னார்கள். அதற்குப் பிறகு இரண்டாவது பட்ஜட்டின்போது, நான் கேட்ட கேள்விக்கு நிச்சயமாக இந்தத் தடவை கொண்டுவந்துவிடுவோம் என்று சொன்னார்கள். மூன்றாவதாக, கடந்த ஒரு சில மாதங்களுக்கு முன்னால் நேரடியாக உட்கார்ந்திருக்கும்போது இரண்டு தடவை சட்டசபையில் கொண்டுவந்துவிடுகிறோம் என்று சொல்லி பொய் சொல்லி விட்டீர்கள், ஆகவே இந்த தடவையாவது பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்துவீர்களா என்று நேரடியாகக் கேட்டேன். உடனடியாக அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். நடத்துவோம் நவம்பர் மாதத்தில் என்று. தேதியைச் சொல்லமுடியுமா என்று கேட்டேன். அமைச்சர் அவர்கள் அதற்கு, முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு தேதி சொல்கிறேன் என்று எழுந்து போனார்கள். முதல் அமைச்சரைச் சந்தித்துப்பேசினார்கள். வந்து சும்மா உட்கார்ந்து விட்டார்கள். நவம்பர் மாதத்தில் நிச்சயமாக தேர்தல்கள் நடைபெறும் என்று

1979 அக்டோபர் 29] *[திரு. செ. சிவசாமி]*

இந்தச் சபையில் வாக்குறுதி கொடுத்தார்கள். ஆனால் நடந்தது என்ன? கருப்பண்ணசாமிக்கு கிடா காவு கொடுப்பது போல் தேர்தல் நடத்துவது என்பதை கொன்று குவித்துவிட்டார்கள். எதற்காகப் பஞ்சாயத்துக்களைக் கலைக்க வேண்டும்? பஞ்சாயத்து என்ற அமைப்புத்தான் நாடு முழுவதும் இருந்து கொண்டிருந்தது ஜனநாயக அமைப்பாக. அவற்றின் மூலம் கிராமங்களிலுள்ள சாதாரண மக்கள், சாதாரண விவசாய மக்கள். ஏழை எளிய மக்கள், இவர்கள் பிரதிநிதித்துவப் படுத்தப்படக்கூடிய ஒரு நிலைமை இருந்தது. அப்படிப்பட்ட ஒரு அமைப்பை, பஞ்சாயத்துக்களை ஒரேடியாகக் கொன்று குவித்துவிட்டார்கள். காரணம் என்னவென்று தெரியவில்லை. சொல்லப்படுகிற காரணம் ஒரு சில பஞ்சாயத்துக்களில் தவறுகள் நடந்துவிட்டன என்று சொல்கிறார்கள். 12,300 பஞ்சாயத்துக்கள் இருக்கும்போது ஒன்றிரண்டு இடங்களில் தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். அதற்காக நாடு முழுவதிலுமுள்ள எல்லாப் பஞ்சாயத்துக்களையும் கலைத்து விடுவதா? அதை கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாகக் கண்டிற்கிறது. பஞ்சாயத்துக்களைக் கலைத்திருப்பதன் காரணமாக நாட்டில் பெரிய எழுச்சி ஏற்பட்டிருக்கிறது, பெரிய எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. நாட்டிலுள்ள விவசாய மக்களிடையே ஒரு கொந்தளிப்பு ஏற்பட்டிருக்கிறது. அடுத்தபடியாக இன்று போலீஸ்காரர்கள் தரப்பிலிருந்து சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்தச் சிறிய கோரிக்கைகளைக் கூட இந்த அரசு நிறைவேற்றவில்லை. முதலில் சங்கம் அமைத்துக் கொள்ள அனுமதி கொடுத்துவிட்டோம். அனுமதி கொடுத்து விட்டு பின்னர் யாரை தலைவராக வைத்தால் உங்களுக்கென்ன? பெரும்பான்மையினர் யாரை தலைவராக வைக்க விரும்புகிறார்களோ, அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் தலைவராக இருப்பதில் உங்களுக்கு என்ன கஷ்டம்? அதைக் கூட நீங்கள் அனுமதிக்கவில்லை. அதன் காரணமாக இன்று நாடு பூராவும் பெரிய எழுச்சி ஏற்பட்டிருக்கிறது. தொழிலாளர் வர்க்கமானாலும் சரி அல்லது மாணவர் வர்க்கமானாலும் சரி அல்லது ஆசிரியர் வர்க்கமானாலும் சரி எல்லா வர்க்கத்தினரிடமிருந்தும் இன்று தமிழ்நாடு முழுவதும் மிகப் பெரிய எதிர்ப்பு ஏற்பட்டிருக்கிறது. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற முறையிலே, வேண்டியவர்களுக்கு செய்வது வேண்டாதவர்களுக்கு செய்வதில்லை என்ற நிலை இருக்கிறது. கானாடுகாத்தான் பஞ்சாயத்தை எடுத்துக்கொள்ளுங்கள். திடீரென்று அதை மூன்றாகப் பிரித்திருக்கிறார்கள். ஹரிஜனங்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் இருக்கும் பகுதியை ஒரு பகுதியாகப் பிரித்திருக்கிறார்கள். அதில் 1,100 பேர்கள் உள்ளனர். 12,000 உள்ளதாக இன்னொன்றை பிரித்திருக்கிறார்கள். ஜாதி அடிப்படையில் இன்று பஞ்சாயத்துக்கள் பிரிக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. வருமானம் இல்லாத வகையில், பஞ்சாயத்துக்கள் இயங்க முடியாத நிலையில் உள்ள

[திரு. செ. சிவசாமி] [1979 அக்டோபர் 29

பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன், போகாலூரை எடுத்துக்கொண்டால் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டு களாக அதைப் பிரிக்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால், அது பிரிக்கப்படவில்லை.

அதற்குப்பதிலாக. யார் வேண்டுமோ அந்த இடத்தில் பஞ்சா யத்துக்களைப் பிரிப்பது, வேண்டாதவர்கள் இருக்கும் இடமாக இருந்தால் பிரிப்பது இல்லை. இப்படி பல வருடமாக தள்ளிக் கொண்டே போகிறார்கள். தற்போது பஞ்சாயத்துக்களை கலைத்ததின் காரணமாக, மக்களுக்கு பஞ்சாயத்தில் லைட் போடவேண்டுமென்றால் யாரிடம்போய் சொல்லுவது என்று தெரியவில்லை புத்தகங்களைச் கொண்டு வந்து கொடுங்கள் என்று மட்டும் சொல்லுகிறார்கள், சேர்மென் இருந்தால் அவரிடம் போய் சொல்லமுடியும். இப்போது யாரிடம் போய் சொல்லுவது என்று தெரியாமல் இருக்கிறது. அரிசனங்களுக்கு வீடுகள் கட்டவேண்டுமென்றால் யாரிடம் போய் கேட்பது என்று தெரியவில்லை. வீட்டுமனை பட்டா வேண்டு மென்றால் யாரிடம் போய் கேட்பது என்று தெரியவில்லை. ரோடு பழுது பார்க்கவேண்டும், குடிதண்ணீர் வசதி வேண்டும். கூழாய் ரிப்பேர் ஆகிவிட்டால் யாரிடம் போய் சொல்வது என்று தெரியாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். பி.டி.ஓ. விடம் போய் சொன்னால அங்கங்கே இருக்கின்ற பஞ்சாயத்து ஊழியர்களிடம் போய் சொல்லுங்கள் என்று சொல்லு கிறார்கள். இப்படியெல்லாம் சொல்லிப் பார்த்தும் எந்தவிதமான வேலையும் நடைபெறவில்லை. ஜனங்களுக்கு வேண்டிய தேவைகளை நிறைவேற்றுவதற்கு வேண்டிய எந்த விதமான அமைப்பும் இல்லாத நிலைமைதான் இருந்து கொண்டிருக்கிறது.

இளையான்குடிக்கு தண்ணீர் வேண்டுமென்று மூன்று வருடங் களாக சொல்லிக் கொண்டிருக்கிறேன். மதிப்பிற்குரிய குடிநீர் வடிகால் அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு திட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். கடைசியில் பார்த்தால் டெபராகிவிட்டது என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் திட்டம் போட்டிருப்பதாகவும், கடைசியில் டெபராகிவிட்டது. டெபராகி விட்டது என்று தான் மூன்று ஆண்டுகளாக சொல்லிக் கொண் டிருக்கிறார்கள். அங்கேயுள்ள 33 ஆயிரம் ஜனங்களுக்கு குடி தண்ணீர் இல்லாத ஒரு நிலைமை தான் இன்னும் இருந்து கொண் டிருக்கிறது. ஒரு சில வாரங்களுக்கு முன்பு முதல்வர் அவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்ற நேரத்தில், நானும் இருந்தேன், 42 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் இருப்பதாக சொன்னார் கள். இப்படி மூன்று வருடங்களாக சொல்லிக் கொண்டிருக்கி றார்கள். அது என்ன ஆயிற்று என்று கேட்கும்போது, டெப ராகிவிட்டது என்ற நிலை தான் ஏற்பட்டிருக்கிறது.

1979 அக்டோபர் 29] [திரு. செ. சிவசாமி]

இன்றைக்கு தமிழகம் முழுவதும் அரசாங்கத்திற்கு மிகவும் எதிர்ப்பு வந்திருக்கிறது எனபதை சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன். போலீஸ் துறையை எடுத்துக் கொண்டால், அவர் கள் நியாயமான அளவில் எங்களுக்கு சங்கம் அமைக்க அங்கீகாரம் வேண்டும் என்ற கோரிக்கையையும நிபந்தனையற்ற முறையில், கைது செய்யபபட்டிருக்கின்ற போலிஸ்காரர்களை விடுதலை செய்ய வேண்டும், அவர்களை எல்லாம் விடுதலை செய்வதோடு நயினார்தாசை விடுதலை செய்ய வேண்டும், அதோடு ஜெயிலில் என்ன நடைபெற்று எனபதை தெரிந்து கொள்வதற்காக அவரை விடுதலை செய்வது நல்லது. அதன் மூலம் உண்மையை தெரிந்து கொள்ள அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். அத்துடன் நயினார் தாசை விடுதலை செய்து அவர்கள் கேட்கின்ற சங்கத்திற்கு உரிமை வழங்க வேண்டும்.

அதுமட்டுமல்ல, ஒரு போலிஸ் ஆபிசர் வீட்டில் வேலை செய் வதற்கு 32 ஆர்டர்லிகள்— ஊழியர்களாக காத்துக் கொண்டிருக் கிறார்கள். இந்த நிலைமை மாற வேண்டும். இப்படிப்பட்ட நிலைமை மாறறப்படும் என்று முன்பு சொல்லப்பட்டது. நமது முதல்வர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். நிச்சயமாக ஆர்டர்லி என்ற நிலைமையை மாற்றுவேன் என்று சொன்னார் கள். இன்று இரண்டு பட்ஜெட் நடந்து மூன்றாவது பட்ஜெட்டும் நடந்து முடிந்துவிட்டது. இப்போதாவது அந்த ஆர்டர்லி முறையை மாறற வேண்டும். போலிஸ்காரர்களுடைய நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள வேண்டும். சங்கம் அமைக்கும் உரிமையை கொடுக்க வேண்டும், ஆர்டர்லி முறையை மாற்ற வேண்டும். இவற்றையெல்லாம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தவரையில், ஏற்கனவே, நான் தீர் மானம் கொடுத்திருக்கிறேன். கிழக்கு ராமநாதபுரத்தில் இன்று வரைக்கும் மழை கிடையாது. கடன் கிடையாது என்று அமைச்சர் அவர்களே சொல்லிவிட்டார்கள். கிழக்கு ராமநாதபுரம் என்றால் கொடுத்த கடன் திரும்பி வராதே ஆகவே கடன் வழங்க மாட்டேன் என்று அமைச்சர் அவர்கள் சொல்லிவிட்டார்கள். அப்படிப் பட்ட பகுதியில் மழை கிடையாது, தண்ணீர் கிடையாது. அங்கே நிலத்தில் வீசிய விதையெல்லாம் இன்னும் முளைக்க வில்லை. சொஸைட்டி மூலமாக கடன் கேட்டாலும் வழங்கப் படுவதில்லை. ஏற்கனவே யுள்ள கடனுக்கு மெம்பர்களிடத்தில் நூற்றுக் கணக்கான பேர்களிடம் ஜப்தி வசூல் செய்து கொண் டிருக்கிறார்கள்.

[பிற்பகல் 1—10]

கூட்டுறவுக்கடனை வசூல் செய்வதற்கு ஜப்தி செய்வது நியாயம் தானா ? சரி தானா ? நாடு சுதந்திரம் அடைந்து 32 ஆண்டு களுக்கு பிறகுகூட, சாதாரண விவசாயிகள் வீட்டிலே நுழைந்து

[திரு. செ. சிவசாமி] [1979 அக்டோபர் 29

ஜப்தி செய்கின்ற கொள்கை நியாயம் தானா ? கடந்த காலத்திலே, ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, தேர்தலிலே இந்த நாட்டிலே இருக்கக்கூடிய விவசாய மக்களுக்கு, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய 100-க்கு 80 சதவீத மக்களுக்கு, அவர்களுக்கு இருக்கும் கடனைப் போக்கவும், அவர்கள் கடனைத் திருப்பி செலுத்தாத அளவுக்கு ஏற்பாடு செய்வதாகவும், ஜப்தி செய்ய மாட்டோம் என்றும் வாக்குறுதி கொடுக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு நிலைமை என்ன ? அவர்கள் வீடுகளில் நுழைந்து, சாமான்கள் ஜப்தி செய்யப்படுகின்றது.

இதற்கு பல உதாரணங்கள் சொல்ல முடியும். குறிப்பாக கிழக்கு இராமநாதபுரத்தில் உள்ள விவசாயிகள் வறட்சியால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதை நேரடியாக பார்த்து விட்டு வந்த பிறகும், அங்கு ஜப்தி நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது. மதிப்பிற்குரிய எஸ். டீ. எஸ். அவர்கள் ஜப்தி நடவடிக்கை எடுக்க மாட்டோம் என்று சொல்லுகிறார்கள். கூட்டத்திலும் சொன்னார்கள்; நேரடியாகவும் சொன்னார்கள் ; பத்திரிகையிலேயும் பார்க்கிறோம். ஆனால், உண்மை நிலைமை என்ன ? அதேபோல், மதிப்பிற்குரிய இராகவானந்தம் அவர்கள் நாங்கள் சொல்லக்கூடியவைகள் எல்லாம், எங்கள் வாயிலிருந்து வரக்கூடிய வார்த்தைகள் எல்லாம் சட்டம் ; அவைகள் எல்லாம் அரசாங்கத்தின் ஜி. ஓ. என்றார்கள். ஆனால், அப்படி ஜி. ஓ. வும் வரவில்லை, சட்டமும் வரவில்லை. அதற்குப் பதிலாக நேரடியான ஆபத்து தான் வந்து கொண்டிருக்கிறது.

சர்வ சாதாரண ஏழை எளிய விவசாய மக்களிடம் ஜப்தி நடவடிக்கையை கடுமைப்படுத்தி, வசூலிக்கின்ற அளவுக்குத் தான் இன்றைக்கு நிலைமை போய்க் கொண்டிருக்கிறது. கூட்டுறவு சங்கங்கள் கடனை ஜப்தி நடவடிக்கை மூலம் தான் வசூலிக்கின்ற நிலைமை இன்றைக்கு நாட்டிலே இருக்கின்றது. மத்தியப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களில் இப்படி வறட்சியால் பாதிக்கப்பட்டால் என்ன நடவடிக்கை எடுக்கப்படுகின்றதோ, அந்த நடவடிக்கையை நீங்களும் எடுக்க ஏற்பாடு செய்யவேண்டும். அது மட்டுமல்ல, ஒரு கமிட்டியின் ரிப்போர்ட்டிலே சொல்லப்பட்டிருக்கிறது. அந்த கமிட்டியின் ரிப்போர்ட்டிலே, இப்படி ஒரு மாநிலத்தில் நஷ்டம் வருகின்றது என்று சொன்னால், அந்த சொசைட்டிக்கு வரக்கூடிய நஷ்டத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா ரிப்போர்ட்டிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை ஏன் அமுலுக்கு கொண்டு வரக்கூடாது ? எனவே, விவசாயிகள் மேல் அக்கறை உள்ள அரசு என்று சொல்லக்கூடியவர்கள், இதற்கான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு இருக்கக்கூடிய கைத்தறி நிலமையைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கைத்தறி அமைச்சர் அவர்கள்கூட நேற்றைக்கு

1979 அக்டோபர் 29] [திரு. செ. சிவசாமி]

முன்தினம், இன்றைக்கு இந்த நாட்டிலே எந்த இடத்திலும் தேக்கம். கிடையாது என்று சொன்னார்கள். இதை அவர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் சொன்னார்கள் ; நேற்றைக்கு முன்தினம் இங்கே பதில் சொல்லும்போதும் சொன்னார்கள். அதே சமயத்தில் 50 சதவீதம் ரிபேட் கொடுத்து, அந்தத் துணிகளையெல்லாம் அங்கே உள்ள ஊழியர்களே எடுத்துக் கொண்டார்கள் என்றும் சொன்னார்கள். ஏன் ரிபேட் கொடுக்கப்பட்டது ? தேக்கம் அதிகம் ஏற்பட்டிருக்கிறது. ஆனால் இன்னொரு இடத்திலே தேக்கம் இல்லை என்று சொல்லுகிறார்கள்.....

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, 50 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடி கொடுக்கப்பட்டது 2, 3 ஆண்டுகளாக விற்பனை ஆகாமல் தேங்கிக் கிடந்தவைகளை ஒரிடத்திற்குக் கொண்டுவந்து, அந்தத் துணிகளுக்குமட்டும் 50 சதவீதம் சிறப்புத் தள்ளுபடி கொடுக்கப்பட்டதே தவிர, மற்றத் துணிகளுக்கு அல்ல. இப்போது தயாராகும் துணிகளுக்கு தேக்கம் இல்லை என்பதை இப்போது என்னால் உறுதியாக சொல்ல முடியும்.

திரு. செ. சிவசாமி : எப்படியோ தேக்கம் என்று ஒப்புக் கொண்டார்கள். இதைப்போல் இன்னும் ஆகிரியர்கள் பிரச்சினை இருக்கிறது. மொத்தத்தில் எடுத்துக்கொண்டு பார்த்தால், ஆசிரியர்கள் கிளர்ச்சி, விவசாயிகள் கிளர்ச்சி நடந்து கொண்டிருக்கிறது. எங்கு பார்த்தாலும் கூட்டுறவு சங்கங்களின் ஜப்தி நடவடிக்கை நடந்து கொண்டிருக்கிறது. பல தடவை சொல்லியிருக்கிறோம். கூட்டுறவுத் துறைக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் தேர்தலைக் கொண்டுவருவது நல்லது என்று, இது ஜனநாயக பண்பாடாகவும் இருக்கும் என்றும் சொல்லியிருக்கிறோம். அதற்குப் பதில் சொல்லும்போது, ஏற்றுக்கொண்டு, பிறகு நிலைமை என்னவென்று பார்த்தால், இன்றைக்கு கூட்டுறவு துறையிலே மொத்தத்தில் இந்த ஸ்பெஷல் ஆபீசர்கள்தான் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதேபோல், பஞ்சாயத்துக்களிலும் இந்த ஸ்பெஷல் ஆபீசர்கள்தான் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

ஜப்தி நடவடிக்கை காரணமாக நூற்றுக்கு 80 சதவிகிதமாக உள்ள விவசாய மக்களை வெளியேற்ற நினைக்கிறார்கள். அதனால் நாட்டுமக்கள் உங்களை ஜப்தி செய்யக்கூடிய நிலைமை ஏற்படும். நாட்டு மக்களுக்கு மெஜாரிடியாக உள்ள விவசாய மக்களுக்கு விரோதமான கொள்கைகளை அனுஷ்டிப்பதன் காரணமாக உங்கள் மீதே நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலைமை ஏற்படும். அந்த நிலைமையிலிருந்து உங்களை நீங்கள் காப்பாற்றிக் கொள்ள முடியாது.

[திரு. செ. சிவசாமி] [1979 அக்டோபர் 29

கல்வி சம்பந்தமாக எடுத்துக் கொண்டால் பல பள்ளிகள் கட்டிடங்கள் இல்லாமல் இருந்து கொண்டிருக்கின்றன. ஆர். எஸ். மங்கலம் பகுதியில் கட்டிடங்கள் பூர்த்தி செய்யப்படாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. உபகரணங்கள் கூட பள்ளிகளில் இல்லை. இரண்டாண்டுகளாக அந்த மாணவர்கள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். கிராமாந்திரத்தில் உள்ள மாணவர்கள் ஐந்து மைல் பத்து மைல் நடந்து சென்று படிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது.

தொழில் கொள்கையை எடுத்துக் கொண்டால், இராமநாதபுரம் ஜில்லாவில் சிமெண்ட் தொழிற்சாலை வேண்டும், சிவகங்கையில் கிராபைட் தொழிற்சாலை வேண்டும். இளையாங்குடியில் தீப்பெட்டித் தொழிற்சாலை வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். தீப்பெட்டித் தொழிற்சாலையில் இராமநாதபுரம் ஜில்லாவுக்கு முதலிடம் கொடுப்பதாகக் கூறியிருக்கிறார்கள். இளையாங்குடியில் மூன்று தீப்பெட்டித் தொழிற் சாலைக்கு ரிஜிஸ்டர் செய்யப்பட்டு மூன்று மாதம் ஆகியும் தொழிற்சாலை வந்த பாடில்லை. இராமநாதபுரம் ஜில்லாவை அபிவிருத்தி செய்யும் தொழில்களை ஏற்படுத்த வேண்டுமென்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அவையின் முன்னர் மதிப்பிற்குரிய பேராசிரியர் அவர்களால் முன்மொழியப்பெற்ற கண்டனத் தீர்மானம் என்கிற பெயரில் அமைந்திருக்கும் தீர்மானத்திற்கு மாறுபட்டுரைக்கிற வகையில்—அதை எதிர்க்கின்ற வகையில் இருக்கிற சிலபல காரணகாரியங்களை எடுத்துச் சொல்ல அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் உங்களுடைய அனுமதியோடு முற்படுகிறேன்.

கண்டனத் தீர்மானங்கள் என்ற பெயரில் ஏறத்தாழ 23 தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருந்தும் பேராசியருடைய தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டு அதன்மீது பல்வேறு கட்சிகளைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் கருத்துக்களைத் தெரிவிக்கிறபோது ஒட்டு மொத்தமாக பேராசிரியர் அவர்கள் என்னென்ன காரணகாரியங்களை எடுத்துச் சொல்லி கண்டனத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்களோ அதை மறுப்புரைக்கிற வகையில் பல தலைவர்கள் கருத்துக்களை இங்கே எடுத்துச் சொன்னார்கள். அரசாங்கத்தின் அன்றாடப் பிரச்சினைகள் சிலபலவற்றை எதிர்கட்சி உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லி இதனால் எல்லாம் இந்த அரசாங்கத்தின் மீது கண்டனம் தெரிவிக்கிறோம் என்று தங்கள் கருத்தைச் சொன்னார்கள்.

1979 அக்டோபர் 29] [திரு. இரா. முத்தையா]

இந்த அரசாங்கத்தின் மீது அவர்கள் கண்டனத்தைத் தெரிவிக்கிறபோது நான் சென்ற வாரம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் எங்களுடைய மதுரை— முகவை மாவட்ட கிராமப் புறங்களில் எல்லாம் சுற்றுப் பயணம் செய்த நேரத்தில் அங்கே நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை எடுத்துச் சொல்லி இந்தக் கண்டனத் தீர்மானம் எந்த வகையிலே மக்களுடைய மனோ நிலையைப் பிரதிபலிக்கவில்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். புரட்சித் தலைவர் அவர்கள் நள்ளிரவு 12 மணியானாலும் சரி, அதிகாலை நான்கு மணியானாலும் சரி, கிராமப்புற மக்களைச் சந்தித்து வந்தார்கள். அவர் சென்ற இடத்தில் எல்லாம் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி நின்று புரட்சித் தலைவரை வரவேற்றார்கள். ஆண்களும் பெண்களும் வரவேற்றார்கள். புரட்சித் தலைவர் வண்டி சென்ற பிறகு பின்னால் நாங்கள் எல்லாம் செல்லுகிறபோது அந்த மக்கள் பேசிக் கொண்டிருந்ததை எங்களால் கேட்க முடிந்தது.

[பிற்பகல் 1-20]

புண்ணியவான் பல நல்ல திட்டங்களை நமக்காகச் செய்ய ஆசைப்படுகிறார் இந்த** போராட்டம் என்ற பெயரில் அவரைச் செய்யவிட மாட்டேன் என்கிறார்களே என்று கண்டனத் தீர்மானம் கொடுத்தவர்கள் மீதுதான் கண்டனம் தெரிவித்திருக்கிறார்களே தவிர இந்த ஆட்சியை கிராமப் புற மக்கள் கண்டனம் செய்யவில்லை. கண்டனத் தீர்மானம் கொடுத்தவர்களைத் தான் பொதுமக்கள் இன்றைக்குக் கண்டிக்கிறார்கள்.

திரு. எம். ஏ. லத்தீப் : அப்படியானால் கண்டனத் தீர்மானம் கொடுத்தவர்களை ** என்று சொல்கிறீர்களா ?

திரு. இரா. முத்தையா : கிராமப்புற மக்கள் சொல்வது இந்த** போராட்டம் என்ற பெயரால்.....

திரு. சி. ஆறுமுகம் : நாங்கள் போனபோது மக்கள் சொன்னது இந்த ** நாடே கெட்டுவிட்டது என்று சொன்னார்கள்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **என்ற சொல்லையும், ** என்ற சொல்லையும் நீக்கிவிடுவது நல்லது, அதை நீக்கும்படி உத்தரவிடுகிறேன்.

திரு. இரா முத்தையா : அந்த வகையில் நாட்டு மக்கள் எங்களுடைய புரட்சித் தலைவருடைய ஆட்சியை, புரட்சித் தலைவருடைய நிர்வாகத்தை இன்றைக்கு மனதாரப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள், வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[திரு. இரா. முத்தையா] [1979 அக்டோபர் 29

பதை எதிர்க்கட்சித் தலைவர் அண்மையிலே விடுத்த அறிக்கையின் வாயிலாக என்னால் சுட்டிக்காட்ட முடியும். அவர் தன்னுடைய இயக்க நண்பர்களை அழைத்து ஒரு அறிக்கை வாயிலாகச் சொல்கிற நேரத்திலே, நீ என்ன எல்லாம் சென்னையைப் போல் நினைத்துக்கொண்டிருக்கிறாயா ? தென் மாவட்டத்தில் இன்னும் பரிதாபத்திற்குரிய மக்கள் இருக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டுகிறார் என்றால் தென் மாவட்டத்தில் உள்ள கிராமப் புறத்து மக்கள் புரட்சித் தலைவரை ஆதரிக்கிறார்கள் என்று தான் அர்த்தம்; கிராமப் புறத்து மக்கள் புரட்சித் தலைவரின் அணியை விட்டுப் போய்விட்டார்கள் என்று யாரும் கருதிவிட முடியாது என்பதை ஆணித்தரமாக நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பேராசிரியர் அவர்களும் மற்றவர்களும் கண்டனத் தீர்மானத்தின் மீது பேசியபோது குறிப்பிட்டார்கள். ஆட்சியினுடைய தவறுகளைக் கண்டிப்பதற்கு தவறுகளைச் சுட்டிக்காட்டுவதற்காக தவறான அணுகுமுறையை நீர்தாட்சண்யம் இல்லாமல் கண்டிப்பதற்காக இந்தத் தீர்மானத்தைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். ஆனால் கொஞ்ச நேரத்திற்கு முன்னால் இந்த அவையே கவனித்தது. யார் நிறம் மாறாத பூக்கள், யார் கிகப்பு ரோஜாக்கள் என்ற பரிவர்த்தனைகள் எல்லாம் நடந்தன. யார் நிசை மாறிய பறவைகள் என்ற உண்மை புலனாயிற்று. அத்தகைய வாதப் பிரதிவாதங்கள் எல்லாம் இத்தக் கண்டனத் தீர்மானத்தின் மீது நடந்தன. கண்டனத் தீர்மானத்தின்மீது பேசிய திரு. சுப்பு அவர்கள் அடுத்த வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே என்று சொல்லவேண்டுமென்பதற்காக கஷ்டப்பட்டு எதையோ சொன்னார். அடுத்த வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே என்று சொல்வதற்கு அவ்வளவு கஷ்டப்பட வேண்டாம். திருவான்மியூரிலிருந்து நெய் வேலிவரையிலே ஆங்காங்கே உள்ள ஆயிரக்கணக்கான பைப்கள் கண் முன்னாலே எடுத்துக்காட்டுகளாக அடுத்த வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே என்பதற்கு எடுத்துக்காட்டாக திகழ்கின்றன. அந்த நிலைமையை மறந்துவிட்டு இந்த ஆட்சியிலே அடுத்த வீட்டு நெய்யே என் பெண்டாட்டி கையே என்ற முறையிலேயே செய்யப்படுகிறது என்று சுட்டிக் காட்டினார்கள். பேராசிரியர் ஒரு நிகழ்ச்சியைக் சுட்டிக் காட்டினார், அவரவர்கள் சட்டத்தைக் கையிலே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களோ பாராளுமன்ற உறுப்பினர்களோ அல்ல, ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்கள் சட்டத்தைத் தங்களுடைய கையிலே எடுத்துக் கொண்டு செயல்படுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள்.

பேராசிரியர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு ஒரு நிகழ்ச்சியை இப்பொழுது நான் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்குச் சட்டத்தைத் தங்கள் கையிலே ஆளும் கட்சிக்காரர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று கண்டனத் தீர்மானத்தின் மீது பேசுகின்ற

1979 அக்டோபர் 29] [திரு. இரா. முத்தையா]

பொழுது குறிப்பிடுகின்ற மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்களை 1972ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ஆம் தேதியைக் கொஞ்சம் நினைத்துப் பார்க்கக் கேட்டுக்கொள்கிறேன். அன்றைக்குப் பேராசிரியர் அவர்கள் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்களைக் கட்சியை விட்டு வெளியேற்றியபிறகு மதுரையில் நடந்த கொள்கை விளக்கக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள். அதில், ஒரு கட்சியில் தங்கள் மானசீகமான தலைவனை வெளியேற்றி விட்டார்களே என்று, ஆத்திரத்தைத் தெரிவிக்கும் ஒரு கூட்டம் பேராசிரியர் முன் வந்து, தங்கள் கட்சித் தலைவர் ஆயிற்றே என்ற உரிமையோடு எதிர்ப்புக் குரலைக் கிளப்புகிறார்கள். அப்பொழுது அந்தக் கூட்டத்தில் ஒலிபெருக்கியின்மூலம் அறிவிக்கப்படுகிறது, டோலீஸ்காரர்கள் எதுவும் செய்ய வேண்டாம், இங்கே சப்தம் போடுகின்றவர்களை, கோஷம் போடுகின்றவர்களைக் கவனிக்க வேண்டியவர்கள் கவனித்துக் கொள்வார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. உடனே அன்றைக்கு பரோல் கைதியாக இருந்த பன்னீர்செல்வம் என்ற பன்னீர், வெள்ளை முண்டாசு கட்டியவர் புரட்சித் தலைவர் வாழ்க என்று சொன்னவர்களை அரிவாளால் அறுக்கிறார். கத்தியால் குத்துகிறார், பிளேடால் தேய்க்கிறார். சட்டையைக் கிழித்தார், எங்களைப்போன்ற இளைஞர்களையெல்லாம் உதைக்கிறார். பேராசிரியர் அவர்கள் நம்முடைய தலைவர்களில் ஒருவர் ஆயிற்றே, நேர்மையான அமைச்சர் என்று இன்றைக்கு வரையிலும் நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோமே. அந்தப் பேராசிரியர் அவர்கள் இந்தக் காட்சியைக் கண்டிப்பார் என்று நாங்கள்கூட எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். பேராசிரியர் அவர்கள் பேச ஆரம்பிக்கிறார்கள். இங்கே சில்லரைத்தனம் செய்தவர்களை நம்முடைய நண்பர்கள் சிக்க வைத்துக் கொண்டார்கள். நம்முடைய நண்பர்கள் மத்தியிலே அவர்கள் சிக்கிக்கொண்டார்கள், நாம் அமைதியாக இங்கே கூட்டத்தை நடத்துவோம் என்று அன்றைக்குப் பேராசிரியர் அவர்கள், அன்றைக்கு நேர்மையான ஒரு அமைச்சராகத் திகழ்ந்தவர் என்று நாங்களெல்லாம் கருதிக் கொண்டிருந்த பேராசிரியர் அவர்கள், சட்டத்தின் ஆட்சி இருக்க வேண்டும், சட்டத்தை அவரவர்கள் தங்களுடைய கைகளிலே எடுத்துக்கொண்டிருக்கக்கூடாது என்று, இன்றைக்குச் சொல்கின்ற அதே பேராசிரியர் அவர்கள் அன்றைக்கு அப்படிச் சொல்கிறார்கள். அங்கே அப்படி என்ன கோஷம் போட்டார்கள்? புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். வாழ்க என்ற கோஷத்தைதான் போட்டார்கள். அப்படிக் கோஷம் போட்டவர்களை சில்லறைத்தனம் செய்தவர்கள் என்றும், நம்முடைய நண்பர்கள் மத்தியிலே வசமாகச் சிக்கிக் கொண்டு விட்டார்கள் என்றும் பேசுகிறார்கள். அவர்கள் பேசிய அந்த உரையைப் பேராசிரியர் அவர்களுக்கு இன்றைக்கு நான் நினைவுபடுத்தக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்கு அவரவர்கள் சட்டத்தைத் தங்கள் கைகளிலே எடுத்துக் கொண்டு விட்டார்கள் என்று சொல்லுகின்ற பேராசிரியர் அவர்களின் மேலான கவனத்திற்கு நான் இதைக் கொண்டு வருகிறேன்.

[திரு. இரா. முத்தையா] [1979 அக்டோபர் 29

அடுத்து ஒன்றைச் சொன்னார்கள். பிற்பட்டோர் நலனைப் பற்றிச் சொன்னார்கள். அதைப்பற்றிப் பலரும் பலவிதமாகச் சொன்னார்கள். பிற்பட்டோருக்கு இருந்த சலுகையை இன்றைக்கு இந்த அரசாங்கம் குறைத்து விட்டதா? பிற்பட்டோருக்கு இருந்த நலனில் இந்த அரசாங்கம் அக்கறை இல்லாமல் போய் விட்டதா? 31 விழுக்காடு என்று இருப்பதை 29 என்ற இந்த அரசாங்கம் குறைத்து விட்டதா? ஆக, ஒட்டு மொத்தமாக வைத்துக் கொண்டால்கூட, பொதுப்பட்டியலில் வருபவர்களைக் சேர்த்துக் கொண்டால் கூட இவ்வளவு காலம் வந்த பிற்பட்டோரை விட இன்றைக்குக் குறைந்துவிட்டதா? பின் இந்த ஆட்சியின் தவறான அணுகுமுறை கண்டனத்திற்குரியது என்று எந்த அடிப்படையில் சொல்கிறீர்கள்? பிற்பட்டோர் சமுதாயத்திற்குள்ளேயே இருக்கக்கூடியவர்கள் 9,000 ரூபாய்க்கு மேலே வருமானம் உள்ளவர்கள் கொஞ்சம் வசதியோடு இருக்கிறார்கள். 9,000 ரூபாய்க்குக் கீழே இருப்பவர்கள் இன்னும் அல்லல்படுகிறார்கள், தொல்லைப் படுகிறார்கள். அவர்களுடைய நலனைப் பற்றி அக்கறைப்படுவதற்கு, அவர்களுடைய நலனுக்காக ஏதாவது காரியம் செய்வதற்கு இந்த அரசாங்கத்தில் இருக்கின்ற சட்ட திட்டங்களுக்குள்ளேயே எதுவும் செய்ய முடியவில்லையே என்பதற்காகப் புரட்சித் தலைவர் அவர்கள், இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்கின்ற நேரத்தில் என்ன சொல்லி உள்ளே நுழைந்தார்களோ, கட்டை வண்டி இருக்கக்கூடியவர்கள் என்று இருப்பவர்களும், கட்டிட வேலை செய்பவர்கள் என்று இருக்கக்கூடியவர்களும் ஆகிய இப்படிப்பட்ட அமைப்புகள் இல்லாத தொழிலாளர்களின் நலனில் அக்கறை கொண்டிருக்கிறேன் என்று சொல்லி வந்தார்கள். அப்படிப்பட்ட அமைப்பு எதுவும் இல்லாமல், எந்தவிதமான வாய்ப்பு வசதிகளும் இல்லாமல் அல்லல்படும் தொழிலாளர்கள்பால் அக்கறை கொண்டு தொழிலாளர் பிரச்சினையை அணுகுகிறார்கள். அதுதானே தவிர பிற்பட்டோருக்கு இருக்கின்ற சலுகையின் சதவீதத்தைக்குறைத்து அதை எடுத்து இன்னொருவருக்குக் கொடுத்து எதாவது செய்திருக்கிறாரா ?

[பிற்பகல் 1-30]

ரூ. 9,000 வருமானத்திற்குக் குறைவாக இருப்பவர்களுக்கு 31 சதவீதம் என்று சொல்லி இருக்கிறார்கள். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. முத்தையா நாளை காலை 9 மணிக்கு தொடர்ந்து பேசுவார்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.